முக்தி தரும் முதுகுன்றம்

(விருத்தாசலம் என்கிற திருமுதுகுன்றத் தலபுராணம்)



தி. மீனாட்சிசுந்தரம்



கண்டராதித்தன் கோபுரம்

முக்தி தரும் முதுகுன்றம்

(விருத்தாசலம் என்கிற திருமுதுகுன்றத் தலபுராணம்)

தொகுப்பு நூல்

தி. மீனாட்சிசுந்தரம்

**79, அய்யனார் கோயில் தெரு,
விருத்தாசலம் - 606 001.**

அக்டோபர் - 2023

நூலின் பெயர்: முக்தி தரும் முதுகுன்றம்
(விருத்தாசலம் என்கிற திருமுதுகுன்றத் தலபுராணம்)

முதல் பதிப்பு : அக்டோபர் 2023
இரண்டாம் பதிப்பு : செப்டம்பர் 2024

நூலாக்கம் : தி. மீனாட்சிசுந்தரம்

விலை : ரூ.120/-

வெளியீடு : விருத்தாசலம் தெய்வத்திரு வி.எஸ். சோமசுந்தரம் பிள்ளை அவர்களின் வழித்தோன்றல்கள்,
அய்யனார் கோயில் தெரு, விருத்தாசலம்.

வடிவமைப்பு
மற்றும் அச்சு : *M.M. Graphics Fine Art Offset Printers, Sivakasi. Cell : 94433 60047*

நாள் : 17.07.2023

நூலாசிரியர் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் அவர்களை எனக்கு வழக்கறிஞர் காலத்திலிருந்து பழக்கம். வழக்கின் பொருண்மைகளை தெளிவாக எனக்கு எடுத்துரைப்பார். அதே அணுகுமுறையை இந்தப் புத்தகத்தை அவர் எழுதிய நேர்த்தியில் காண்கிறேன்.

இந்தியர்களாகிய நமக்கு எதிராக வைக்கப்படும் குற்றச்சாட்டு என்னவென்றால், நமக்கு ஆவணப்படுத்துதல் என்றாலே என்னவென்று தெரியாது. நமது கலாச்சார, நாகரீக, வரலாற்று ரீதியான எண்ணற்ற பொக்கிஷங்களை ஆவணப்படுத்தாதனால் இழந்துவிட்டோம். கால வெள்ளத்தில் இத்தகைய விசயங்கள் அடித்துப் போவதற்குமுன் நாம் தொகுக்க வேண்டியவற்றை ஆவணப்படுத்த வேண்டும். அடுத்த தலைமுறைக்கு நாம் செய்ய வேண்டிய பிரதான கடமையாக இதனை பார்க்கிறேன். நூலாசிரியர் இதனை செவ்வனே செய்துள்ளார்.

ராஜா ராவ் அழியாப் புகழ்பெற்ற எழுத்தாளர்களில் ஒருவர். அவர் எழுதிய "காந்தப்புரா" நாவலின் முன்னுரையில், 'நமது நாட்டின் ஒவ்வொரு பகுதியும் நமது இதிகாசங்களுடன், புராணங்களுடன் ஏதாவது ஒரு வகையில் சம்மந்தப்பட்டிருக்கும்; நமது பாட்டிமார்கள் அத்தல புராணங்களை நமக்கு மாலை வேளைகளில் நீண்ட கதையாக சொல்வார்கள்' என்று வரும். இவ்வரிகளை படித்ததிலிருந்து எனக்கு தல புராணங்கள் மீது தீராக்காதல் ஏற்பட்டுவிட்டது. இப்புத்தகத்தை நான் ரசித்ததற்கு இதுவும் ஒரு காரணம்.

இன்னொன்றையும் குறிப்பிட வேண்டும். தனது 70-வது வயதிலும் மனதை மேம்படுத்தக்கூடிய ஆன்மீக பொக்கிஷத்தை தந்துள்ள அவருக்கு நாம் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம். அவரை பாராட்டுவதில், வாழ்த்துவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இவ்வெளியீடு வெற்றி பெற இறைவனை பிரார்த்திக்கிறேன்.

நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன்,
சென்னை உயர்நீதிமன்றம்.

உ

அருட்பெருஞ்ஜோதி இராமலிங்கர் துணை அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

இராமலிங்க வள்ளலார் சர்வதேச தருமபரிபாலன் அறக்கட்டளை
நிறுவனர்: தவத்திரு. கோவை சிவப்பிரகாச சுவாமிகள்
மேட்டுக்குப்பம் PO நெய்வேலி வழி குறிஞ்சிப்பாடி TK கடலூர் DT

முயற்சிக்கு நல்வாழ்த்துக்கள்

மண்ணுலகம் முழுவதும் நீர் இருந்தாலும் அதை எடுக்க கிணறு (கீழ்நீர்) தேவைப்படுகின்றது. பசுவின் உடல் முழுவதும் பால் விரவி இருந்தாலும் அதை மடுவின் மூலம் பெறுவது போல அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய் உள்ள சிவபரம் பொருளை ஆலயத்தின் வழியாகத்தான் பெற வேண்டும். அதனால் தான் ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்றும் கோயில் இல்லாஊரில் குடியிருக்க வேண்டாம் என்றும் திருக்கோயில் இல்லாத ஊர் திரு என்னும் செல்வச்செழிப்பு இல்லாத ஊர் என்று நமது அருளாளர்கள் அருளியுள்ளார்கள். நாலுபேர் போன பாதையில் போ என்பார்கள் இதன் பொருள் உங்களுக்குத் தெரியும் இக்காலத்தில் பல நகரங்களில் சாலைகளுக்கு பல பெரியவர்களின் பெயர் வைத்துள்ளார்கள். டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை, காந்தி சாலை, காமராசர் சாலை, நேரு சாலை, அப்பர் சாலை இது போன்ற பலபெயர் உள்ளன. இது எதற்கு என்றால் அவர்கள் வாழ்ந்த பாதையிலே நாம் வாழ வேண்டும் என்பதற்காகத் தான். தமிழகத்தில் எத்தனையோ ஆலயங்கள் உள்ளன அவைகள் எல்லாவற்றையும் விட சிறப்பு மிக்கது திருமுதுகுன்றம் இதற்கு இணையான தலம் இதுதான் இதன் சிறப்பை பல ஆதாரங்கள் கொண்டு உண்மையை நிலைநாட்டி உள்ளார்கள் இந்த நூலின் சிறப்பு அளவு கூட உரைக்க முடியாது இத்தகைய ஆலயங்கள் தான் நம் தமிழ்நாட்டில் ஞானக்கலைப் பொங்கி உள்ளது.

நாடும் நகரமும் நற்றிருக்கோயிலும்
தேடித் திரிந்து சிவபெருமான் என்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடி நெஞ்சத்துக் கோயிலாய்க் கொள்வனே.

ஞானசம்பந்தரும் நாவுக்கரசரும் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் மாணிக்கவாசகரும் ஊர் ஊராக ஏன் போனார்கள் என்றால் எங்களைப் போல் தேடித்திரிந்து சிவபெருமானை கெட்டியாகப் பிடி மின் என்பதற்காகத் தான்.

விருத்தாசலத்தில் ஐந்து ஐந்தாக உள்ளதை மிக நல்ல முறையில் விளக்கி உள்ளார்கள் வெகுநாட்களாக எங்களுக்கு ஒரு சந்தேகம் இருந்தது தீர்த்தம் 5 அது தென்கிழக்கு மூலையில் ஒன்று தென்மேற்கு மூலையில் பிறிதொன்று வடகிழக்கு மூலையில் உள்ளது மற்றொன்று மூன்றாம் பிரகாரம் வன்னிமரத்துப் பிரகாரத்தில் உள்ளது மேலும் ஒன்று நித்தியானந்த கூபம் இத்துடன் நான்கு மேலும் ஒரு தீர்த்தக் குளத்தை காணோமே என்று சிந்தித்துக் கொண்டிருந்தோம் அது இந்த புத்தகத்தை படித்த பிறகு தான் மணிமுத்தாறு என தெளிவு பெற்றோம் எல்லாம் அறிந்தவரும் இல்லை ஏதும் அறியாதவரும் இல்லை விருத்தாசலம் தலத்தை பற்றிய விவரம் நிறைவாக உள்ளது. இம்மாதிரி இன்னும் பல தல வரலாறுகளை செய்து மக்களுக்கு பயன் படவேண்டும் என எம்சற்குருநாதர் திருவடிகளை நீள நினைந்து இறைஞ்சுகின்றோம்.

நின்று மலர்தூவி
இன்று முதுகுன்றை
நன்றும் எத்துவீர்க்கு
என்றும் இன்பமே.

31/1

அணிந்துரை

எங்கெங்கும் எல்லாவற்றிலும் என்றென்றும் நீக்கமற நிலை பெற்று விளங்கும் பரம்பொருளை அடியார்கள் கண்டு அவன் அருள் வேண்டி வழிபட உபாயமாக எழுந்தருளும் இடங்கள் அவனுடைய திருக்கோயில்கள். ஓர் ஊரும் ஓர் உருவமும் இல்லாதவனுக்கு இத்தலங்கள் தோறும் ஓர் உருவம் ஓர் நாமம் அவற்றுள்ளும் தேவாரம் திருவாசகம் நாலாயிர திவ்ய பிரபந்தம் பாடல்கள் பெற்ற தலங்கள் மிகச் சிறந்தவை.

……………… தேவு அகமாம்
மன்றம் அமர்ந்த வளம் போல் நிகழ்ந்த முது
குன்றம் அமர்ந்த அருட்கொள்கையே.

(தெய்வீக திருச்சபையின் அருள் வளம்போல் விளங்கும் திருமுதுகுன்றம் என்னும் திருத்தலத்தில் அமர்ந்த திரு அருள் நெறியே) என்று ராமலிங்க அடிகள் பாராட்டும் இத்தலத்தின் புராணத்தை "முக்தி தரும் முதுகுன்றம்" என்னும் இந்நூலில் விவரித்து ஆன்மீக ஆராய்ச்சி நோக்குடன்ஆசிரியர் தந்துள்ளார்.

தல புராணங்கள் தலத்திற்குரிய இறைவனது திருவிளையாடல்கள், தலத்தின் பழமை, பெருமை, அவ்விறைவனை வழிபட்டு நலம் பெற்றவர்களுடைய சரித்திரங்கள், வழிபடும் முறை, தலத்தின் மூர்த்தி, தீர்த்த விசேடங்கள் முதலியவற்றை கூறும் என்பதற்கு உதாரணமாக இந்நூல் திகழ்கின்றது.

சுந்தரர் பரவையாருக்காக இத்தல பெருமானை வேண்டி 12 ஆயிரம் பொன் பெற்று மணிமுக்தா நதியில் இட்டுத் திருவாரூர் கமலாலயத்தில் எடுத்துக் கொண்டார். தற்கால ATM/NEFT வசதிகளை அக்காலத்திலேயே இறைவன் சுந்தரருக்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

விருத்தாசலம் என்னும் திருமுதுகுன்றாம் பழமலை வந்து
விருத்தகிரீஸ்வரரை வணங்கிய வற்றொண்டற்கு நிருத்தன்
அன்புடன் அளித்த பொன்னை மாற்றுப் பார்த்து
மணிமுக்தாற்றில் இட்டு அரூர் குளத்தில் எடுத்தாரே
- சோ. பால்வண்ண சுந்தரம்

நடுநாட்டின் தொன்மையான தலத்தை நூலுக்கு கருவாக ஆசிரியர் எடுத்துக் கொண்டது சிறப்பே. சிவப்பிரகாசர், குமாரதேவர் குரு நமச்சிவாயர் மற்றும் பலர் வணங்கி பாடிய திருத்தலம்.

தேவாரம், பெரிய புராணம் பழமையான இன்னும் பல நூல்களை ஆராய்ந்து இக்காலத்து சான்றுகளுடன் அதை ஒப்பு நோக்கி பல குறிப்புகளை ஆசிரியர் இந்த நூலில் கொடுத்துள்ளார். புராணம், வரலாறு, சைவ சமயம், இலக்கியம் இவற்றையெல்லாம் ஒருங்கிணைத்து இதில் கூறியுள்ளார்கள். ஆர்வம் கொள் அன்பர்கள் இந்நூலை பெரிதும் வரவேற்பார்கள் என நம்புகிறேன்.

நெடுந்தொலைவில் இருப்பதால் பயணம் செய்து வந்து இத்தலத்தை தரிசிக்க முடியாதவர்கள் இந் நூலின் மூலம் இத்தலத்தின் சிறப்புகளை எல்லாம் அறிந்து கொள்ள முடியும். அம்மட்டோ! இந்நூலை ஆசிரியர் எழுதியுள்ள விதம் ஒரு முறை இந்நூலை வாசித்தவர்களை வசீகரம் செய்து விருத்தாசலத்திற்கு ஒரு முறையாவது வரவழைத்து விருத்தகிரீஸ்வரரை வணங்கச் செய்துவிடும் என்பதில் எனக்கு சந்தேகம் இல்லை.

அன்புடன்,

KSnavaram

கு. செல்வநாயகம்
கம்பெனி செகரட்டரி,
தி ராம்கோ சிமெண்ட்ஸ் லிட்., சென்னை.

இந்நூலைப் பற்றி...

முக்தி தரும் முதுகுன்றம் என்னும் இந்நூலைப் பற்றி தொகுத்து எழுத வேண்டும் என்ற எண்ணம் தோன்றியபோது, இதனை எழுத நம்மால் முடியுமா? இதனை எழுத நமக்கு உரிய தகுதி உள்ளதா? என்ற இரு கேள்விகளும் எனக்குள் தோன்றின. அதற்கான விடை கிடைக்காமல் பல நாட்கள் இந்த நூலினை எழுத ஆரம்பிக்காமல் இருந்தேன்.

ஆங்கிலேயர் ஆட்சியில் மதறாஸ் மாகாணம் அரசில் தாசில்தாரர் ஆக பணியாற்றிய, எங்களின் பாட்டனார் தெய்வத்திரு வி.ச.சோமசுந்தரம் பிள்ளை அவர்களின் காலத்தில் இருந்தே (சுமார் 140 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே) ஒவ்வொரு ஆணடும் மகா சிவராத்திரி அன்று பழமலை நாதருக்கு மூன்றாம் கால பூஜை எங்கள் குடும்பத்தாரால் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றது.

என்னுடைய 5வது வயது முதல் என் தாயார் அவர்கள் 'பெரிய கோயில்' என்று அழைக்கப்படும் நம் பழமலை நாதர் கோயிலுக்கு, சிவராத்திரி, பௌர்ணமி, பிரதோஷம், கிருத்திகை போன்ற நாட்களில் என்னை அழைத்துச் சென்று இறைவனை வணங்க வைத்தது என் நினைவில் இன்றும் பசுமையாக உள்ளது. என் தாயார் எனக்கு அறிமுகம் செய்த இறைவனும், இறைவியும் மற்றும் என் தாயார் அவர்கள் கூறிய ஆன்மீக கதைகளும் என்னை நல்வழிப்படுத்தி, சிவநெறிப் பாதையில் இதுகாறும் நடத்திச் சென்றுள்ளது.

இது தவிர, நான் ராஜபாளையம் ராம்கோ நிறுவனத்தில் 10 ஆண்டுகளுக்கு மேலாக பணியாற்றிய போது, ராம்கோ நிறுவனத்தின் அப்போதைய சேர்மன் தர்மரக்ஷகர், குருபக்தமணி திரு. பி.ஆர்.ராமசுப்பிரமணிய ராஜா அவர்கள் அர்ப்பணிப்புடன் ஆற்றிய ஆன்மீகப் பணிகளை அருகில் இருந்து காணும் பாக்கியம் கிடைக்கப் பெற்றேன். அதன் பயனாகவும் என்னுள் இருந்த இறையுணர்வு மேலும் தூண்டப்பட்டு மேலோங்கியது.

மேற்கண்ட நிகழ்வுகளே இத்தல புராணம் தொகுத்து எழுதும் எண்ணத்தை எனக்குள் ஏற்படுத்தி அதற்குள்ள தகுதியும் அளித்துள்ளன என்று கருதுகிறேன்.

கடந்த 27.10.2021 அன்று அருள்மிகு விருத்தாம்பிகை சமேத அருள்மிகு பழமலை நாதர்ஜ தரிசித்தேன். விருத்தாம்பிகையின் முன் நின்று தல புராண நூலை எழுத வேண்டும் என்கிற எனது எண்ணத்தைக் கூறி ஆசி வழங்குமாறு வேண்டினேன்.

மறு நாள் காலை சுமார் 8.00 மணியளவில், அய்யனார் கோயில் வீதியில் உள்ள எனது வீட்டில் இருந்து கடை வீதிக்கு சென்று கொண்டு இருந்தேன். இதே வீதியில் வசித்து வரும் ஓய்வு பெற்ற அரசுப் பள்ளித் தலைமை ஆசிரியை திருமதி எஸ்.கோமதி அவர்கள், தன் வீட்டின் முன் வாயிலில் நின்று கொண்டு வழக்கம்போல் என்னை நலம் விசாரித்தார்கள். அவர்கள் கையில் சில புத்தகங்களை வைத்திருந்தார்கள். அவற்றில் ஒன்றை என்னிடம் கொடுத்தார்கள். அது அருள்மிகு ஞானக்கூத்தர் எழுதிய விருத்தாசல புராணம். எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும், ஆச்சரியத்திற்கும் அளவே இல்லை. நான் எழுத நினைத்த தல புராணத்திற்கு மேலும் ஓர் ஆதார நூல் கொடுத்து அருள்மிகு பெரிய நாயகியார் எனக்கு அனுமதியும், ஆசியும் வழங்கி விட்டார்!

அடுத்த சில நாட்களுக்குப் பின், பூமிக்குள் ஈஸ்வரனால் அழுத்தப் பெற்ற பழமையின் உச்சி, வயலூர் அருகே பூமிக்கு மேல் வெளிப்பட்டுத் தெரிவதாக 1906ஆம் ஆண்டின் தென்னாற்காடு மாவட்ட அரசு இதழில் நான் படித்ததைப் பற்றி அறிந்து கொள்ள நேரில் வயலூர்-க்கு சென்றேன். அங்கு விவசாயி ஒருவர் அந்த பாறை அமைந்து இருந்த இடத்தைக் காட்டி மேலும் சில செவி வழிச் செய்திகளையும் கூறினார். கடைசியாக அவரிடமிருந்து விடைபெறும்போது அவரது பெயர் என்ன என்று கேட்டேன். அவர் தனது பெயர் 'பூமலை' என தெரிவித்தார், பூமிக்குள் மறைந்த மலையைப் பற்றி விவரம் அளித்தது 'பூமலையே' என்று உணர்ந்த போது, இது அருள்மிகு பழமலை நாதர்-இன் அருளே என்று மகிழ்ந்தேன். இந்த நிகழ்வும் என்னை இந்த நூல் எழுத உத்வேகம் ஊக்கமும் அளித்தது. முதலில் அம்பாளும், தற்சமயம் சுவாமியும் எனக்கு ஆசி வழங்கியதை உணர முடிகிறது.

இப்புத்தகத்தில் நான் எழுதியுள்ள அனைத்து புராண நிகழ்வுகள், வரலாற்றுக் குறிப்புகள், செய்திகள் அனைத்தும் இதற்கு முன் ஆன்றோர் பெருமக்கள் எழுதிய தல புராணம், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் வெளியிடப்பட்ட அரசிதழ்கள் (Gazetteers) மற்றும் அரசின் குறிப்பேடு (manual) ஆகியவற்றில் உள்ளவையே. இவ்விதம் நான் திரட்டிய புராண நிகழ்வுகள், வரலாற்று குறிப்புகள் மற்றும் இதர செவிவழிச் செய்திகளை தொகுத்து ஐந்து பாகங்களாக வடிமைத்துள்ளேன்.

தற்காலச் சூழலுக்கு ஏற்றவாறு அனைத்து சிவ பக்தர்களும், சாமான்ய மனிதர்களும் எளிதில் புரிந்து கொள்ளக் கூடிய நடையில் எழுதியுள்ளேன். எனது நோக்கம், நமது ஊர் மற்றும் நம்மை காத்தருளிக் கொண்டு இருக்கும் அருள்மிகு பழமலை நாதர், அருள்மிகு பெரிய நாயகி மற்றும் அருள்மிகு இளைய நாயகி ஆகியோரின் அருமைகளையும் பெருமைகளையயும் சரியான முறையில் நம் தலைமுறை புரிந்துணர்ந்து, அடுத்தடுத்த தலைமுறைகளுக்கும் இதனைக் கொண்டு செல்ல வேண்டும் என்பதே.

இந்நூலில் குறிப்பிட்டு இருக்கும் நல்லூர் திரிவேணி சங்கமம், பூமிக்குள் அழுந்திய பழமலையின் உச்சித் தெரிந்த வயலூர் போன்றவை தற்சமயம் பலரும் அறிந்திராத புராணச் செய்திகள். இந்நூலில் பதிவு செய்யப் பட்டுள்ள இதுபோன்ற புராண, வரலாற்று, செவிவழிச் செய்திகளை அடுத்தடுத்து வரும் தலைமுறைகள் படித்து, இந்தப் பெருமைகளை எல்லாம் உணர்ந்து, வணங்கி இறையருள் பெற்று ஆரோக்கியத்துடனும் நீண்ட ஆயுளுடனும் மகிழ்ச்சியாக வாழ வேண்டும்.

இப்புராணத் தொகுப்பினை படிக்கும் சிவனருள் பெற்றுள்ள அனைவரும் இந்நூலை மேம்படுத்தி அடுத்த பதிப்பில் கொண்டு வர ஆலோசனைகளை தவறாது என்னிடம் தெரிவிக்கும்படி அன்புடன் வேண்டுகிறேன்.

என்றும் யாவருக்கும் சிவனருள் வேண்டித் தொழும்.

தி. மீனாட்சி சுந்தரம்
79, அய்யனார் கோயில் தெரு, விருத்தாசலம்.
இருப்பு: 3/5, காந்தி நகர் முதல் குறுக்குத் தெரு
கள்ளிக்குப்பம், அம்பத்தூர், சென்னை-53.
மின்னஞ்சல்: vtms.hr@gmail.com, *கைபேசி எண்: 97900 60510*
அக்டோபர், 2023

பொருளடக்கம்

உ
சிவமயம்
தென்னாடுடைய சிவனே போற்றி

முக்தி தரும் முதுகுன்றம்

(ஓர் தொகுப்பு நூல்)

விநாயகர் துதி

திருவுங் கல்வியுஞ் சீருந் தழைக்கவுங்
கருணை பூக்கவுந் தீமையை காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகும் ஆழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

அய்யனார் துதி

பொய்யும் வழுவும் புவிதனில் நீங்கவும்
மெய்யும் வளமும் மேதினியில் ஓங்கவும்
கையனார் என்னும் பெயருடைச் சாத்தனார்
அய்யனார் பொற்பதம் ஆழந்து பணிவோம்.

நலம் தரும் நந்தி

கந்தனின் தந்தையைத்தான் கவனமாய்ச் சுமந்து செல்வாய்
நந்தனார் வணங்குவதற்கு நடையினில் விலகி நின்றாய்
அந்தமாய் ஆதியாகி அகிலத்தைக் காக்க வந்தாய்
நந்தியே உனைத் துதித்தேன் நாடி வந்தெமைக் காப்பாய்

பழமலைப் பதிகம்

ஆதி நடுவு முடிவிலா அருளானந்தப் பெருங்கடலை
ஓதி உணர்தற்குரிய சிவயோகத் தெழுந்த ஒரு சுகத்தைப்
பாதியாகி ஒன்றாகிய படர்ந்த வடிவைப் பரம்பரத்தைப்
சோதி மலையைப் பழமலையிற் சூழந்து வணங்கிக் கண்டேனே.

பெரிய நாயகியம்மன் பதிகம்

ஓதுருநாம மகற்றிடிற்றோன்று முள்ள சற்சிற் சுகமிதுவே
தீதறுசீவ சாட்சியிங்கிதனைத் தெருந்திடுஞ்சீவனுமிதுவா
யேத மொன்றில்லாப் பிரமமாமென்ற னிருள் றவருள் புரிந்தளித்தாள்
கேதமிற வத்தோர் சூழ்தரும் விருத்தகிரியமர் பெரியநாயகியே.

பாகம்-1

தலம்

அத்தியாயம்-1

நகரின் தோற்றமும் வரலாறும்



புராண காலத்தில் பிரம்மனால் தோற்றுவிக்கப்பட்ட நீரில் திருமால் துயின்று கொண்டு இருந்த சமயத்தில், அவருடைய காதுகளில் இருந்து தோன்றிய இரு மதுக் கடவர்கள் என்னும் அரக்கர்களை திருமால் உஅழித்த நிகழ்வே, ஆதியும் அந்தமும் இல்லா சிவன், பழமலை நாதர் ஆக அருள் புரியும் புராணத்தின் தொடக்கம். அவர் காட்சி அளித்த தலமே விருத்தாசலம் என்கிற திருமுதுகுன்றம்.

விருத்தாசலம் (வடமொழியில், விருத்தம் = பழமை, அசலம் = மலை) என்கிற திருமுதுகுன்றம் நகரமும் அருள்மிகு விருத்தகிரீஸ்வரர் திருக்கோயிலும் விபசித்து என்னும் முனிவரால், இரண்டாவது யுகமான திரேதா யுகத்தில் உருவாக்கப்பட்டதாக தல புராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. விபசித்து முனிவர் வட இந்தியாவில் இருந்த கோசல நாட்டில் வசித்தவர். இன்றைய தென் மத்திய உத்திர பிரதேசம் முதல் நேபாளம் வரை உள்ள பகுதியே கோசல நாடு என்று அழைக்கப்பட்டது. அயோத்தியை தலைநகராகக் கொண்டு ஆண்ட ஸ்ரீ ராமபிரானின் ஆட்சியின் கீழ் கோசல நாடும் இருந்துள்ளது.

தொண்டை நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு, சேர நாடு, கொங்கு நாடு, நடு நாடு என்னும் பகுதிகள் இணைந்ததே பழைய தமிழகமாகும்.



இதில் நடு நாடு என்பது தென்பெண்ணை ஆற்றிற்கும் வெள்ளாற்றிற்கும் இடைப்பட்ட பகுதி. இப்பகுதியில் தான் விருத்தாசலம் எனும் சிவத் தலம் அமைந்துள்ளது. தேவாரப் பாடல் பெற்ற 22 நடு நாட்டு சிவத் தலங்களில் விருத்தாசலமும் ஒன்று. இத்தலம் சமயக்குரவர்களுள் மூவரால் பாடப் பெற்றுள்ளது. நடு நாட்டில் திருக்கோயிலூரரைச் சுற்றியுள்ள பகுதியை மலையமான்கள் என்பவர் அரசாட்சி செய்து வந்தனர்.


கல்ராயன் மலைப்பாதை

திருநாவலூரைச் சுற்றியுள்ள பகுதியை 'முனையரசர்' என்ற மரபினர் ஆண்டு வந்தனர் என்பதை டாக்டர் மா. இராசமாணிக்கனார் எழுதிய 'சேக்கிழார்' என்று நூலில் இருந்து அறிய முடிகிறது.

கல்ராயன் மலையில் கிடைத்த கற்களால் ஆன கோடாரி போன்ற ஆயுதங்கள், கருவிகள், கற்பலகையினால் மூடப்பெற்ற சமாதிகள் **(Kistvaens)** திருக்கோயிலூர் அருகில் உள்ள தேவனூர், செஞ்சி அருகிலுள்ள சத்திய மங்கலம் மற்றும் சித்தாம் பூண்டி போன்ற ஊர்களில் கிடைக்கப் பெற்ற இத்தகைய கல்லறை போன்ற வடிவங்களை வைத்தும் பார்க்கும்போது தென்னாற்காடு மாவட்டத்தில், வரலாற்றுக் காலத்திற்கு முன்னரே மனித இனம் இருந்தது அறிய முடிகிறது.

கி.பி.4ஆம் நூற்றாண்டு முதல் 8ஆம் நூற்றாண்டு வரை பல்லவர்களும், 9ஆம் நூற்றாண்டில் கங்க-பல்லவர்களும் தொடங்கி, தென்னாற்காடு மாவட்டத்தை உள்ளடக்கிய தொண்டை மண்டலம் என அழைக்கப்பட்ட இந்நாட்டினை சோழர், பாண்டியர், சேரர் வம்சத்தினர், ஹோய் சால மன்னர், முகலாய மன்னர்கள், மராட்டிய மன்னன் சிவாஜி போன்றவர்களும் ஆண்டுள்ளனர்.

இதே நேரத்தில் சில ஐரோப்பிய நாடுகளும் தென்னாற்காடு மாவட்டத்தில் காலூன்றத் தொடங்கின. முதலில் போர்ச்சுக்கீசியர்கள் 16ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், பரங்கிப் பேட்டை வந்திருக்கிறார்கள். பின்னர் டச்சுக்காரர்களால் அவர்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். டச்சுக்காரர்கள் பரங்கிப்பேட்டை, கடலூரில் தேவனாம்பட்டினம் (புனித டேவிட் கோட்டை) ஆகிய இடங்களில் தொழிற்சாலைகள் ஆரம்பித்தனர்.


புனித டேவிட் கோட்டை


இவர்களைத் தவிர 1674 ஆம் ஆண்டு பிரெஞ்சுக்காரர்கள் பாண்டிசேரியில் குடியேறினர். 1690ஆம் ஆண்டு ஆங்கிலேயர்கள் கடலூரில் தேவனாம்பட்டினம் கோட்டையை வாங்கினார்கள். இக்கோட்டையே பிற்காலத்தில் செயிண்ட் டேவிட் கோட்டை என வழங்கப் பெற்றது.

17ஆம் நூற்றாண்டில் டில்லி மாமன்னன் அவுரங்கசீப், தெற்கு நோக்கி படையெடுத்து வந்து பீஜப்பூர், கோல்கொண்டா, செஞ்சிக் கோட்டை ஆகியவற்றை தன் ஆட்சியின் கீழ் கொண்டு வந்தான். முகலாய மன்னரின் பிரதிநிதியாக ஆற்காடு நவாப் இங்கு ஆட்சி செய்துள்ளார்.

1799ஆம் ஆண்டு நடந்த மூன்றாம் மைசூர் யுத்தத்தில் மைசூரை ஆண்ட திப்பு சுல்தானின் தலைநகர் ஸ்ரீரங்கபட்டினம் ஆங்கிலேயரால் வீழ்த்தப்பட்டு, திப்பு சுல்தான் போரில் கொல்லப்பட்டார்.

அதே சமயம் கர்நாடக நவாப் ஆக இருந்த அசீம்-யுத்-தௌலா வுடன் கிழக்கு இந்திய கம்பெனி 1801இல் செய்து கொண்ட உடன்படிக்கையின்படி கர்நாடகத்துடன், தென் ஆற்காடு மாவட்டமும் கிழக்கு இந்திய கம்பெனியின் ஆதிக்கத்தின் கீழ் வந்தது.

18ஆம் நூற்றாண்டில் தென்னாற்காடு மாவட்டத்தில் இருந்த பல கோயில்கள் போர்க்காலங்களில் கோட்டைகளாகவும், பாதுகாப்பு அரண்க ளாகவும் பயன்படுத்தப்பட்டன. அவ்வாறு சில காலம் கோட்டையாகப் பயன்படுத்தப்பட்ட பழமலை நாதர் திருக்கோயிலில் அப்போதைய மாவட்ட கலெக்டராக இருந்த திரு. கார்ரோ அவர்களின் முயற்சியால் மீண்டும் வழிபாடு ஆரம்பிக்கப்பட்டது. கைலாய சுற்று மதிலை ஒட்டி அமைக்கப்பட்டு இருந்த அகழி மூடப் பெற்று, அகன்ற தேரோடும் திருவீதியும் அமைக்கப் பட்டது.



மணிமுக்தா நதியின் பழைய பாலம்

கோட்டை மற்றும் நுழைவாயில் முன் உள்ள வேலைப்பாடுகள் பற்றியும் பிரெஞ்சுக்காரர்களால் உருவாக்கப்பட்ட பாதுகாப்பு அரண் பற்றியும் திரு. கார்ரோ அவர்களின் 1803ஆம் வருடத்திய கடிதத்தில் குறிப்பிடப்பட்டு உள்ளது எனவும், அந்தக் கடிதம் கலெக்டர் அலுவலக பதிவேடுகளுடன் இருந்துள்ளது எனவும் அறியப்படுகிறது.

கேப்டன் கிரஹாம் என்பவர் தென்னாற்காடு மாவட்டத்தின் முதல் மாவட்ட ஆட்சியராக 1801ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டார். கடலூர், பாண்டிச்சேரி மாவட்டங்கள் மற்றும் கீழ்கண்ட 14 தாலுக்காக்கள் இவரது ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டன. ஆற்காடு, வேலூர், போளூர், திருவண்ணாமலை, எலவனாசூர், விருத்தாசலம், புவனகிரி, விழுப்புரம், திருவதிகை, விக்ரவாண்டி, வழுதாவூர், திருவாமாத்தூர், இளங்காடு மற்றும் செஞ்சி. பின்னர் 1805ல் மன்னார்குடி-உம் (காட்டுமன்னார் கோயில்), சிதம்பரம்-உம் தென்னாற்காடு மாவட்டத்தில் இணைக்கப்பட்டன.

அது முதல் சுதந்திர இந்தியாவில் 1993 வரை விருத்தாசலம் தென்னாற்காடு மாவட்டத்தில் இருந்தது. 1993-ல் தென் ஆற்காடு மாவட்டம் கடலூர் மற்றும் விழுப்புரம் என இரு மாவட்டங்களாக பிரிக்கப்பட்ட போது விருத்தாசலம் கடலூர் மாவட்டத்தில் அடங்கியது.

ஆங்கிலேயர் காலத்திலேயே இவ்வூர் தாலுக்கா தலைநகராக விளங்கியது. மேலும் தென் ஆற்காடு மாவட்டத்தில் முதன் முதல் 1806 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மாவட்ட நீதிமன்றம் இவ்வூரில் தொடங்கப்பட்டது. திரு டேவிட் காக் பர்ன் என்பவர் முதல் மாவட்ட நீதிபதி ஆக நியமிக்கப்பட்டார். இந்த நீதிமன்றம் நகரின் புதுப்பேட்டையில் இயங்கியது. ஓர் சப்ரெஜிஸ்ட்ரார் ஆபீசும், ஒரு காவல் நிலையமும் அச்சமயம் இருந்தன. நகரில் முதன்முதலில் 1856ஆம் ஆண்டு 'தாலுக்கா பள்ளி' என்னும் ஆரம்ப பள்ளி ஆரம்பிக்கப் பட்டது. இப்பள்ளியே பின்னர் உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டு தற்போதைய அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியாக இயங்கி வருகிறது. நகர பகுதியையும், புதுப்பேட்டை-யையும் இணைக்கும் மணிமுக்தா நதியின் குறுக்கே கட்டப்பட்ட பாலம் 1878ஆம் ஆண்டு ரூ.52,700/- மதிப்பில் கட்டப்பட்டது. இந்த பாலம் 2004 ஆம் ஆண்டில் இடிந்து, பின்னர் தற்போதுள்ள பாலம் புதிதாக கட்டப்பட்டது.



ஆதித்திய கரிகாலன்

மணிமுக்தா நதியின் மறுகரையில், நதியின் குறுக்கே கட்டப் பெற்ற பாலம் முடிவடையும் இடத்தில், புதுப்பேட்டையில், தாமஸ் தோப்பு என்ற பெயரில்

1834 முதல் 1837 வரை சப்-கலெக்டராக இருந்த திரு. E.B.தாமஸ் என்பவரால் இத்தோப்பு உருவாக்கப்பட்டது. அங்கு உள்ளூர் மார்கெட்டும் இயங்கி வந்துள்ளது. இப்பகுதியில் இரு நந்திகள் முறையே பழமலை நாதர் மற்றும் விருத்தாம்பிகை-யின் கர்பக்கிரங்களுக்கு எதிரே நேர்கோட்டில் அமைக்கப்பட்டுள்ளன. சுவாமியின் நேர் எதிரே இருந்த 'இந்திர நந்தி' அம்பாளின் நேர் எதிரே இருந்த நந்தியை விட உருவத்தில் சிறியது. இந்திர நந்தி இருந்த மண்டபம் தற்சமயம் சிதிலமடைந்துள்ளது. நந்தியும் அங்கு காணப்படவில்லை.

கல்கியின் 'பொன்னியின் செல்வன்' நாவலில், நான்காம் பாகம் (மணி மகுடம்), அத்தியாயம் 11-இல் (தோழனா? துரோகியா?) - திருமுதுகுன்றம் மணிமுக்தா நதி, வெள்ளாற்றில் கலக்கும் இடம் (கூடலையாற்றூர்) வழியாக ஆதித்ய கரிகாலன், அவனது நண்பர்கள் கந்தமாறன் மற்றும் பார்த்திபேந்திர பல்லவன் ஆகியோருடன் காஞ்சிபுரத்தில் இருந்து கடம்பூருக்கு, பயணம் மேற்கொண்டதாக நாவல் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

அந்த சமயத்தில், பழமலை நாதர் திருக்கோயிலில் திருப்பணிகள் நடைபெற்று வந்ததாகவும் நாவலில் கூறப்பட்டுள்ளது. இத்திருப்பணிகள் செம்பியன் மாதேவி 10ஆம் நூற்றாண்டின் இறுதியில் செய்த திருப்பணிகள்.

சென்னை மாநகருக்கு தெற்கே சுமார் 220 கி.மீ. தொலைவில் இந்நகர் உள்ளது. சென்னையில் இருந்து மதுரை, இராமேஸ்வரம், கன்னியாகுமரி செல்லும் இரயில் வழித்தடத்தில் பயணித்து விருத்தாசலம் வந்தடையலாம். இது தவிர சேலம்-கடலூர் இரயில் வழித்தடத்திலும் இவ்வூர் இணையப் பெற்றுள்ளது.

இத்தலத்தின் ஐந்து பெயர்கள்: விருத்தாச்சலம், திருமுதுகுன்றம் நெற்குப்பை, விருத்தகிரி, விருத்தகாசி.



திருக்கோயிலும் மணிமுக்தா நதியும்

பாகம்-1

அத்தியாயம்-2

நகரின் முற்கால அமைப்பும் காவல் தெய்வங்களும்

திருக்கோயிலைச் சுற்றியுள்ள வீதிகளின் முற்கால அமைப்பு:

விருத்தாசலம் நகரில் திருக்கோயிலின் கிழக்கே சன்னதி வீதி மற்றும் இதர மூன்று தேர் ஓடும் வீதிகளும் அவை அமைந்துள்ள திசைகளின் பெயரையும் சேர்த்து கோட்டை வீதி என்று இன்றும் அழைக்கப்படுகிறது.

தென்கோட்டை வீதியில் அப்போதைய (1813 முதல் 1826ஆம் ஆண்டு வரை) தென்னாற்காடு மாவட்ட கலெக்டரால் அமைக்கப்பட்ட சத்திரம், அவரது பெயராலேயே ஹைடு துரை சத்திரம் என்று வழங்கப்பட்டது. இங்கு வாடகைக்கு தங்கும் வசதி இருந்துள்ளது. பின்னர், பள்ளி மாணவர்கள் தங்கும் விடுதியாக பயன்படுத்தப்பட்டது. தற்சமயம் சிதிலமடைந்த நிலையில் உள்ளது. அருகில் நகராட்சி இடைநிலைப் பள்ளி ஒன்று இயங்கி வருகிறது. இந்த தெருவின் கடைசியில் (தென்மேற்கு மூலையில்) தங்கவும் சமைத்து சாப்பிடவும் வசதிகள் கொண்ட ரெட்டியார் சத்திரம் இருந்துள்ளது.

மேலக்கோட்டை வீதியில் இருந்த பசு மடத்தில் தங்கும் வசதி மட்டுமே இருந்தது. வடக்குக் கோட்டை வீதியில் இருந்த தீவளூர் பிள்ளை சத்திரத்தில் வெளியூரில் இருந்து வரும் பக்தர்களுக்கு பகல் மற்றும் இரவு இருவேளையும் இலவச உணவு வழங்கப்பட்டு வந்துள்ளது. இவ்வீதியில் நடுவில் இருந்த பெ.ப.வீ. வினை தீர்த்தான் செட்டியார் சத்திரத்தில் தங்கி, சமைத்துக் கொள்ள வசதிகள் இருந்தன. வாடகை எதுவும் இன்றி இவ்வசதிகள் இலவசமாக அளிக்கப்பட்டன. அதற்கு அடுத்து கிழக்கே கர்னத்தம் சுப்பராய செட்டியார் சத்திரம் உள்ளது.

வடக்கு கோபுர வாயிலுக்கு நேரே உள்ள தீர்த்த மண்டபத் தெரு வழியாக சென்றால் மணிமுக்தா நதியின் 'புண்ணியமடு' என்னும் துறையை அடையலாம். இந்நதி கோயிலின் வடபுறமும் கிழக்கு புறமாகவும் வந்து, ஊரின் தென்கிழக்காக ஓடுகிறது.

சன்னதி வீதியின் வடக்கு மூலையில் ஆற்றங்கரை ஓரம் ஒரு பகுதி வானொலி திடல் என அழைக்கப்பட்டு, அங்கே ரேடியோ நிகழ்ச்சிகள் மாலையில் பொது மக்களுக்காக ஒலி பரப்பப்பட்டன. மின்சார சங்கு(சைரன்) மூலம் காலை 5.00 மணி மற்றும் 8.00 மணி; நண்பகல் 12.00 மணி; மாலை 6.00 மணி மற்றும் இரவு 8.00 மணிக்கு ஊர் முழுவதும் கேட்கும் சத்தத்தில் சங்கு ஒலிக்கப்பட்டு வந்தது. இதன் அருகில் ஆற்றங்கரையை ஒட்டியுள்ள மைதானம் 1960க்கு முன்பு வரை பேருந்து நிலையமாக இயங்கி வந்தது. இந்த இடம் தற்சமயம் வாடகைக் கார்கள் நிறுத்துமிடமாக பயன்படுத்தப்படுகிறது. இதன் அருகே திருத்தேர்கள் ஐந்தும் தற்போதும் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன.

வாடகைக் கார்கள் நிறுத்துமிடத்தின் பின்புறம் ஒருபடித்துறை உள்ளது. படித்துறையின் இருபுறமும் ஆறு கற்சிலைகள் உள்ளன. மணிமுக்தாநதியில் நீராடி, பழமலை நாதரை வணங்கி அருள்பெற்ற ரிஷிகள் மற்றும் மாமுனிவர்களின் சிலைகளாக அவைகள் இருக்கக்கூடும்.


படித்துறையில் உள்ள சிலைகளும் கல்வெட்டும்

நதிக்கரையில் உள்ள கருங்கல் படித்துறை முழுவதும் சென்னையைச் சேர்ந்த வணிகர், ஆயிரவர் நகரத்தார் தியாகம் வேங்கடசெட்டியாரின் தம்பி காளத்தி செட்டியார் என்பவரால் கி.பி.1714ல் கட்டப்பட்டது என்ற கல்வெட்டு இப்படித்துறையின் வலதுபுறம் உள்ளது.

காசியில் கங்கைக் கரையில் அமைந்துள்ள ஹரிச்சந்திரகாட் போல், இந்நகரின் தெற்கே மணிமுக்தா நதியின் தென் கரையில் மயானம் (சுடுகாடு) அமையப் பெற்றுள்ளது.

ராஜகோபுரத்தின் நேர் கிழக்கே, ஆற்றங்கரையை ஒட்டி சுமார் 3 ஏக்கர் பரப்பளவில் நந்தவனம் ஒன்று இருந்திருக்கிறது. இங்கிருந்த பெரிய கிணறு ஒன்றில் இருந்து, 3 குதிரை பலமுடைய (ஹெச்.பி) மின்சார மோட்டார் பம்பு மூலம் தண்ணீர் இறைத்து இந்த நந்தவனம் தேவஸ்தானத்தினரால் சுமார் 1950 ஆம் ஆண்டு வரையில் பராமரிக்கப்பட்டு வந்துள்ளது. பின்னர் சில காலம் காய்கறி மார்க்கெட் அங்கே இயங்கி வந்தது. தற்சமயம் சில வணிக கட்டிடங்கள் மட்டும் காணப்படுகிறது. லாரிகள் மற்றும் வாகனங்கள் நிறுத்தும் இடமாக காணப்படுகிறது.


ஸ்ரீ வேடப்பர் கோயில்


ஸ்ரீ கொளஞ்சியப்பர்

காவல் தெய்வங்கள்:

நகரின் நான்கு திசைகளிலும் காவல் தெய்வங்கள் உள்ளன. நகரின் தெற்கே சுமார் 2.5 கி.மி. தொலைவில், திருச்சி செல்லும் சாலையில் வேடப்பார் கோயில் உள்ளது. ஆரம்ப காலத்தில் இக்கோயிலில் உருவ வழிபாடு இல்லாமல் இருந்தது. தற்சமயம் உருவ வழிபாடு உள்ளது. சித்திரை பௌர்ணமி அன்றும் மற்றும் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் இங்கு சிறப்பு வழிபாடு நடைபெறுகிறது.



ஸ்ரீ வெண்மலையப்பர் கோயில்

நகரின் மேற்கே சுமார் 2.5 கி.மீ. தொலைவில் கொளஞ்சியப்பர் என்னும் கோயில் உள்ளது. இங்கு முருகன் அரு உருவமாக காட்சியளிக்கிறார். பக்தர்கள் தங்கள் வேண்டுதல்களை காகிதத்தில் எழுதி, அதை கோயிலில் கட்டி (பிராது கட்டி), அதன் மூலம் பலன் பெறும் வழக்கம் சமீப காலங்களில் உருவாகி உள்ளது.

நகரின் வடக்கே சுமார் 3 கி.மீ. தொலைவில் பெரிய கண்டியங் குப்பம் என்னும் சிற்றூரில் வெண்மலையப்பர் என்னும் கோயில் உள்ளது. வெண்மலையப்பர் உழவர்களுக்கும் காவல் தெய்வமாக இருந்து நலம் தருகிறார்.

நகரின் கிழக்கே சுமார் 5 கி.மீ. தொலைவில் கோ.மாவிடந்தல் என்னும் கிராமத்தில் கரும்பாயிரங்கொண்ட அய்யனார் கோயில் உள்ளது. மக்கள் வேண்டும் வரத்தை அளித்து இத்திசையில் காவல் தெய்வமாக அருள் புரிகிறார். ஆதியில் சிறிய மண்டபத்தில் கரும்பாயிரம் கொண்டவரின் சிலை காலை மடித்து குத்துக்காலிட்டு அமர்ந்த நிலையில் மண் திருமேனியாக பிரதிஷ்டை செய்யப்பட்டது. பின்னர் கற்சிலை கொண்டு அருகிலேயே கொயில் கொண்டு கரும்பாயிரம் கொண்டவர் அருள்பாலிக்கிறார். சிவன் கோயிலில் அமைந்துள்ளது போல் மூலவரின் எதிரில் நந்தி அமையப் பெற்றுள்ளது. கோயில் நுழைவாயில் இடது புறம் விநாயகரும், வலது புறம் முருகப் பெருமானும் அமையப் பெற்றுள்ளனர். பரிவார தெய்வமாக அய்யனார் துணைவியருடன் (பூரணா, புஷ்கலா) விநாயகப் பெருமானின் அருகில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளார்.

சுந்தரமூர்த்தி நாயனார், முதுகுன்றத்தை நோக்கி வந்தபோது, அவருக்கு கரும்பாயிரம் கொண்டவர் வழி காட்டியதாக கூறப்படுகிறது. பரிவார தெய்வங்களுடன் சுந்தரமூர்த்தி நாயனார், அவர் துணைவியார் பரவை நாச்சியார், அடுத்து வெள்ளையம்மா, மதுரை வீரன், பொம்மியம்மா, நல்லதங்காள் திருவுருங்களும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. மதுரை வீரன் தன் மனைவியருடன் தனிச் சன்னதி கொண்டுள்ளார். கருப்பண்ணசாமியும் மதுரை வீரன் சன்னதிக்கு சற்று தள்ளி வீற்றிருக்கிறார்.



ஸ்ரீ கரும்பாயிரம் கொண்ட அய்யனார் கோயில்

பாகம்-1

அத்தியாயம்-3

தலப் பெருமை

மூன்று உலகத்துக் கடவுளர் தம்மினும்
முதுகிரிநாதர்க்கு இணையிலையதுபோல்
ஏன்ற விருத்தகிரிக்கு ஒரு தலமும்
இணையிலையின்றல வெக்காலத்தும்

தானம் தருமம் தவமேயாகம்
தத்துவம் அறியார் முத்தியை விழையில்
ஈனங்களையும் திருமுதுகுன்றே
இடமாய் உறைவார் அடைவார் கதியின்
ஞானம் தவம் உள் ஞானிகள் சில நாண்
நண்ணினும் அடைவார்கள் எண்ணின பதமே
ஆனந்தம் பெறு முன்னர் விமானத்
தமர் உலகு எங்கனும் உலவுவரே

இத்தலம் விட்டுக் காசியில் ஏகினும்
இல்லை தவப்பலன் முத்தியுமில்லையே.

-அருள்மிகு ஞானக்கூத்த சிவப்பிரகாச சாமிகள்.

மூன்று உலகங்களிலும் உள்ள தெய்வங்களுள் பழமலை நாதருக்கு இணையான தெய்வம் இல்லை என்பது போல், திருமுதுகுன்றத்திற்கு இணையான தலம் இல்லை என்பது இன்றும், எக்காலத்தும் பொருந்தும்.


தானம், தருமம், தவம், யாகம் மற்றும் தத்துவம் பற்றி அறியாதவராக இருப்பினும், வீடு பேறு அடைய ஒருவர் விரும்பினால், சகல பாவங்களையும் போக்கி அருளும் அழகிய திருமுதுகுன்றத்தில் வசிக்கும் பட்சத்தில், அவர் வீடு பேற்றினை பெறுவார். ஒரு சில நாட்களே இந்தத் தலத்தில் வசித்தாலும், ஞானமும் தவமும் பெற்ற ஞானிகள், அவர்கள் விரும்பும் நித்தியானந்த பதம் பெறுவர். மேலும் அதனை அடைவதற்கு முன்னரே தெய்வ விமானத்தில் ஏறி உலகமெங்கும் செல்வர். மேலும், இத்தலம் காசியை விட வீசம் அளவு அதிகமான பலனைத் தரும் சிவத்தலம்.

இப்பூவுலகில் அனைத்து இடங்களிலும் கிரேதா யுகத்தில் தர்மம் முழுமையாக நிலவும், திரேதாயுகத்தில் மூன்று பங்கு தர்மமும் ஒரு பங்கு பாவமும் நிலவும். துவாபர யுகத்தில் இரு பங்கு தர்மமும் இரு பங்கு பாவமும் நிலவும். கலியுகத்தில் ஒரு பங்கு தர்மமும், மூன்று பங்கு பாவமும் நிலவும் என்பது நியதி. ஆனால் திருமுதுகுன்றத்தில் எல்லா யுகங்களிலும் எப்போதும்

முழுமையாக தர்மமே நிலவுவதால், இங்கு யுக பேதங்கள் இல்லை. இங்கு வசிப்பவர்களுக்கு குணபேதங்கள், பசி, நோய், தீ வினைகள், நவக்கிரக தோஷம், தரித்திரம், இராட்சதவாதை போன்றவைகள் இல்லை. எல்லா காலங்களிலும் சிவனின் பரிபூரண அருளை திருமுதுகுன்றத்தில் வசிப்பவர்கள் பெற்று மகிழ்வார்கள் என்பதே இத்தலத்தின் சிறப்பு. அத்திரி, வசிஷ்டர், போதாயனர், ஜமதக்கினி, அகத்தியர், காசிபர், உரோமசர், கண்ணுவர் முதலிய எண்ணற்ற முனிவர்கள் இத்தலத்தில் தவம் செய்து வரம் கிடைக்கப் பெற்றார்கள். உருத்திரர், திருமால், பிரமன், இந்திரன், நவகிரகங்கள், அஷ்டவசுக்கள், திருமகள், கலைமகள், இந்திராணி முதலியோரும் இங்கு தவம் செய்து தமது பதவிகளைப் பெற்றனர்.

அழிவைத் தரும் பிரளய காலத்தில், கடல்கள் ஏழும் மற்ற அனைத்தும் தாழ்ந்து கீழே செல்ல, திருமுதுகுன்றம் மட்டும் பிரளயத்தை வென்று உயர்ந்து நின்ற தலம் ஆகும். நான்கு திசைகளிலும் புகழ் பெற்ற சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு மாற்று உயர்ந்த பொன்னை, மணிமுக்தா நதியிலிட்டு கமலாலய குளத்தில் கொடுத்து அருளிய அருமையான பதி முதுகுன்றமே. சிவத்தலங்கள் ஆயிரத்தெட்டில் தலைமையான நான்கினுள் இத்தலம் ஒன்று. ஏனைய மூன்று தலங்கள் காசி, சிதம்பரம் மற்றும் காளஹஸ்த்தி.

சிவபெருமான் திருநடனத்துக்குரிய தலம் சிதம்பரம் என்றும் குலாவி வீற்றிருத்தற்குரிய தலம் முதுகுன்றம் என்றும் கூறப்படுகிறது. கயிலையில் இருந்து புறப்பட்டு சேய்ஞலூர் வந்து தங்கும் வரை முருகப்பெருமான் தரிசித்ததாக கந்தபுராணம் வழிநடைப்படலம் காட்டும் தலங்களுள் முதுகுன்றமும் ஒன்றாகும். ஏனைய தலங்கள் கேதார்நாத், காசி, ஸ்ரீசைலம், திருவேங்கடம், காளஹஸ்தி, திருவாலங்காடு, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவெண்ணைநல்லூர், மற்றும் சிதம்பரம். இத்தகைய மேன்மையும், பெருமையும், பெற்ற தெய்வீகத்தலம் திருமுதுகுன்றம் ஆகும்.




கமலாலயம், திருவாரூர்

பாகம்-1

அத்தியாயம்-4

காசியும், விருத்த காசியும்



ஸ்ரீ காசி விஸ்வநாதர் ஆலயம்

தாழம்பூவை பொய் சாட்சி சொல்ல வைத்து, பொய்யுரைத்த பிரம்மாவின் ஐந்து தலைகளில் ஒன்றினை, சிவன் கொய்துவிட, பிரம்மா அது முதல் நான்கு தலைகளுடன் சதுர்முகர் ஆனார் என்ற புராணம் நாம் அறிந்ததே.

பிரம்மாவின் ஒரு தலையை வெட்டிய பாவம், சிவனை பிடித்துக் கொள்ள, பிரம்மாவின் வெட்டுப்பட்ட தலை, சிவ பெருமான் கையில் ஒட்டிக் கொள்கிறது. எந்த கையில் பிரம்ம கபாலம் ஒட்டிக் கொண்டதோ, அதே கையில், அதே கபாலத்தை பிச்சைப் பாத்திரமாக ஏந்தி, இரந்து உணவு பெற்று உண்ண வேண்டும் என்றும் அப்போது அம்பிகை இடமும் இரந்து உணவு பெற்று உண்டு, பிரம்மாவின் தலையைக் கொய்த பாவத்தை போக்கிக் கொள்ள வேண்டும் என்றும் சிவபெருமான் முடிவு எடுக்கிறார். உலகுக்கே படியளிக்கும் மகாதேவன் கையேந்த, அன்னை அன்னபூரணி, அவருக்கு பிச்சையிடுகிறாள்.

இந்தப் புராண நிகழ்வு ஆண்டுதோறும், தீபாவளியன்று காசியில் நடத்தப்படுகிறது. இதன் மூலம் எந்த தருணத்திலும், அய்யனும் அம்பிகையும் நம்மை காப்பாற்றுவார்கள் என்கிற பேருண்மை அனைவருக்கும் உணர்த்தப்படுகிறது. இதே சிந்தனை விருத்தகாசியிலும் இருப்பதை, குரு நமசிவாயருக்கு உணவு அளித்த விருத்தாம்பிகையின் அருளைக் குறிப்பிட்டு, தன்னுடைய கட்டுரையில், மரியாதைக்குரிய திருமதி சுதாசேஷய்யன் அவர்கள் பதிவு செய்துள்ளார். (டிசம்பர் 16, 2022-தினமணி நாளிதழில், 'சிந்தனை ஒன்றுடையாள்' என்ற தலைப்பில் வெளியாகி உள்ளது.)



ஸ்ரீ காசி விஸ்வநாதர்

காசியில் விசாலாட்சி அன்னபூரணி போல், விருத்த காசியில், விருத்தாம்பாள், பாலாம்பாள் இருவரும் அருளாட்சி செய்கின்றனர். பிந்து மாதவ பெருமாள் மற்றும் பைரவர், காசி ஷேத்திரத்தை ஒட்டியே விருத்தகாசியிலும் அமையப் பெற்றுள்ளனர்.

விநாயகரின் அறுபடை வீடுகளில் பழமலை நாதரின் திருக்கோயிலில் வீற்றிருக்கும் ஆழத்து பிள்ளையார் இரண்டாவது படை வீட்டு விநாயகர் எனவும், காசியில் உள்ள துண்டிராஜ கணபதி ஐந்தாவது படை வீட்டு விநாயகர் எனவும் சான்றோர் பெருமக்கள் வழிபட்டு வருகின்றனர்.


ஸ்ரீ அன்னபூரணி

பிரயாக்ராஜ் (அலகாபாத்) திரிவேணி சங்கமம் போல், விருத்தகாசி அருகில், நல்லூரில் கோமுக மயூர நதிகள், மணிமுக்தா நதியுடன் கலக்கும் விருத்தப் பிரயாகை அமைந்துள்ளது.


காசியில் கங்கைக் கரையில் அமைந்துள்ள ஹரிச்சந்திரகாட் போல், இந்நகரின் தெற்கே மணிமுக்தா நதியின் தென் கரையில் மயானம் (சுடுகாடு) அமைய பெற்றுள்ளது.

விருத்தாசலம் - வாரணாசி ஆகிய இரு தலங்களிலும், நதிகளிலும், கோயில்களிலும் பொதுவாக உள்ள அமைப்புகள், இத்தலங்களில் நடைபெற்ற ஒரேவிதமான புராண நிகழ்வுகள் ஆகியவற்றின் மூலம் இரு தலங்களும் ஒன்றிற்கு ஒன்று இணையான தலங்கள் என்பதை நாம் அறிய முடிகிறது.


ஸ்ரீ பிந்துமாதவ பெருமாள் - காசி


ஸ்ரீ பிந்துமாதவ பெருமாள் - விருத்தாசலம்

பாகம்-2
தீர்த்தம்
அத்தியாயம்-1
மணிமுக்தா நதியின் பிறப்பிடமும் சங்கமும்


மணிமுக்தா நதி அணை, கள்ளக்குறிச்சி

திருமுதுகுன்றம் சிவனின் வடிவம், திருமணிமுக்தா நதி சக்தியின் வடிவம் என்று அருள்மிகு ஞானக்கூத்த சிவப்பிரகாச சாமிகளால் பாடப் பெற்றுள்ளது. (நிருத்தச் சருக்கம் - பாயிரம் 181).

தென்னாற்காடு மாவட்டத்தில் (தற்சமயம் கள்ளக்குறிச்சி மாவட்டம்) உள்ள கல்ராயன் மலையில் வடக்குப் பகுதியில் தோன்றி, கிழக்கு மலைச் சரிவில், வழிந்தோடும் மணி மற்றும் முக்தா என்னும் இரு நீரோடைகளும் தனித்தனியே ஓடி பின்னர் ஒன்றாக இணைந்து 'தும்பே' எனும் பள்ளத்தாக்கு வழியாக மணிமுக்தா நதியாக பாய்கிறது.

இம்மலையின் தெற்குப் பகுதியில் நீரோடைகளாக உருவாகி, கிழக்கு மலைச் சரிவில் வழிந்து ஓடி, பின்னர் கோமுக நதி மற்றும் மயூர நதி என இரு நதிகளாக உருவாகி ஓடுகின்றன.


விருத்தாசலத்தின் மேற்கு மற்றும் சற்று வடக்கே சுமார் 16 கி.மீ. தொலைவில் நல்லூர் என்னும் ஊர் உள்ளது. அந்த ஊரில் அருள்மிகு வில்ல வனேஸ்வரர் சமேத அருள்மிகு பிரஹன் நாயகி கோயில் அமைந்துள்ளது. கோமுக நதியும் மயூர நதியும் காட்டுமயிலூரில் சங்கமித்து ஒரே நதியாக இக்கோயிலின் தெற்கு புறமாகவும், மணிமுக்தா நதி வடக்கு புறமாகவும் ஓடி கோயின் கிழக்குப் புறத்தில் சங்கமிக்கிறது. இந்த சங்கமம் விருத்த-ப்ரயாகை அல்லது பழைய அலகாபாத் என்று அழைக்கப்படுகிறது. அலகாபாத்தில் உள்ள திரிவேணி சங்கமத்தை விட மிகப் பழமையானது.

நதிகளுக்கு மத்தியில் மேடான ஒரு நிலப் பகுதியில் அருள்மிகு பிரஹன் நாயகி, பாலாம்பிகை சமேத அருள்மிகு வில்வ வனேஸ்வரர் ஆலயம் வில்வ மரங்கள் நிறைந்த வனத்தின் மத்தியில் அழகுற அமையப் பெற்றுள்ளது. கோமுக-மயூரநதிகளும், மணிமுக்தா நதியும் ஆலயத்தின் முன் சங்கமித்து, பின்னர் மணிமுக்தா நதி என்ற பெயரிலேயே விருத்தாசலம் நோக்கி பிரவாகிக்கிறது.

நல்லூரில் இருந்து சுமார் 2 கி.மீ. தொலைவில் உள்ள ஐவது குடியில், பஞ்ச பாண்டவர்கள் வாழ்ந்து வந்ததாக கூறப்படுகிறது. ஐவர்குடி என்ற ஊர்ப் பெயர் ஐவது குடியாக மருவியிருக்கலாம். அவர்களால் உருவாக்கப்பட்ட `லிங்கங்கள்' அவ்வூரில் இன்றும் காணக் கிடைப்பதாக கூறப்படுகிறது.


கல்ராயன் மலையில் உருவாகி மேற்கு மலைச் சரிவில் வழிந்தோடும் வசிஷ்டா நதியும், கொல்லி மலையில் உருவான ஸ்வேதா நதியும் இணைந்து வெள்ளாறு என்ற பெயரில், விருத்தாசலம் மற்றும் சிதம்பரம் தாலுக்கா (பெலாந்துறை, சேத்தியா தோப்பு) வழியாக பாய்ந்து பரங்கிப்பேட்டைக்கு தெற்கே வங்காள விரிகுடா கடலில் கலக்கிறது.

ஸ்ரீமுஷ்ணம் என்ற ஊரின் கிழக்கே சுமார் 10 கி.மீ. தொலைவில் உள்ள திருக்கூடலையாற்றூர் என்னும் ஊரில் மணிமுக்தா நதி, இந்த வெள்ளாற்றுடன் சங்கமிக்கிறது. நதிகள் கூடியதால் இந்த இடத்திற்கு திருக்கூடலையாற்றூர் என்னும் பெயர் உண்டாயிற்று. அந்நதிகளின் கரையில் சோழ நாட்டை ஆண்டு வந்த தினகர மகாராஜன் சிவாலயம் கட்டியுள்ளார். இங்குள்ள மூலவர் நர்த்தன வல்லபேஸ்வரர். ஞானசக்தி, பராசக்தி என்னும் அம்பாள் இருவர் அருள் பாலிக்கின்றனர். தல விருட்சம் கல்லால மரம் ஆகும். பிரம்ம தீர்த்தம், அகத்திய தீர்த்தம், காரத்தியயெனர் தீர்த்தம் மற்றும் சங்கம தீர்த்தம் (வெள்ளாறும் மணிமுக்தா நதியும் கூடும் இடம்) ஆகிய தீர்த்தங்கள் உள்ளன. தேவாரப் பாடல்கள் பெற்ற நடு நாட்டுத் தலங்களில் இதுவும் ஒன்று. கடலூர் மாவட்டம் சேத்தியாதோப்பில் இருந்து ஸ்ரீமுஷ்ணம் செல்லும் பாதையில் பயணித்தும் திருக்கூடலையாற்றூர்க்கு செல்லலாம்.



கோமுகநதி அணை, கள்ளக்குறிச்சி

மணிமுக்தா நதி - வெள்ளாறு வரைபடம்



பாகம்-2

அத்தியாயம்-2

முக்தியருளும் மணிமுக்தா நதி

அருளும் பொருளும் கைகூடும், அவலம் அகலும், கவலையறும்,
இருளும் மடியும், இடியும்போம் ஈறில் செல்வம் தழைத்தோங்கும்
தெருளும், திருவும் குடிகொள்ளும் சித்தி முக்தியுண்டாகும்
மருளும் பேயும் நோயும்போம் மணிமுக்தாற்றின் மூழ்கினர்க்கே.

கங்கை யமுனை பிரயாகை தலைக் காவிரி சந்திரபாகை
தங்கு கோதாவரி நருமதையே சரயு கோமதியே
நங்கண்டகி மாந்தாகினியே நவில் அஞ்சனை மந்தகை சோனை
பொங்குரேவை சிந்து சங்கம் பொழியும் கயை கௌசிகை குமரி.

பூமிசுவர்க்கம் பாதாளத்தில் புகலும் மற்றைத் தீர்த்தங்கள்
காமர்நதியும் கருங்கடலும் கலத்தன முதலாம் தீர்த்தங்கள்
தாம் அங்கே போய்மூழ்கு பலன் தன்னில் கோடி பலன் அதிகம்
வாம மணிமுத்தா நதியை வணங்கி ஒருநாள் மூழ்கினர்க்கே.

-அருள்மிகு ஞானக் கூத்த சிவப்பிரகாச சாமிகள்

திருமணிமுக்தா நதியில் நீராடியவர்களுக்கு சிவனருளும் சிவஞானச் செல்வமும் கிடைக்கும். அவலநிலை, கவலைகள், அஞ்ஞானம், (தெளிவின்மை), சோம்பல், தரித்திரமும் நீங்கும். தெளிவும், திருமகள் (லட்சுமி) வாசமும் எப்போதும் நீங்கமாலிருக்கும். அட்ட சித்தியும், வீடுபேறும் கிடைக்கும். குழப்பமும், தீய சக்திகளும், வியாதிகளும் நீங்கும்.

கங்கை, யமுனை, சரஸ்வதி, பிரயாகை, காவிரி, சந்திரபாகை, கோதாவரி, நர்மதை, சரயு,கோமதி, கண்டகி, மந்தாகினி, அஞ்சனை, மந்தமை, சோணை, ரேவை, சிந்து, சங்கம், கயை, கௌசிகை, குமரி ஆறு ஆகிய பல நதிகளிலும் நீராடி; பூமி, சொர்க்கம், பாதாளம் ஆகிய மூவுலகிலும் உள்ள மற்றத் தீர்த்தங்களிலும், அழகிய நதியும், கடலும் சங்கமிக்கும் தீர்த்தம் முதலியவற்றிலும் மூழ்கி நீராடிப் பெறும் பலனை விட மணிமுக்தா நதியில் நீராடுபவர்களுக்கு கோடி பங்கு அதிகமான பலன் உண்டாகும் என அருள்மிகு ஞானக்கூத்த சிவப்பிரகாச சாமிகள் அவர் எழுதிய விருத்தாசல புராணத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கோமுக, மயூர, மணிமுக்தா நதிகளின் சங்கமத்திலேயே தந்தையின் அஸ்தியை கரைத்து, ஸ்ரீ நல்ல நாயகருக்கு திருப்பணிகள் செய்து, பின்னர் தன் நாடு திரும்பினான்.

சந்திரன், தான் செய்த பாவ காரியங்களால் ஏற்பட்ட கொடிய ரோக நோய்க்கு ஆளாக நேரிட்டது. பிரம்ம தேவனின் கட்டளைப்படி இத்தல தீர்த்தத்தில் நீராடி, கார்த்திகை நட்சத்திரமும், பவுர்ணமியும் கூடிய திருநாளில், பசு நெய்யினால் இந்த திருக்கோயிலில் இலட்சம் திரு விளக்குகள் ஏற்றி, சிவனை வழிபட்டு நோய் நீங்கப் பெற்றார். சந்திரன் வணங்கிய லிங்கம் ஸ்ரீ சோமலிங்கேஸ்வரர் என்ற பெயரில் இன்னும் வழிபடப்படுகிறது.

இத்திருக்கோயிலில் தல விருட்சம் வில்வ மரம். மாசி மகப் பெரு விழா, பத்து நாட்களும் சிறப்பாக கொண்டாடப்படுகிறது.



ஸ்ரீ வில்வவனேஸ்வரர் திருக்கோயில், நல்லூர்

பாகம்-2

அத்தியாயம்-4

அருள்மிகு ஸ்ரீ நர்த்தன வல்லபேஸ்வரர் என்கிற நெறிகாட்டுநாதர் திருக்கோயில், கூடலையாற்றூர்

அருள்மிகு ஸ்ரீஞானசக்தி, ஸ்ரீ பராசக்தி சமேத அருள்மிகு ஸ்ரீ நர்த்தன வல்லபேஸ்வர சுவாமி (அருள்மிகு புரிகுழல் அம்மை உடனுறை ஸ்ரீ நர்த்தன வல்லபேஸ்வர என்கிற அருள்மிகு நெறிகாட்டுநாதர்), திருக்கோயில் திருக்கூடலையாற்றூரில் உள்ளது.



ஸ்ரீ நெறிகாட்டுநாதர் திருக்கோயில்,
திருக்கூடலையாற்றூர்

சோழ நாட்டை ஆண்டு வந்த தினகர மகாராஜன், தனது மனைவியின் நடத்தையில் சந்தேகப்பட்டு அவளைக் கொன்று விட்டான். இதனால் அவனுக்கு பிரம்மஹத்தி தோஷம் பிடித்துக் கொண்டது. அப்போது ஒரு சொரி நாய் அவனது பின்னால் வந்து கொண்டிருந்தது. ஒரு நாள் அந்த நாய் ஒரு நதியில் மூழ்கி எழுந்தவுடன் ஆரோக்கியத்துடனும் தோற்றப் பொலிவுடனும் விளங்கியது.

இதைப் பார்த்த மன்னன் தானும் அந்நதியில் நீராடி தனது தோஷம் நீங்கப் பெற்று நாடு நகரத்தை திரும்பப் பெற்றான். அவன் நீராடிய இடத்தில் இரண்டு நதிகள் கூடின, அவன் நீராடிய இடமே வெள்ளாறும் மணிமுக்தா நதியும் சங்கமிக்கும் பகுதி. அந்த நதிகளின் கரையில் சிவாலயம் கட்டினான். நதிகள்

கூடியதால், திருக்கூடலையாற்றூர் என்று பெயரும் வைத்தான். மன்னன் கட்டிய கோயில் பழுதடைந்தது. சிலைகளைக் காணவில்லை. அப்போது அம்மன் அவ்வூர் பொன்னப்ப குருக்களின் கனவில் தோன்றி, நான் ஆற்றில் கிடக்கிறேன் என்றாள். அதன் பின் குருக்கள் ஆற்றில் கிடந்த சிலைகளை எடுத்து தற்போதுள்ள கோயிலை கட்டி சிலைகளை பிரதிஷ்டை செய்தார்.

ஸ்ரீ சுந்தர மூர்த்தி நாயனாரை இத்தல இறைவன் தடுத்தாட் கொண்டு பதிகம் பாட வைத்தார். தல விருட்சமாக கல்லால மரம் உள்ளது.

இக்கோயிலில் நவக்கிரகங்கள் சந்நிதி இல்லை. சனி பகவான்-க்கு தனி சந்நிதி அமைந்துள்ளது.



பாகம்-2

அத்தியாயம்-5

ஏனைய நான்கு தீர்த்தங்கள்

மணிமுக்தா நதி, அக்னி தீர்த்தம், சக்கர தீர்த்தம், நித்தியானந்த கூபம் மற்றும் குபேரத் தீர்த்தம் என ஐந்து புனித தீர்த்தங்கள் இச்சிவபதியிலும் திருக்கோயிலிலும் உள்ளன.

அக்கினி தீர்த்தம்:

திருக்கோயிலின் ராஜகோபுரத்தின் வழியே நுழைந்து இடப்புறம் செல்லும் வழியில் விபசித்து முனிவர் மண்டபத்தில் நேர் கிழக்கே அக்கினி தீர்த்தம் என அழைக்கப்படும் நடைக் கிணறு உள்ளது. பிரம்மா தனது நித்திய நியமங்களை முடிக்கும் பொருட்டு உருவாக்கிய தீர்த்தம் அக்கினி தீர்த்தம். இந்த தீர்த்தத்தில் விரும்பி நீராடுபவர்கள் தத்தம் பாவங்களை அக்கினியில் இட்டு தகித்து, வினைகள் ஒழிந்து வீடு பேற்றை அடைவார்கள்.

சக்கரத் தீர்த்தம்:

கைலாயப் பிரகாரத்தின் தென்மேற்கு மூலையில் சக்கரத் தீர்த்தம் எனும் குளம் உள்ளது. இத்தீர்த்தம் திருமாலின் சக்கரத்தால் உண்டாகியது என்று கூறப்படுகிறது. திருமால், லட்சுமி உடன் சேர்ந்து இந்தத் தீர்த்தத்தில் நீராடி பழமலை நாதரை வழிபட்டு, அவர் அருளால் உலகை காக்கின்றார். இந்த தீர்த்தத்தில் நீராடுவோருக்கு நினைத்தவையெல்லாம் சித்தியாகும்.

நித்தியானந்த கூபம்:

தல விருட்சமான வன்னி மரத்தின் அருகில் நித்தியானந்த கூபம் எனும் தீர்த்தம் உள்ளது. பிரம்மா தான் உண்டாக்கிய இந்த தீர்த்தத்தைக் கொண்டு, பழமலை நாதரை நீராட்டி, பூசித்து பல சித்திகளையும், உலகங்களையும் படைக்கும் ஆற்றலும் பெற்று மகிழ்ந்தார். சிவசக்தி உருவாய் விளங்கும் இத்தீர்த்தத்தை அருந்துபவர்கள் மேன்மையான முக்தி அடைவர்.

குபேர தீர்த்தம்

வடக்கு கோபுர வாயிலின் அருகில் உட்பக்க மதில் சுவரை ஒட்டி, பெரிய நாயகி அம்மனின் கொடி மரத்தின் நேர் எதிரே குபேர தீர்த்தம் உள்ளது. இது குபேரனால் உண்டாக்கப்பட்டது என்றும் இத்தீர்த்தத்தை அருந்துபவர் செல்வ வளம் பெற்று மகிழ்வர் என்றும் கூறப்படுகிறது.

பாகம்-3

மூர்த்தம்

அத்தியாயம்-1

பழமலை நாதரும் விருத்தாம்பிகையும்

தூசினால் அம்மை வீச தொடையின் மேல் கிடத்திதுஞ்சும்
மாசிலா உயிர்கட்கெல்லாம் அஞ்செழுத்து இயல்புகூறி
ஈசனும் தனது கோலம் இயன்றிடும் இயல்பால் அந்த
காசியின் விழுமைத்தான முதுகுன்றவரையும் கண்டாய்.
-கந்த புராணம் வழிநடைப் படலம்.

ஆதியில் மண்ணுலகைப் படைக்க எண்ணிய பிரம்மா முதலில் நீரைப் படைத்தார். அப்போது திருமால் காதுகளில் இருந்து தோன்றிய அரக்கர்களான இரு மதுக்கடவர்கள் திருமாலை சண்டையிட அழைத்தனர். சண்டையில் திருமால் தோற்க நேரிடுகிறது. வெற்றி பெற்ற மதுக்கடவர்கள் திருமாலிற்கு கேட்ட வரம் அளிப்பதாக கூறுகின்றனர். உடனே திருமால் தன்னால் மதுக்கடவர்கள் இருவரும் அழிக்கப்பட்ட வேண்டும் என கேட்கிறார். வேறு வழியின்றி அவர்களும் அதற்கு சம்மதிக்கின்றனர். திருமாலினால் வெட்டி வீழ்த்தப்பட்ட இருவரது உடல்களும் நீரில் மிதந்ததை பிரம்மா கண்டு, நீரும் அவ்வுடல்களின் தசைகளும் ஒன்றாக இறுகி மண்ணுலகம் தோன்றுமாறு சிவபெருமானை வேண்டினார். மேதையும் (தசையும்) நீரும் ஒன்றாக இறுகி மண்ணுலகைப் படைத்தார் சிவன். இதனால் இவ்வுலகிற்கு மேதினி என பெயர் வழங்கலாயிற்று.



ஸ்ரீபழமலை நாதரை வணங்கும் திருமாலும், பிரம்மாவும்



பூமிக்குள் மறைந்த பழமலையின் உச்சி

சிவபெருமான் ஒரு மலை வடிவமாக தோன்றி எதிர் நின்றார். இதனை யறியாத பிரம்மா, தான் படைத்த மலைகளுக்கு இருக்க இடம் இல்லை என்பதை உணர்ந்து பெரிதும் வருந்திக் கலக்கமுற்றார்.

சிவபெருமான் பிரம்மாவை நோக்கி, ‘நாமே இம்மலை வடிவாகத் தோன்றி நின்றோம். நான் வேறு, இம்மலை வேறு இல்லை. இந்த மலை தோன்றிய பின்னரே உன்னால் பல மலைகள் தோன்றின. நம் மலைக்குப் பழமலை என்ற பெயர் வழங்குவதாக மற்றும் இப்பழமலை மண்ணுலகுக்கு



அச்சாணியாக அழுந்தி நின்று மேலே சிவலிங்கமாக விளங்கி நிற்கும். இதனை வழிபட்டோர் எவரும் விரும்பிய பயனை எய்தி இன்புறுவர்' என திருவாய் மலர்ந்து, மறைந்தருளினார்.

பூமிக்குள் அழுந்தி, மறைந்த இப்பழமையின் உச்சி நகரின் வடக்கே சுமார் 3 கி.மீ. தொலைவில் வயலூர்-இல் காணப்படுவதாக 1906 ஆம் வருடத்திய தென்னாற்காடு மாவட்ட அரசு இதழில் குறிப்பிடப்பட்டுள்ளது. நகரின் வடக்கே உளுந்தூர்பேட்டை செல்லும் சாலையில், வயலூர் - கிராம நிர்வாக அலுவலரின் (வி.ஏ.ஓ.) அலுவலகம் தற்சமயம் புதுகுப்பம் என்ற பகுதியில் உள்ளது. அந்த அலுவலகத்தை ஒட்டிச் செல்லும் மலையடிச் சாலையின் இறுதியில் ஓர் ஆலமரம் உள்ளது. அந்த ஆல மரத்திற்கு முன்பாக சாலையின் நடுவில் ஒரு பாறை பூமிக்கு மேல் உயர்ந்து இருந்துள்ளது. இப்பாறையே மேற்சொன்ன அரசிதழில் குறிப்பிடப்பட்டுள்ள பூமிக்குள் மறைந்த பழமலையின் உச்சியாக இருக்க வேண்டும். இவ்வூர் மக்கள் போக்குவரத்துக்கு ஏதுவாக அந்த பாறையை முழுவதுமாக அகற்ற முயற்சித்தனர். அது முடியாமல் போகவே தரை மட்டத்திற்கு மேல் இருந்த அந்த பாறையின் மேற்பகுதியை மட்டும் வெட்டி எடுத்து விட்டனர். அந்த பாறையின் மற்ற பகுதி பூமிக்குள்ளேயே உள்ளது.

பாறை உடைத்து எடுக்கப்பட்டதன் அடையாளமாக தற்போது பூமிக்குள்ளே இருக்கும் பாறையின் உச்சிப் பகுதி தரை மட்டத்தில் உள்ளதை காண முடிகிறது. வெட்டி எடுக்கப்பட்ட பாறையின் துண்டு அதன் அருகில் காணப்படுகிறது. இவ்வூர் மக்கள் இப்பழமலையின் சிறப்பு, பெருமை அறியாததால் அவ்வாறு செய்து விட்டனர்.

இப்பகுதியில் உள்ள மேலக் கொல்லை என்னும் சற்று மேடான இடத்தில் இருந்து முற்காலத்தில் திருவண்ணாமலை தீபத்தின் ஒளியைக்கண்டு தரிசித்துள்ளனர். (அக்காலத்தில் காற்று மாசற்று இருந்த காரணத்தினால் தீப ஒளியை காண முடிந்தது.)



மேலக்கொல்லை



சைவ சமயாச்சாரியர்களான திருநாவுக்கரசர் நாயனாரும், திருஞானசம்பந்தர் நாயனாரும் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள். அவர்களுள் திருநாவுக்கரசு நாயனார் நம் பழமலை நாதர் மேல் 'கருமணியை கனகத்தின் குன்றொப்பானை' என்னும் திருத்தாண்டகம் பாடித் தரிசித்து இன்புற்றுள்ளார். திருஞானசம்பந்த நாயனார் 'மத்தாவரை நிறுவி' என்னும் பதிகம் முதலிய ஏழு வகைத் தேவாரப் பதிகங்கள் பாடித் தரிசித்து இன்புற்றுள்ளார்.

சுந்தரமூர்த்தி நாயனார் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். 'முறிச்சிக்கை நம்பிகட் செய் முதுகுன்றர்' (பழமலைக் கோவை - பாடல் 223) என ஆவண ஓலையினைக் காட்டி சுந்தரமூர்த்தி நாயானாரை ஆட்கொண்டதும்; 'பாட்டிற்குரிய வெழிற் சுந்தரற்கு பரவையினை கூட்டியருந் திருமுதுகுன்றம்' (ப.கோ.பாடல் 314) என அவருக்கு பரவை நாச்சியாரை மணஞ்செய்வித்ததும் பழமலைநாதரே என்பதை துறைமங்கலம் சாமிநாதைய தேசிகர் 1759ஆம் ஆண்டில் எழுதிய 'பழமலைக் கோவை' எனும் நூல் மூலம் அறிய முடிகிறது.

சுந்தரமுர்த்தி நாயனார் பழமலை நாதர் மேல் 'நஞ்சிடையின்று நாளை' என்னும் திருப்பதிகம் பாடிச் சிலநாட்கள் முதுகுன்றிலே தங்கியிருந்தார். மற்றொரு நாள், பொன் வேண்டும் என்னும் குறிப்போடு 'மெய்யை முற்றப் பொடி பூசியோர் நம்பி' என்னும் பதிகம் பாடினார். பழமலை நாதர், குறிப்பு உணர்ந்து பன்னீராயிரம் பொன் கொடுத்து அருளினார். அதனைக் கண்ட சுந்தரர், இப்பொன்னெல்லாம் ஆரூர் வந்து கிடைக்குமாறு அருள் செய்ய வேண்டும் என்று மீண்டும் வேண்டினார். பழமலை நாதர், 'சுந்தரனே! நீ இப்பொன்னை திரு மணிமுக்தாற்றில் இட்டுச் செல்க, ஆரூரிலுள்ள கமலாலயத்தில் கிடைக்குமாறு செய்வோம்' என்று வான்மொழி வாயிலாக அருள் செய்தார்.

சுந்தரரும் மச்சம் வெட்டி (மாதிரிக்காக பொன்னில் ஒரு துண்டை வெட்டி எடுத்தல்) எடுத்துக் கொண்டு பொன் முழுவதையும் திரு மணிமுக்தா நதியில் புகவிட்டு ஆரூர் சென்றார். சுந்தரர்-க்கு உதவிபுரியும் பொருட்டு, பிள்ளையார், சுந்தரர் பக்கத்தில் இருந்து பொன்னை உரைத்துப் பார்த்து அந்தப் பொன் மாற்றுக் குறையாத பொன் என்று உரைத்தார். அவரே அறுபத்து மூவர் பிராகாரத்தின் தென்மேற்கு மூலையில் 'மாற்றுரைத்த விநாயகர்' ஆக எழுந்தருளி உள்ளார்.



ஸ்ரீ பழமலைநாதர் கர்பக்கிரக விமானம்

ஒரு நாள், 'திருமுதுகுன்றர் தந்த பொன்னைத் திரு மணிமுக்தா நதியில் இட்டு வந்துள்ளேன். அதனை இங்குள்ள கமலாலயத்தில் எடுத்து வருவோம் வா' என்று பரவையாரை உடனழைத்தார். பரவையார், 'இது என்ன வியப்பு' என்று புன்னகை செய்து உடன் சென்றார். சுந்தரர் பரவையாருடன் பூங்கோயில் புகுந்து வான்மீக நாதரை வணங்கிக் கொண்டு கமலாலயம் சென்றார். பரவையாரைக் கரையில் நிறுத்தி வைத்துத் தான் குளத்திலே இறங்கினார். முழுகித் தடவிப் பார்த்தார். பொன் கிடைக்கவில்லை. பழமலை நாதர், சுந்தரரைக் கொண்டு, திருப்பதிகம் பாடுவிக்க வேண்டும் என்று விரும்பினார்.




ஸ்ரீ விருத்தாம்பிகை கர்பக்கிரக விமானம்

பொன்னை வருவிக்காமல் காலந் தாழ்த்தினார். பரவையார் நகைத்து, 'ஆற்றிலே இட்டுக் குளத்திலே தேடுகிறீரா? என்று கேலி செய்தார். அதைக் கேட்ட சுந்தரர் மனம் வருந்தித் திருமுதுகுன்றர் மேல் 'பொன் செய்த மேனீயீர்' என்னும் திருப்பதிகம் பாடிப் பொன்னைத் தருமாறு வேண்டினார், பொற்குவியல் வந்து எய்தியது. கரையேற்றி மச்சத்தோடு உரைத்து ஒத்திட்டுப் பார்த்தார்.

இது உரை தாழ்ந்திருந்தது. மீண்டும் சுந்தரர், உரை தாழாதிருக்க வேண்டுமெனப் பாடினார். பழமலைநாதர் உரை தாழாதிருக்குமாறு அருள் செய்தார். பரவையரும், சுந்தரரும் பழமலை நாதரின் திருவருளை உணர்ந்து வாழ்த்தி இன்புறலாயினர். திருவாரூரிலும் விநாயகர் பொன்னை உரைத்துப்பார்த்து அந்த பொன் மாற்று குறையாத பொன் என்று உரைத்தார். கமலாலய குளத்தின் கீழ்க் கரையில் வட கோடியில் 'மாற்றுரைத்த விநாயகர்' சன்னதி உள்ளது.

கன்னட நாட்டு மன்னர் ஒருவர் கி.பி. பதினாறாம் நூற்றாண்டில் துறவுபூண்டு தன் நாட்டை விட்டு வெளியேறினார். அவர், பேரையூர் சாந்தலிங்கவடிகளிடம் சிவஞான உபதேசம் பெற்றுக் கொண்டு திருமுதுகுன்றம் வரலானார். வழியிடையில், அருந்த நீரின்றி நாவரண்டு பெரிதும் வருந்தலானார். 'அடியார்க்கெளியராம் பழமலை நாதர், வழியிடையில் தண்ணீர் பந்தல் வைத்து நீர் கொடுத்து ஆதரித்தார். மன்னர் துறவி, நீரருந்தி களை நீங்கி முதுகுன்றம் வந்தார். பசிப்பிணி வருத்தியது. மெய் சோர்ந்து ஓர் அரசமரத்தடியில் படுத்து நாயகியைச் சிந்தித்திருந்தார். அன்னை பெரிய நாயகியார் மனம் இரங்கினார். முதியவள் போல் உருவந் தாங்கி வந்து மன்னராம் துறவியை மடிமேல் எடுத்திருத்தினார். தாம் பொன்வள்ளத்தில் கொண்டு வந்த பாலை அவருக்குப் புகட்டினார். அவர், களை நீங்கி கண் விழித்துப் பார்த்தார்; வியப்புற்றார்; 'நீ யாரம்மா?' என்றார்.

பெரிய நாயகியார், 'அப்பா! குமாரதேவா! நான் தான் நினது அன்னை பெரிய நாயகியார். நின் பசியாற்ற வந்தேன். நீ இங்கு தானே இருப்பாயாக' என்று அருள் செய்து மறைந்தருளினார். அது முதல் அவருக்கு குமாரதேவர் என்ற பெயர் வழங்கலாயிற்று. குமாரதேவர், பெரிய நாயகியார் மேல் 'விரிவுறு முருவ நாமமதகற்றின்' என்னும் திருப்பதிகம் பாடி அப்பதிலேயே தங்கியிருந்தார், இடையிடையே பல அற்புத திருவிளையாடல்கள் புரிந்து வந்தார். தான் அனுபவித்த சிவானுபவ உண்மைகளைத் தமிழில் பதினாறு நூல்களாகப் பாடியருளினார். வாழ்நாள் இறுதியில் ஒரு புரட்டாசித்திங்கள் பூர ஓரையில், சிவானந்தப் பேரொளியில் இனிது கலந்தருளினார். இவரது கோயில் திருமுதுகுன்றின் தென் கீழ் மூலையில், பெண்ணாடம் சாலையில் 'குமாரதேவர் மடம்' என்ற பெயரில் அமைந்துள்ளது.



ஸ்ரீ குமாரதேவர்

பாகம்-3

அத்தியாயம்-2

பாலாம்பிகை

கி.பி. 16ஆம் நூற்றாண்டில், குருநமசிவாயர் என்னும் பெயருடைய சிவனடியார் ஒருவர் இருந்தார். அவர் தாமிருந்த திருவண்ணாமலையை விட்டுத் தில்லை செல்ல வந்தார். வழியிலுள்ள திருமுதுகுன்றில் ஒரு நாள் இரவு தங்க நேர்ந்தது. பழமலை நாதரையும் பெரிய நாயகியாரையும் தரிசித்துக் கொண்டு கோயினுள் ஒரு பக்கத்தே படுத்திருந்தார். பசிப்பிணி வருத்தியது. அவர் பசிமிகுந்த போதெல்லாம் அம்பிகையைப் பாடி, அவரளிக்கும் உணவை உண்பவர். ஆதலின், அவ்வழக்கப்படி இங்கும் பெரிய நாயகியாரை நினைத்து,

'நன்றிபுனையும் பெரிய நாயகி யெனுங்கிழத்தி,
என்றும் சிவனாரிடக்கிழத்தி - நின்ற
நிலைக்கிழத்தி மேனிமுழு நிலக் கிழத்தி
மலைக் கிழத்தி சோறு கொண்டு வா'

என்று ஒரு வெண்பா பாடினார். பெரிய நாயகியார் ஒரு முதியவள் போல் எதிர்வந்து 'ஏனப்பா என்னைப் பலவற்றாலும் கிழத்தி' எனப் பாடினாய்? கிழத்தி சோறும் நீரும் எவ்வாறு எடுத்து வர இயலும்? என்றார். அதனைக்கேட்ட குருநமசிவாயர்,

'முத்த நதி சூழும் முதுகுன் றுறைவாளே
பத்தர் பணியும் பதத்தாளே - அத்தன்
இடத்தாளே முற்றா இளமுலைமே லார
வடத்தாளே சோறு கொண்டு வா

என பாடினார். பெரிய நாயகியார் மகிழ்ச்சியுற்று உடனே இளமை நாயகியாகி சோறும் நீரும் படைத்தார். குருநமசிவாயர் உண்டு பசியாறி இனிது மகிழ்ந்தார். அதன் பின்னரே இவ்வூரில் இளமை நாயகியார் கோயில் தனியே ஏற்பட்டது. இந்த இளமை நாயகியார் கோயில் அறுபத்துமூவர் பிரகாரத்தில் வடமேற்கு மூலையில் இருக்கின்றது. இவ்வம்மையைப் பாலாம்பிகை என்றும் பெயரிட்டு வணங்கி அருள் பெறுவர்.



குருநமச்சிவாயர்

பாகம்-3

அத்தியாயம்-3

பழமலை நாதர் கோயில் கொண்டுள்ள மற்ற நான்கு தலங்கள்


ஸ்ரீ ஆழத்துவிநாயகர், வெங்கனூர்

1.வெங்கனூர்:

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை தாலுக்காவில் வெங்கனூர் என்னும் பதி ஒன்றுள்ளது. அதில், கி.பி. 16ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆதிலிங்க ரெட்டியார் என்னும் பெயருடைய சிவநேசச் செல்வர் ஒருவர் இருந்தார். அவர், பழமலை நாதரை ஒவ்வொரு பிரதோஷ காலத்திலும் தவறாது வந்து தரிசித்து செல்வார். தான் வரும்பொழுது தன் அருமைக் குமாரர் அண்ணாமலை ரெட்டியாரையும் உடனழைத்து வருவது வழக்கம். ஒரு பிரதோஷ காலத்தன்று வழக்கம்போல் குமாரரும் தானும் குதிரையில் வந்தனர். வழியிலுள்ள வெள்ளாறு இருகரையும் நீர் புரண்டு வெள்ளப் பெருக்காய் இருக்க கண்டார். கடக்க வேறு வழியில்லை. பழமலை நாதரிடத்து நான் கொண்ட அன்பு உண்மை அன்பாக இருக்குமாயின் ஆறு கடந்து செல்வேன். இல்லையேல் இறந்துவிடுவேன் என்று உறுதி கொண்டார். பழமலை நாதரைச் சிந்தித்தபடியே ஆற்றில் இறங்கினார். இருவரும் இடரின்றி ஆற்றைக் கடந்து கரையேறினர். பிரதோஷ காலம் தவறாது பழமலை வந்து தரிசனம் செய்து கொண்டு அன்றிரவு அவ்விடம் தங்கியிருந்தனர். பழமலை நாதர் ஆதிலிங்க ரெட்டியார் கனவில் தோன்றி 'அன்பனே இனிமேல் நீ இங்கு வாரற்க, நாமே நின் ஊரில் வந்து காட்சி தருவோம்' என்று அருள் செய்து மறைந்தருளினார்.



ஸ்ரீ விருத்தாசலேஸ்வரர் ஆலயம் வெங்கனூர்


ஸ்ரீ விருத்தாசலேஸ்வரர் ஆலய ராஜகோபுரம் மற்றும் வன்னிமரம்

ஆதிலிங்க ரெட்டியார், பழமலை நாதர் திருவருளை வியந்து வாழ்த்தி வணங்கி ஊர் திரும்பினார். பழமலை நாதர், பெரிய நாயகியாருடன் வெங்கனூரில் எழுந்தருளி காட்சி தந்தார். ஆதிலிங்க ரெட்டியார் கண்டு தரிசித்து அன்பார வாழ்த்தினார். உடனே பழமலை நாதருக்கும் பெரிய நாயகியாருக்கும் திருக்கோயில் வகுக்கத் திருப்பணி ஆற்றி வந்தார். திருப்பணி முடிவதற்குள் ஆதிலிங்க ரெட்டியார் சிவ பெருமானது திருவடி நிழலில் கலந்தருளினார். அவர் குமாரர் அண்ணாமலை ரெட்டியார் எஞ்சிய திருப்பணிகளை இனிது முடித்து சகாப்தம் 1545-ல் (கி.பி.1623ல்) கும்பாபிஷேகம் செய்தருளினார். அவர்களது பரம்பரையினரின் பராமரிப்பில் இருந்த இக்கோயில் தற்போது இந்து அறநிலையத் துறையினால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

பெரம்பலூரில் இருந்து ஆத்தூர் செல்லும் வழியில் சுமார் 22 கி.மீ. தொலைவில் வெங்கனூரில் ஸ்வேதா நதிக் கரையில் விருத்தாசலேஸ்வரர் திருக்கோயில் அமைந்துள்ளது. இங்கு பெரிய நாயகி மற்றும் இளைய நாயகி உடன் விருத்தாசலேஸ்வரர் எழுந்தளியுள்ளார். இங்கும் தல விருட்சம் வன்னி மரம். வன்னி மரத்தடியில் பிரம்மா, விஷ்ணு, சிவன் மற்றும் விபசித்து முனிவர் எழுந்தருளி உள்ளனர். இங்கும் ஒரு ஆழத்து விநாயகர் அமைந்துள்ளார்.



ஸ்ரீ முதுகுன்றீஸ்வரர் ஆலயம், முதனை

விருத்தாசலம், வெங்கனூர் மற்றும் கொடுமுடி ஆகிய மூன்று சிவத் தலங்களும் ஒரே நேர் கோட்டில் அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. மூன்று தலங்களிலும் வன்னி மரம் தல விருட்சமாக அமைந்துள்ளது. மூன்று தலங்களிலும் பிரம்மா, விஷ்ணு மற்றும் சிவன் எழுந்தருளியுள்ளனார். மூன்று திருக்கோயில்களும் நதிக் கரையில் அமைந்துள்ளன.

2. முதுநெய் என்கிற முதனை

கி.பி.12 ஆம் நூற்றாண்டின் இறுதியில், காடவர் தலைவர்களான கச்சிராயர் என்பவர்கள் இந்நடு நாட்டில் அரசு செலுத்தி வந்துள்ளார்கள். அவர்களுள் ஒருவர் சிவநெறிச் செல்வராக, விருத்தாசலத்தில் இருந்து சுமார் 15 கி.மீ. தொலைவில் உள்ள 'முதுநெய்' என்னும் கிராமத்தில் வாழ்ந்து வந்தார். தற்சமயம் இந்த கிராமத்தின் பெயர் 'முதனை' என்பதாகும்.



ஸ்ரீ முதுகுன்றீஸ்வரர் ஆலய நன்னீர்குளம்


ஸ்ரீ பழமலைநாதபுர ஆலயம்

ஒவ்வொரு நாளும் தவறாது 'முதனை'-யில் இருந்து விருத்தாசலம் வந்து பழமலை நாதரை தரிசித்து செல்வார். எவ்வளவு இடுக்கண் நேரினும் பழமலை நாதரை வந்து தரிசிக்காது உணவருந்தார். கச்சிராயர் முதுமை எய்தியபோது தினந்தோறும் விருத்தாசலம் வரை சென்று பழமலை நாதரை வணங்க மிகவும் சிரமப்பட்டார். பழமலை நாதர் அவரது அன்பிற்கிரங்கி அருள் புரிய எண்ணினார். தாமே பெரிய நாயகியாருடன் அம்'முதுநெய்' என்னும் பதியில் திருவுருக்கொண்டு எழுந்தருளிக் காட்சி தரலானார். பழமலை நாதருக்கும் பெரிய நாயகியாருக்கும் முதுநெய்-யிலேயே கச்சிராயர் திருக்கோயில் கட்டினார். நாள் விழா, ஆண்டு விழா முதலியன இனிது நடைபெறுமாறு செய்தார். வாழ்நாள் முழுவதும் அன்பாரப் பூஜித்து இறைவன் அடிசேர்ந்தார்.

அதுமுதற்கொண்டு பழமலை நாதர் முதுநெய் என்னும் பதியிலும் தன்னை வழிபடுவோர்க்கு முதுகுன்றீஸ்வரர் என்ற பெயரிலும், அம்பாள் பெரிய நாயகி என்ற பெயரிலும் பக்தர்களுக்கு கேட்ட வரத்தை அளித்து அருள் செய்து வருகிறார்கள்.

இக்கோயிலில் முதுகுன்றீஸ்வரர்-ஐயும் அம்பாள் பெரிய நாயகி-ஐயும் மஹா மண்டபத்தின் மத்தியில் நின்று ஒரே நேரத்தில் தரிசிக்கலாம். தல விருட்சம் கொன்றை மரம், தீர்த்தம் நன்னீர் குளம். இத்தலத்தில் செம்புலிங்க அய்யனார் திருக்கோயிலும் அமைந்துள்ளது.


ஸ்ரீ கழுமலைநாதர் என்கிற ஸ்ரீ விருத்தகிரீஸ்வரர் ஆலயம், ஜெயங்கொண்டம்

3.பழமலை நாதபுரம்:

விருத்தாசலத்திற்கும் அருகில் உள்ள திட்டக்குடியில் இருந்து அகரம் சிகூர் வழியாக சுமார் 10 கி.மீ. தொலைவில் உள்ள துங்கரபுரத்தில் இருந்து 2 கி.மீ. தொலைவில் பழமலை நாதபுரம் என்ற தலம் உள்ளது. இத்தலத்தில் பழமலை நாதர், பெரிய நாயகி உடன் எழுந்தருளியுள்ளார. தல விருட்சம் வன்னி மரம். பழமலை நாதபுரம் பற்றிய தலபுராணம் ஏதும் கிடைக்கவில்லை.

4.ஜெயங்கொண்டம்:

அருள்மிகு பெரிய நாயகி உடனுறை கழுமலை நாதர் என்கிற விருத்த கிரீஸ்வரர் ஆலயம் ஜெயங்கொண்டத்தில் உள்ளது. விருத்தாசலத்திற்கு தெற்கே சுமார் 36 கி.மீ. தொலைவில் கும்பகோணம் செல்லும் பாதையில்,

ஜெயங்கொண்டம் உள்ளது. (இங்கிருந்து 10 கி.மீ. தொலைவில் கங்கை கொண்ட சோழபுரம் உள்ளது.)

கி.பி.11ஆம் நூற்றாண்டில் மாமன்னர் இராஜராஜ சோழனின் பேரன் ஜெயங்கொண்ட சோழன் என்கிற இராஜாதிராஜ சோழன்-ஆல் இவ்வாலயம் கட்டப்பட்டது. மூலவர் ஸ்ரீகழுமலை நாதர் என்கிற ஸ்ரீ விருத்தகிரீஸ்வரர் பதினாறு முக லிங்கமாக பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளார். அவரது துணைவியார் பெரிய நாயகியார் தென்திசை நோக்கி அருள்பாலிக்கிறார். நடராஜர், இரட்டைப் பிள்ளையார், முருகர் மற்றும் நவகிரக சன்னதிகளும் அமைந்துள்ளன. மூலவர்-க்கு பின்புறத்தில் ஒரு சிறிய கோயில் உள்ளது. அங்கு ஸ்ரீபழமலை நாதரும், ஸ்ரீ விருத்தாம்பிகை-யும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளனர். இந்த இரு கோயில்களுக்கும் இடையே ஸ்ரீ முருகன் சன்னதி உள்ளது.

முன்னொரு காலத்தில் இவ்வூர் வழியாக மிளகு வியாபாரி ஒருவர் விருத்தாசலத்திற்கு மிளகு மூட்டையுடன் சென்றுள்ளார். வழியில் உள்ள சுங்கச் சாவடியில் மிளகிற்காக கட்ட வேண்டிய வரித் தொகையை குறைத்துக் கொள்ளும் நோக்கத்துடன், தான் கொண்டு வந்த மூட்டையில் பருப்புகள் தான் உள்ளன என கூறியுள்ளார். விருத்தாசலத்தை அடைந்ததும் மூட்டைகளை பிரித்துப் பார்த்தபோது, அவற்றில் இருந்த மிளகுகள் அனைத்தும் பருப்பாகவே மாறி இருந்தன.



ஜெயங்கொண்டம் ஆலயத்தின் மூலவர் பின்புறம் உள்ள ஸ்ரீ பழமலைநாதர் ஸ்ரீவிருத்தாம்பிகை கோயில்

விருத்தாசலத்தில் கோயில் கொண்டுள்ள ஸ்ரீபழமலை நாதர் இடம் சென்று சுங்கச் சாவடியில் தான் பொய் சொல்லியது குறித்து வருந்தி வணங்கினார். பொய் சொன்ன இடத்திற்கே திரும்பச் சென்று, அங்குள்ள சிவனை வேண்டி வணங்கும்படி ஓர் அசரீரி (தெய்வ வாக்கு) ஒலித்தது. அதன்படி அந்த வியாபாரி மீண்டும் ஜெயங்கொண்டம் சென்று ஈசனை வணங்க, பருப்புகள் அனைத்தும் ஈசனின் அருளால் மீண்டும் மிளகுளாக மாறின.

இங்கு நெல்லி மரம் தல விருட்சம். இக்கோயில் இந்து அறநிலையத் துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. ஜெயங்கொண்டம் பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ளது. இவ்வூர் மக்களால் சிவன் கோயில் என்றே அழைக்கப்படுகிறது.

தற்சமயம் இத்திருக்கோயிலில் மூலவர் பெயர் ஸ்ரீ கழுமலை நாதர் என்றே பொறிக்கப்பட்டுள்ளது. அறநிலையத் துறை பதிவேடுகளிலும் இப்பெயரே உள்ளதாக அறியப்படுகிறது. மூலவரின பெயரை 'ஸ்ரீ கழுமலை நாதர் என்கிற ஸ்ரீ விருத்தகிரீஸ்வரர்' என மாற்றம் செய்ய வேண்டும் என்று ஆதாரங்களுடன் சென்னையில் இந்து சமய அறநிலையைத் துறை ஆணையரிடம் கடிதம் சில மாதங்களுக்கு முன் கொடுக்கப்பட்டுள்ளது.

பாகம்-3

அத்தியாயம்-4

உற்சவங்கள்



ஸ்ரீ பூரணை மற்றும் ஸ்ரீ புஷ்கலை சமேத ஸ்ரீ அய்யனார்

பழமலை நாதர் திருக்கோயிலில் வைகாசியில் வசந்த உற்சவம், ஆனியில் ஆனித் திருமஞ்சனம், ஆடியில் திருக்கல்யாணம். மார்கழியில் மாணிக்கவாசகர் உற்சவம், மாசியில் மாசி மகம் (பிரம்மோற்சவம்) ஆகிய ஐந்து உற்சவங்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

ஆடித் திங்கள் பூர ஓரையில் நடைபெறும் திருக்கல்யாண விழா சிவ பெருமான் தனது அருட்சக்தியோடு கூடியிருந்தே எச்செயல்களையும் நடத்தி வருகின்றார். தனித்திருந்து நடத்துகின்றாரில்லை. சிவமும் சக்தியும், தீயும் வெம்மையும் போல, நீரும் தன்மையும் போல என்றும் ஒன்றாக உள்ளது என்ற உண்மையை மக்கள் அறிந்து கொள்வதற்காக நடக்கும் விழா.

மாசித் திங்கள் மகோற்சவ விழா, படைத்தல், காத்தல், அழித்தல் (ஒடுக்கல்), அருளல், மறைத்தல் என்னும் ஐந்தொழிற்கும் தலைவராக உள்ளவர் சிவபெருமான் என்னும் உண்மையை மக்கள் அறிந்து இன்புறுவதற்காக நடக்கும் விழா.

பிரம்மம் மஹத் என்னும் சொற்கள் பெரியது என்னும் பொருளைத் தருவனவாம். உற்சவம் என்பது படைப்பு வழியைக் குறிப்பது எனவும், இன்பத்தை உண்டு பண்ணுவது எனவும் கடவுள் கோயிலினின்று வெளிவருதல் எனவும் மக்களை நல்வழியில் ஏவுகின்றன எனவும் பொருள்படும். ஆதலால், இறைவன் மக்களை நல்வழியில் ஏவுவதற்காக கோயிலின் வெளியே வந்து காட்சி தரும் பெரிய திருவிழாவிற்குப் "பிரம்மோற்சவம் அல்லது மகோற்சவம்" என்று பெயர் கூறுவர்.



அய்யனார் கோயில், விருத்தாசலம்

விருத்தாச்சலம் நகரில், அய்யனார் கோயில் வீதியின் கடைசியில் ஆற்றங்கரை ஓரம் அய்யனார் கோயில் அமைந்துள்ளது. அக்ரஹாரம் என்னும் இரட்டைத் தெரு, ஆற்றின் கரையோரத்தில் முடிகிறது. அதற்கு நேர் எதிரே மறுகரையில் செல்லியம்மன் கோயில் அமைந்துள்ளது.

இவ்வூரில் நடக்கும் மாசி மகோற்சவத்திற்கு முன்னால், முதன் முதலில் இந்த அய்யனாருக்கு ஒரு நாள் விழா நடைபெற்ற பின்னரே மற்ற திருவிழாக்கள் நடைபெறும். முதலில் அய்யனாருக்கு ஒரு நாளும், காளியம்மன் என்னும் செல்லியம்மன்-க்கு எட்டு நாளும், பிள்ளையாருக்கு பத்து நாளும் முறையே விழாக்கள் நடைபெறும்.

அதன் பின்னரே பழமலை நாதர் கோயிலில் விழா ஆரம்பமாகும். முதல் நாள் கொடியேற்று விழா நடைபெறும். அது <u>படைத்தல்</u> தொழிலைக் குறிக்கும் விழா. இரண்டாம் நாள் முதல் எட்டாம் நாள் வரையில் நடக்கும் ஏழு நாளைய விழாக்களும் <u>காத்தல்</u> தொழிலைக் குறிப்பன, இதில் 6-ஆம் திருநாள் சிறப்புடையது. அன்று ஒரு நாள் மட்டும் பழமலை நாதர் (உற்சவர் பெரிய நாயகர்) வெள்ளி இடப வாகனத்தில் நேர்முகமாக அமர்ந்து வீதியில் எழுந்தருளி திருவுலாக் காட்சி தந்தருளுவார். ஒன்பதாம் நாள் தேரோட்டம் நடைபெறும். அது <u>சம்ஹாரத்தொழிலைக்</u> குறிக்கும். பத்தாம் நாள் தீர்த்த வாரி விழா நடைபெறம். அது <u>அருள்புரியும்</u> (அனுக்கிரகம் செய்யும்) தொழிலைக் குறிக்கும் விழா. அன்று இரவு கொடி இறக்கும் விழா நடைபெறும். அதனை மௌனோற்சவம் என்பர். அது <u>மறைத்தல்</u> (திரோபவம்) என்னும் தொழிலைக் குறிக்கும் விழா.

பதினோராம் நாள் இரவு தெப்போற்சவம் நடைபெறும். திரு மணிமுக்தாற்றின் கீழ்பாலுள்ள "அம்மன் குளம்" என்னும் திருக்குளத்தில் முருகக் கடவுள் தெய்வானை, வள்ளியம்மையுடன் எழுந்தருளிக் காட்சி தருவர். முடிவாக பன்னிரண்டாம் நாள் சண்டேசுரர் விழா நடைபெறும். அன்று இரவு மக்களுக்குச் சிவ தரிசனப் பயனைக் கூட்டுவிக்கும் சண்டேசுரர் வீதியில் எழுந்தருளி வந்து காட்சி தருவார்.



மாசி மகம், ஆறாம் திருவிழாவில்
ஸ்ரீ விபசித்து முனிவர்

பாகம்-4

திருக்கோயில்

அத்தியாயம்-1

திருக்கோயில் அமைப்பு


கோயில் மிகப் பெரியது. புறச் சுற்று மதில் கீழ்மேல் 660 அடியும், தென்வடல் 392 அடியும் உள்ளது. அம்மதில் 4 அடி கனமும், 26 அடி உயரமும் வாய்ந்தது. அதன் நான்கு பக்கங்களிலும் நான்கு உயரிய எழுநிலைக் கோபுரங்கள் கம்பீரமாக நிமிர்ந்து நிற்கின்றன. அவற்றுள் புராண வரலாறுகளைக் குறிக்கும் பல்வேறு வகையான ஓவிய உருவங்கள் அமைந்துள்ளன. அவற்றின் அமைப்பும் அழகும் காண்பவர் மனதைக் கொள்ளை கொண்டு விளங்குகின்றன.



ஆழத்து விநாயகர் கொடிமரத்தின் முன் அன்னதான கூடத்தின் வாயிலின் அருகில் இருந்து எடுக்கப்பட்ட படம் (2017). இங்கிருந்து ஐந்து கோபுரங்களையும் தரிசிக்கலாம். இப்படத்தில் ராஜகோபுரம் மட்டும் இல்லை.

கீழைக் கோபுர வாயிலுக்கு முன்னால் வெளியே உயரிய பதினாறு கால் கருங்கல் மண்டபம் ஒன்று உள்ளது. அக் கோபுர வாயிலின் தென்பாற் சுவரில் 36-ம், வடபாற் சுவரில் 36-மாக 72 வகை பரத நாட்டிய உருவங்கள் நடிக்கின்ற பாவனையில் அமைந்திருக்கின்றன. அவ்வாயிலின் உட்பக்கம் முன்னாலிருப்பது கைலாசப் (கைலாயப்) பிரகாரம். அதில் முன்னால் உயர்ந்த கருங்கல் மண்டபம் ஒன்று உள்ளது. அதற்கு கோபுர தீபாராதனை மண்டபம் என்று பெயர். அதனை அடுத்து மேல்புறம் பரந்தகன்ற பெரிய மண்டபம் ஒன்று உள்ளது. அதற்கு பெரிய நந்தி மண்டபம் என்று பெயர். ஆடிப்பூரத்தில் திருக்கல்யாண விழா இம்மண்டபத்தே நடைபெறும். இதன் நடுவில் பெரிய நந்தியும் (பிரம்ம நந்தியும்) கொடி மரமும் உள்ளன. தற்சமயம் பிரதோஷ காலத்தில் பிரம்ம நந்திக்கே அபிஷேகமும் ஆராதனையும் செய்விக்கப்படுகிறது. இம்மண்டபத்தின் தென்புறம் 16 கால் மண்டபம் ஒன்று உள்ளது. அதற்கு விபசித்து முனிவர் மண்டபம் என்று பெயர். மாசி மகம் ஆறாம் விழாவில் பெரிய நாயகர் காட்சி அளிக்க, விபசித்து முனிவர் இருந்து தரிசிக்கும் விழா நடைபெறும் இடம் இதுவே.

விபசித்து மண்டபத்தின் நேர்கீழ்பால் அக்கினி தீர்த்தம் நடைக்கிணறாக உள்ளது. அது நான்முகனால் படைக்கப்பட்டது. பாவங்களுக்கு அக்கினியாக உள்ளது என்பர். அதன் நேர் தெற்கில் சொற்பொழிவு மண்டபம் ஒன்று



இருந்துள்ளது. அங்கு தற்சமயம் ஓர் அரச மரத்தின் கீழ் விநாயகர், லிங்கம், அம்பாள், நாகர் ஆகியோரின் சிறிய சிலைகள் உள்ளன.

அதன் மேல்புறம் ஆழத்துப் பிள்ளையார் கோயில் கிழக்கு முகமாக உள்ளது. அது 18 அடி ஆழத்தில் இருக்கின்றது. இறங்கி ஏறுவதற்கு ஈரேழு உலகங்களை நினைவூட்டும் வகையில் 14 படிகள் உள்ளன. தனியே கொடி மரமும் சுற்று மதிலும் கோபுரமும் உள்ளன. மலரவன் (பிரம்மா), பழமலையின் உண்மையை அறியாது ஒருபொழுது மயங்கி நின்றான். அவனது மயக்க அறிவைப்போக்கி உண்மை அறிவை ஊட்டியவர் இப்பெருமானான பிள்ளையார் என்பர். ஆழத்தில் அருப்பதால் ஆழத்து பிள்ளையார் எனவும், ஆழ்ந்தகன்று நுண்ணிய பொருளாய் உள்ளார் ஆதலின் ஆழத்துப் பிள்ளையார் எனவும் இருவகையில் பெயர்க்கு காரணம் கூறுவர்.

கைலாயப் பிரகாரத்தின் தென்மேற்கு மூலையில் சக்கர தீர்த்தம் உள்ளது. அது திருமாலின் சக்கரத்தால் உண்டாகியது என்பர்.

அக்கைலாயப் பிரகாரத்தின் வடமேற்கு மூலையில் ஆகமக்கோயில் உள்ளது. முருகக் கடவுள், இருபத்தெட்டு ஆகமங்களையும் இப்பதியில் சிவலிங்கங்களாக வைத்துப் பூசித்த காரணத்தால் இக்கோயில் உண்டானது என கூறப்படுகிறது. அவ்வாகம லிங்கங்களின் பெயர்கள்: காமிகேசுவரர், யோகஜேசுரர், சிந்தியேசுரர், காரணேசுரர், அஜிதேசுரர், தீப்தேசுரர், குஷீமேசுரர், சகஸ்ரேசுரர், அம்சுமானேசுரர், சுப்பிரபேதேசுரர், விஜயேசுரர், நிசுவாசேசுரர், சுவாயம்பேசுரர், அநலேசுரர், வீரேசுரர், ரெளரவேசுரர், மகுடேசுரர், விமேலுசுரர், சந்திரஞானேசுரர், முகபிம்பேசுரர், புரோத்கீதேசுரர், லளிதேசுரர், சித்தேசுரர், சந்தானேசுரர், சர்வோத்தமேசுரர், பரமேசுரர், கிரணேசுரர், வாதுளேசுரர் என்பனவாகும். ஆகம கோயிலின் மத்தியில் அருள்மிகு வள்ளி, தெய்வானை உடன் அருள்மிகு முருகப் பெருமான் நின்று அருள் பாலிக்கிறார்.

வடக்குக் கைலாய பிரகாரத்தில் அன்னை பெரிய நாயகியார் கோயில் கிழக்கு முகமாக அமைந்துள்ளது. வாயிலில் எழுநிலைக் கோபுரம் ஒன்று தனியே உண்டு. அக்கோபுரத்தின் வெளியே பரந்து விரிந்துள்ள கருங்கல் மண்டபம் ஒன்று உள்ளது. அதற்கு அலங்கார மண்டபம் என்று பெயர். அம்மண்டபத்தின் நடுவிலுள்ள தூண்களில் அரசனும் அரசியும் போல இரண்டு உருவங்கள் உள்ளன. பெயர் பொறிக்கப்படவில்லை. அவ்விரு உருவங்களுக்கும் தோள்பட்டையோடு கைகள் இல்லை. சிலை முழுவதும் பித்தளைக் கவசமிட்டு சேதங்கள் மறைக்கப்பட்டுள்ளன.

கோபுர வாயிலுக்கு உள்ளே இடைவெளி மண்டபம் (பிரகார மண்டபம்) ஒன்று உள்ளது. அம்மண்டபம் சுற்று மதிலை அடுத்து உள்ளே நாற்புரமும் அமைந்துள்ளது. கோபுர வாயிலைக் கடந்ததும் அம்மனை நோக்கி நந்தி அமையப் பெற்றுள்ளது. மகாமண்டப வாயிலின் இருபுறமும், கர்பக்கிரக வாயிலின் இருபுறமும் துவாரபாலகிகள் உள்ளனர். மகாமண்டப வாயிலின் தென்புறம் விநாயகரும், வடபுறம் ஆறுமுகரும் காட்சி அளிக்கின்றனர்.

நடுவில் 'மத்திய கோயில் கர்ப்பக் கிரகம்', அர்த்த மண்டபம், மகா மண்டபங்களோடு அமைந்துள்ளது. கர்ப்பக் கிரகத்தில் அன்னை பெரிய நாயகியார், 'பசித் தழும் பிள்ளைக்குப் பால் கனிந்தூட்டும் தாய் போல, கருணை அமுதொழுகக் கனிந்த முகத்துடன் சிறந்து விளங்குகின்றார். இவ்வம்மையை 'விருத்தாம்பிகை' என்று கூறுவர். மகா மண்டபத்தில் வடபுறம் அன்னையின் உற்சவ மூர்த்தி உள்ளது. தென்புற பிரகார மண்டபத்தில் கஜசம்ஹாரமூர்த்தி, கால சம்ஹாரமூர்த்தி, பிராம்ஹி, நர்த்தன கணபதி ஆகியோர் காட்சி அளிக்கின்றனர். மூன்று கோஷ்டங்களிலும் முறையே இச்சா சக்தி, ஞான சக்தி மற்றும் கிரியா சக்தி அருள் பாலிக்கின்றனர்.

வடபுற பிரகார மண்டபத்தில் பைரவி, நரசிம்மஹி, (பிரத்தியங்கார தேவி), மஹிஷாசுரமர்த்தினி, துர்க்கை ஆகியோர் அமையப் பெற்றுள்ளனார். ஸ்ரீ சண்டிகேஸ்வரி சன்னதியும் வடபுற பிரகார மண்டபத்தில் உள்ளது.

பெரிய நாயகி கோயிலின் வெளிப்புறமுள்ள அலங்கார மண்டபத்தில் கொடி மரமும், நந்தியும் உள்ளன. கொடி மரத்தின் வடக்கே, வடக்கு கோபுரத்தின் கீழ்த் தளத்தில் உள்ள முருகக் கடவுளை தரிசிக்க தரையிருந்து மேலே செல்ல படிகள் பிற்காலத்தின் தான் அமைக்கப்பட்டு இருக்க வேண்டும். அந்த மண்டபத்தினுள்ளே தென்கீழ்பால் கிழக்கு முகமாக உள்ளது நாதசர்மா கோயில். அதன் நேர்கீழ்பால் வெளியில் மேற்கு முகமாக உள்ளது அனவர்த்தினி கோயில். நாதசர்மா, அனவர்த்தினி இருவரும் இப்பதியில் சாரூபப் பதவி எய்திய காரணத்தால் அவர்களுக்கு இங்கே கோயில்கள் ஏற்பட்டுள்ளன. அதன் கீழ்பால் குபேர தீர்த்தம் உள்ளது.

அது குபேரனால் படைக்கப்பட்டது என்பர். அதற்கு நேர் கிழக்கே யாகசாலை மண்டபம் உள்ளது. அதன் வடகிழக்கு மூலையில் வாகன கொட்டடி இருந்துள்ளது. யாகசாலை மண்டபத்தின் தென்புறம் நூற்றுக்கால் மண்டபம் தெற்கு முகமாக உள்ளது. அதன் முன்புறம் இருபக்கங்களிலும் குதிரைகள் நுகத்தடியில் பூட்டிய பாவனையில் அமைந்துள்ளது. அவற்றின் பின்புறம் உருளைகள் அச்சில் பொருந்திய நிலையில் உள்ளன. இம்மண்டபம் ஆதியில் மிகப் பெரியதாக இருந்திருக்கின்றது. முகமதியர் ஆட்சி காலத்தே கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில் இம்மண்டபத்தில் வடபகுதி மூன்று பங்கு இடிந்து சிதைந்து போயின. எஞ்சியிருந்த இந்தக் கால் பகுதியும் இடிந்து போன வடபுற

மண்டபத்தில் அடித்தள வரிசையும் இன்றும் அழியாது காக்கப்பட்டு வருகிறது. அருகில் இப்போழுது உள்ள யாகசாலை மண்டபம் உள்ளது. இந்த நூற்றுக்கால் மண்டபம் கோயில் அலுவலகமாக சில காலம் இருந்து வந்திருக்கிறது. இம்மண்டபத் தென்புற விளிம்புக் கல்லில் ஒன்றும், தள வரிசையில் ஒன்றுமாக இரண்டு கல்வெட்டுக்கள் உள்ளன. இத்துடன் கைலாயப் பிரகாரம் முடிவடைகின்றது.

அடுத்தது, இரண்டாவது சுற்று மதில், அது கீழ்மேல் 358 அடியும், தென்வடல் 190 அடியும் உள்ளது. 3½ அடி கனமும், 26 அடி உயரமும் உடையது. கீழ்புறம் ஒரே வாயிலும், அவ்வாயிலில் உயரிய எழுநிலைக் கோபுரம் ஒன்றும் உள்ளது. அக்கோபுரம் கண்டராதித்த சோழனால் கட்டப்பட்டது. அதன் வாயிற்படியிலுள்ள உத்திர கற்கள் இரண்டிரண்டாகப் பிளந்தபடியே உள்ளன. அவ்வாயிலின் வலது பக்கச் சுவரில் 11-ம் இடது பக்கச்சுவரில் 17-ம்மாக 28 கல்வெட்டுகள் உள்ளன. அம்மதிலை அடுத்து உட்புறமுள்ள பிரகாரத்திற்கு வன்னியடிப் பிரகாரம் என்று பெயர். அதில் முன்புறம் தென்டவடலாக உயர்ந்த கருங்கல் மண்டபம் ஒன்று உள்ளது. அதற்கு கொடி மர மண்டபம் என்று பெயர். அதன் நடுவில் நந்தியும் கொடி மரமும் உள்ளன. கொடி மரத்தின் அருகில் உள்ள நந்தி ஆன்ம நந்தியாகும். பிரதோஷ காலத்தில் பூஜை ஏற்கும் நந்திதான் ஆன்ம நந்தி. எல்லா ஆன்மாக்களிலும் இறைவன் இருப்பதால் இந்த ஆன்மாக்களின் வடிவமாக ஆன்ம நந்தி உள்ளது. ஆனால், சில வருடங்களாக, பிரதோஷ காலத்திற்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால், இடவசதி கருதி, கைலாயப் பிரகாரத்தில் உள்ள பிரம்ம நந்திக்கு பிரதோஷ வழிபாடு செய்யப்பட்டு வருகிறது. அவற்றின் பக்கத்துள்ள இரு தூண்களில் அரசனும், அரசியும் போல இரண்டு உருவங்கள் எதிர் எதிராக உள்ளன. இரண்டிற்கும் பெயர் பொறிக்கப்படவில்லை. அதன் நேர் தென்பால் மடப்பள்ளி இருக்கின்றது. அம்மடப்பள்ளியின் வடபுற சுவரினின்றி நான்கு கல் வெட்டுகள் வெளிவந்துள்ளன. அவ்வடபுறச் சுவரிலும் மேல்புறச் சுவரிலும் எடுக்க முடியாத நிலையில் மாறுபட்டு கிடைக்கும் கல்வெட்டுகள் பல உள்ளன.

மடப்பள்ளிக்கு அடுத்த மேல்புறம் தல விருட்சமாக வன்னிமரம் உள்ளது. அது மிகப்பழமையானது. கற்பக விருட்சமே வன்னி மரமாக உருவெடுத்து பழமலைநாதர்-ஐ வணங்க, தேவலோகத்தில் இருந்து இத்தலத்திற்கு வந்து, திருப்பணிக்கும் உதவி செய்ததாக தலவரலாறு கூறுகின்றது. அம்மரத்திற்கு தனியே மேடையும் மண்டபமும் உண்டு. அம்மேடையில் பிள்ளையார், விபசித்து முனிவர், உரோமச முனிவர், விதர்ஷண செட்டியார், குபேரன் தங்கை ஆகியோரின் உருவ சிலைகள் உள்ளன.

அதற்கடுத்த மேல்பக்கம் நித்தியானந்த கூபம் உள்ளது. அது நான்முகனால் படைக்கப்பட்ட புண்ணிய நீர் என்பர். அதன் மேல்புறம் உள்ள பகுதியில் ஆரம்ப காலங்களில் திருமஞ்சனப் பொருள்கள் வைத்து பாதுகாக்க உபயோகப் படுத்தியுள்ளனர்.

தெற்கு வன்னியடிப் பிரகாரத்தில் பஞ்ச லிங்கங்கள் உள்ளன. அப்பிரகாரத்தின் தென்மேற்கு மூலையில் வல்லப கணபதி உள்ளார். மேற்கு வன்னியடிப் பிரகாரத்தில் மதுரை மீனாட்சியம்மை, சொக்கலிங்கம், காசி விசுவலிங்கம், விசுவலிங்கம், வள்ளியம்மை, தெய்வானை உடனுள்ள ஆறுமுகக் கடவுள், விசுவலிங்கம் மற்றும் இருவிசுவ லிங்கங்கள், சகஸ்ர லிங்கம், ஏகாம்பர லிங்கம், காஞ்சி காமாட்சியம்மை ஐம்புலிங்கம், அண்ணாமலையார் முதலியோர் உள்ளனர். வடக்கு வன்னியடிப் பிரகாரத்தில் பெரிய நாயகியார் கோயிலுக்குச் செல்ல இரண்டாவது மதிலில் ஒரு வாயில் உண்டு. அப்பிரகாரத்தின் வடகீழ் மூலையில் நவக்கிரகங்கள் உள்ளன. அதன் தென்கீழ் பால் மலை தண்டாயுதபாணி உயரத்தில் காட்சியளிக்கிறார்.


அறுபத்துமூவருக்கு காட்சி அளிக்கும்
ஸ்ரீ பழமலை நாதரும் - ஸ்ரீ விருத்தாம்பிகையும்

கொடி மர மண்டபத்திற்கு மேற்கும் உள்சுற்று மதிலுக்குக் கிழக்கும் தொடர்ந்து மிகப் பெரிதாக ஒரு கருங்கல் மண்டபம் உள்ளது. அதற்கு இசை மண்டபம் அல்லது அலங்கார மண்டபம் என்று பெயர். அம்மண்டபத் தூண்களில் மிக்க வேலைப்பாடுடன் சிங்க உருவங்கள் அமைந்துள்ளன. அம்மண்டபத்தில் தென்மேற்கு மூலையில் விழாத் தலைவராகிய உற்சவ மூர்த்தி பெரியநாயகர் உள்ளார். இவருக்குத்தான் இங்கு எல்லா வகையான திருமஞ்சன ஆராதனைகளும் சீரும் சிறப்பும் மிகுதியாக நடைபெறும். அதனினும் திங்கள்தோறும் பருவத் திருமஞ்சனம் மிகச் சிறப்பாக நடைபெறும். இவர் மாசி மகம் ஆறாம் விழா ஒரு நாள் மட்டுமே வெளிவந்து உலாக் காட்சி தருவார்.

மற்றைய விழாக்களில் சின்னப் பழமலை நாயகர் வெளிவருவது வழக்கம். இப்பெரிய நாயகரை பருவ காலத்திலும், பிரதோஷ காலத்திலும் பிணிகளால் நலிவுறும் மக்கள் எண்ணிறந்தோர் வந்து தரிசித்துப் பிணிகள் நீங்கி இன்புற்று வந்திருக்கின்றனர்.

இப்பெரிய நாயகர் உற்சவமூர்த்தியாதலின் பிரதி தினமும் அபிஷேகம் நடத்த இயலாதாதலின் உடையவர் என்னும் ஸ்படிக லிங்கத்திற்கு, காலை மாலை இருவேளையும் அன்னாபிஷேகம் முதலியன நடத்தி அலங்கார சோடோசோபசார தீபாராதனை நடைபெறுகிறது. இப்பெரிய நாயகர் கோயிலின் வாயிலில் தென்பக்கம் வடக்கு முகமாகக் குவித்த கையுடன் ஓர் உருவம் உள்ளது. வையப்ப கிருஷ்ணம நாயகர் என்று அருகில் அதன் பெயரும் பொறிக்கப்பட்டுள்ளது. அதன் நேர் வடபுறம் தெற்கு முகமாக ஒரு பெண் உருவம் உளது. பெயர் தீட்டப்படவில்லை. ஆயினும் அது இந்நாயக மன்னரின் மனைவியாக இருக்கக் கூடும் என்பர். இவ்வாயிற்படிக்கு வெளியிலுள்ள மேடைத் தூண்களில் துறவி போன்ற சிறிய உருவங்கள் இரண்டு உள்ளன. பெயர் பொறிக்கப்படவில்லை.


அவ்விசை மண்டபத்தின் வடபுறம் அம்பலக் கூத்தரின் (நடராசர்) மண்டபம் உள்ளது. அது கீழ்மேல் நீண்டு மேடையாக உள்ளது. நடுவில் தேவர்களுக்குத் திரு நடனக் காட்சி தந்த அம்பலக் கூத்தர் தெற்கு முகமாக உள்ளார். அம்மேடையின் தென்புற விளிம்பு தூண் ஒன்றில் கிழக்கு முகமாக அரசர் உருவம் ஒன்று உள்ளது. அதன் கீழ்புறத்தூணில் மேற்கு முகமாகத் துறவி உருவம் ஒன்று உள்ளது. இரண்டிற்கும் பெயர் எழுதப்படவில்லை. இசை மண்டபத்தின் நடுவிலுள்ள தூண் ஒன்றில் வடக்கு முகமாகப் பெரும் தோற்றமுள்ள அரசன் உருவம் ஒன்று உள்ளது. அதன் கீழ்புறத் தூணில் வடக்கு முகமாகப் பெருந்தோற்றமும் தலைப்பாகையும் உள்ள உருவம் ஒன்று உள்ளது. இவற்றிற்கும் பெயர் பொறிக்கப்படவில்லை. இத்துடன் வன்னியடிப் பிரகாரம் முடிவடைந்தது.

அடுத்தது மூன்றாவது (உள்) சுற்று மதில், அது கீழ்மேல் 220 அடியும் தென்வடல் 112 அடியும் உள்ளது. $3\frac{1}{2}$ அடி கனமும் 30 அடி உயரமும் வாய்ந்தது. கீழ்பால் மொட்டைக் கோபுர வாயில் உள்ளது. அக்கோபுர வாயில் மிக்க வனப்பமைந்த வேலைப்பாடுள்ளது. அதன் இரு பக்கங்களிலும் பல கல்வெட்டுக்கள் உள்ளன. அவ்வாயிலின் பக்கத் தளவரிசைச் சுவரில் மேல்பக்கம் இருபுறங்களிலும் பல கல்வெட்டுக்கள் உள்ளன. அவற்றுள் ஒன்றே வெளிவந்துள்ளது.



ஆகமகோயில் வீற்றிருக்கும் ஸ்ரீ வள்ளி, ஸ்ரீ தெய்வானை சமேத ஸ்ரீ குமரேசர்

ஏனைய எடுபடவில்லை. அவ்வுட்பிரகாரத்திற்கு அறுபத்து மூவர் பிரகாரம் என்று பெயர். முன்னால் உட்பிரகார நந்தி எனப்படும் மால்விடை நந்தியும் பலி பீடமும் உள்ளன. மால் என்றால் மஹாவிஷ்ணுவை குறிக்கும். விடை என்றால் எருது. திரிபுராந்தகர் என்ற மூன்று அசுரர்களை அழிக்க சிவன் செல்லும்போது, மஹாவிஷ்ணு நந்தியாகி சிவனை சுமந்து சென்றார் என்பது புராண வரலாறு.


ஆதியில் தன் படைப்புகளுக்கு இடம் வேண்டி பழமலை நாதரை வணங்கிய பிரம்மா

உள்தென் பிரகாரத்தின் தென்பக்கத்தில் முறையே திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்க வாசகர் என்னும் நால்வரும், பிள்ளையார், அறுபத்து மூன்று நாயன்மார்களில் மற்ற நாயன்மார்கள், பத்து அதிபக்தர்கள், கிழக்கு நோக்கி அறுபத்து மூவருக்கும் காட்சி அளிக்கும் சிவ, பார்வதி, இடபா ரூடா யோக தக்ஷணாமூர்த்தி, சப்தமாதர்கள், உருத்திரர் பதினொருவர், மாற்றுரைத்த பிள்ளையார் முதலிய உருவங்கள் உள்ளன. அத்தென் பிரகாரத்தின் வடபக்கம் கிழக்கில் இருந்து முறையே வருண லிங்கம், முப்பிள்ளையார், உருத்திரர்பாதம், தக்ஷணாமூர்த்தி முதலிய உருவங்கள் உள்ளன. உட்பிரகாரத்தின் மேல்பக்கம் தெற்கிலிருந்து முறையே சின்னபழமலை நாதர் (உற்சவர்) மற்றும் ஏனைய உற்சவ மூர்த்திகள், வள்ளியம்மை, தெய்வயானை உடனுள்ள ஆறுமுகக் கடவுள், வல்லப கணபதி, பிந்து மாதவப் பெருமாள், மயூர முருக கடவுள் முதலிய உருவங்கள் உள்ளன. பிந்து மாதவப் பெருமாள் இத்தலத்தில் கோயிலினுள் அமையப் பெற்றது காசிஷேத்திரத்தை ஒட்டியதாகும். லிங்கோத்பவர் மேற்கு கோஷ்டத்தில் காட்சி அளிக்கிறார். வடக்கு கோஷ்டத்தில் பிரம்மாவும் அவரை அடுத்து உமையவளை ஒரு கையால் அனைத்து மற்றொரு கையால் தலைமேல் உள்ள கங்கையை இறக்கி விடும் கங்கா விசர்ஜன மூர்த்தியாக சிவனும் காட்சியளிக்கின்றனர்.

அப்பிரகாரத்தின் வடமேற்கு மூலையில் இளமை நாயகியார் கோயில் கிழக்கு முகமாக உள்ளது. அங்கு கருணை உருவாம் இளமை நாயகியார் (பாலாம்பிகை) மலர்ந்த முகத்துடன் விளங்குகின்றார். பெரிய நாயகியார், குரு நமசிவாயருக்கு இளமை நாயகியாக வந்து சோறு படைத்த காரணத்தால் இப்பதியில் இளமை நாயகியார் கோயில் தனியாக ஏற்பட்டுள்ளது. பாலாம்பிகையின் சன்னதியை அடுத்து பள்ளியறை தெற்கு நோக்கி அமையப் பெற்றுள்ளது. வடக்கு உட்பிரகாரத்தில் வடபுறம் கிழக்கு முகமாகத் திருமகள்

கோயில் உள்ளது. அவர் கஜலட்சுமியாக விளங்குகிறார். தென்புறம் தெற்கு முகமாகச் சண்டேஸ்வரர் கோயில் உள்ளது. அவ்வடபுர மண்டபத்தின் நடுவிலுள்ள தூண் ஒன்றில் வடக்கு முகமாக ஏழுசாண் உயரத்தில் ஒன்றும் அதன் அடியில் மேற்கு முகமாக நாலரை சாண் உயரத்தில் ஒன்றுமாக இரண்டு ஆடவர் உருவங்கள் உள்ளன. ஒன்றிற்கும் பெயர் பொறிக்கப்படவில்லை. சண்டேஸ்வரர் என்னும் சண்டிகேஸ்வரன் நேர் எதிரே அர்த்தநாரீஸ்வரர் நின்ற கோலத்தில் காட்சி அளிக்கிறார். உட்பிரகாரத்தின் வடகீழ்பால் தெற்கு முகமாகவுள்ள நிலையம், பலவகை உற்சவ மூர்த்திகள் இருப்பிடமாகும்.

உற்சவ மூர்த்திகள் இருப்பிடமாக உள்ள இந்நிலையத்தில், கிழக்கு மூலையில் வீரபத்திரர் சுதை வடிவில் நிறுவப்பட்டுள்ளார். தமிழ்நாட்டில் உள்ள பல சிவன் கோயில்களில் வீரபத்திரன் துணை தெய்வமாக வைக்கப்பட்டுள்ளார். இங்குள்ள வீரபத்திரர் பற்றிய செய்தி, 1942-இல் வித்வான் திரு ஆர்.சுந்தரராச உடையார் அவர்கள் எழுதிய விருத்தாசல புராணத்தில், எதுவும் குறிப்பிடப்படவில்லை. எனவே வீரபத்திரர் இக்கோயிலில் 1942ஆம் ஆண்டிற்கு பின்னரே வைக்கப்பட்டிருக்க வேண்டும்.


வடகீழ்க் கோடியில் பத்து கைகளுடன் கால பைரவர் (தசபுஜ பைரவர்) உள்ளார். இங்குள்ள கால பைரவரும் காசி ஷேத்திரத்தை ஒட்டி அமையப் பெற்றுள்ளது என்பர். அதன் தென்பால் சூரியலிங்கமும் சூரிய உருவமும் உள்ளன. இத்துடன் உட்பிரகாரமும் பரிவார தெய்வங்களும் முடிவு பெற்றன.

உட்பிரகாரத்தின் முன்னால் மகா மண்டபம் அமையப் பெற்றுள்ளது. அது கீழ்மேல் நீண்டு விரிந்துள்ளது. அதற்கடுத்து உள்ளே இருப்பது ஸ்தபநமண்டபம் அது மிகச் சிறியது. திருமஞ்சனப் பொருள்களை வைத்து மந்திர செபம் செய்யும் இடம் இதுவாம். இம்மண்டபத்தின் மேல்பக்கம் தென்புறமாக ஐந்து சாண் உயரத்தில் வடக்கு முகமாய் ஒரு சிவனடியார் உருவம் உளது. அதன் நேர் வடபால் தெற்கு முகமாக ஒரு முனிவர் உருவம் உள்ளது. இரண்டிற்கும் பெயர் தெரியவில்லை. இந்த ஸ்தபநமண்டபம் மகா மண்டபங்களின் தென்பக்கச் சுவரில் 11, வட பக்கச் சுவரில் 10, கீழ்பக்கச் சுவரில் வாயிலுக்கு இடது புறம் 2, ஆக 23 கல்வெட்டுகள் உள்ளன. மற்றும் எடுக்க முடியாத சில கல்வெட்டுகளும் அவற்றில் உள்ளன. ஸ்தபந மண்டபத்தை அடுத்து உள்ளே உள்ளது இடைகழி மண்டபம். அதில் தெற்கு முகமாகவும் வடக்கு முகமாகவும் இரு வாயில்கள் உள்ளன. நடுவில் நந்தியும், பலி பீடமும் உள்ளன. மூலவரின் முன் உள்ள இந்த

நந்தியே தர்ம நந்தி ஆகும். ஊழி (வாழ்நாள்) முடிவில் உலக உயிர்கள் எல்லாம், உமாபதிக்குள் அடங்கி விடும். அப்போது அவரவர் செய்த தர்மம் மட்டுமே நிலைக்கும். அதுவே ரிஷபம் ஆகிறது. இந்த ரிஷபம் தான் தர்மநந்தி ஆகும். அதனை அடுத்து உள்ளே அர்த்த மண்டபத்தோடு கூடிய மத்திய கோயில் தனியாக உள்ளது. அர்த்த மண்டபத்தின் வாயிலின் இருபக்கமும் முன்புறத்தில் இரு வாயில் காவலர் (துவாரபாலகர்) உருவங்கள் உள்ளன. அவை மிக்க வேலைப்பாடுடன் அமைந்து கம்பீரமாக நிற்கின்றன. அர்த்த மண்டப வாயிலின் தென்புறம் பிள்ளையார் உள்ளார். மத்திய கோயிலில் (கர்ப்பக் கிரகத்தில்) நம் அண்ணல் பழமலை நாதர் அருவாய் உருவாய் அருவுருவாய் விளங்குகின்றார்.

திருவருட் பிரகாச வள்ளலார் இராமலிங்க அடிகள் அருளிய திருவருட்பா மூன்றாம் திருமுறையில் 'பழமலை பதிகம்' மற்றும் 'பழமலையோ கிழமலையோ' என்னும் இரு பதிகங்கள் பழமலை நாதரை குறித்து இயற்றியுள்ளார். வள்ளலாரின் திருவுருவம் இராஜகோபுரத்தின் வெளிப்புறம் வடக்கே ஒரு சிறிய மண்டபத்தில் அமைக்கப்பட்டு வணங்கப்படுகிறது. இம்மண்டபமும் *1942*-க்கு பின்னரே அமைக்கப்பட்டு இருக்க வேண்டும். இராஜகோபுரத்தின் உட்புறம் வடக்கே தேவஸ்தான அலுவலக கட்டிடம் தற்சமயம் அமையப் பெற்றுள்ளது. ஆழத்து பிள்ளையாரின் கொடி மரத்தின் சற்று முன்பாக தென்புரத்தில் அன்னதானக் கூடம் அமைந்துள்ளது.

இராஜகோபுரத்தின் நேர் கிழக்கே ஆற்றின் மறுகரையில் அம்மன் குளக்கரையில் ஒரு மண்டபத்தில் இந்திர நந்தி (போக நந்தி) அமையப் பெற்று இருந்தது. சுவாமியின் நேர் எதிரே (நேர்க்கோட்டில்) அமையப் பெற்றுள்ள ஐந்து நந்திகளில் இதுவும் ஒன்று.



தைப்பூச ஜோதி தரிசனம் - வள்ளலார்

பாகம்-4

அத்தியாயம்-2

திருக்கோயில் நிர்மானமும் திருப்பணிகளும்

திருக்கோயிலின் ராஜகோபுரத்தின் மேற்கே, முன் வாயிலைக் கடந்ததும், கோபுர தீபாராதனை மண்டபம் உள்ளது. அதனை அடுத்து, கொடி மரமும், வேத நந்தி எனப்படும் பிரம்ம நந்தியும் உள்ளன. இந்நந்திக்கு வடக்கே அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய, 24 தூண்கள் கொண்ட மண்டபம் ஒன்று உள்ளது. மண்டபத்தின் இரு புறமும் சக்கரங்களும், குதிரைகளும் வடிவமைக்கப்பட்டு, கடவுளர்களின் ரதம் போல் காட்சி அளிக்கிறது. மண்டபத்தின் தூண் வரிசைகளை இணைக்கும் பகுதியில் உள்ள பதிவுகளில் திருக்கோயிலை கட்டியது காடவ (பல்லவ) மன்னர் என்று ஒரு குறுகிய பதிவு உள்ளதாக 1906ஆம் ஆண்டின் தென்னாற்காடு மாவட்ட கெஜட்டில் (பக்கம் 399) பதிவிடப்பட்டுள்ளது. மற்ற விவரங்கள் ஏதும் அங்கு காணப்படவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது. காடவ மன்னர்கள் பல்லவ மன்னர்களின் வழித்தோன்றலே என்றும், இவர்கள் நடுநாடு மற்றும் திருமுனைப்பாடி நாடு ஆகிய பகுதிகளை ஆண்டுள்ளனர் என்றும் அறியப்படுகிறது.

இந்நூலின் 'நகரின் தோற்றமும் வரலாறும்' என்னும் அத்தியாயத்தில் (பாகம்-1) குறிப்பிட்டது போல், பல்லவ மன்னர்கள் தென்னாற்காடு மாவட்டத்தை உள்ளடக்கிய தொண்டை மண்டலத்தை ஆண்ட காலம் கி.பி. 4ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 8ஆம் நூற்றாண்டு வரை ஆகும்.

திருமுதுகுன்றவரைப் போற்றி தேவார பாடல்களை திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரசரும் பாடிய காலம் 7ஆம் நூற்றாண்டு.

மேற்கண்ட மூன்று செய்திகளையும் வைத்துப் பார்க்கும்போது, பழமலை நாதரின் திருக்கோயில் முதன்முதலில் கி.பி. 4ஆம் நூற்றாண்டிற்கும் கி.பி. 6ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் நிர்மானிக்கப்பட்டிருக்க வேண்டும் என கருத முடிகிறது.

ஆதியில் விபசித்து முனிவர் என்பவர் பழமலை நாதருக்குக் கோயில் திருப்பணி செய்ததாகத் தல புராணங் கூறுகிறது. பின்னர் கி.பி. பத்தாம் நூற்றாண்டின் இறுதியில் கண்டராதித்த சோழன் மனைவி செம்பியன் மாதேவியரால் திருப்பணி செய்யப்பட்டிருக்கிறது. அதாவது பழமலை நாதர் இருக்கும் மத்தியகோயில், ஸ்தபன மண்டபம், உள் சுற்று மதில், அச்சுற்று மதிலை அடுத்து உள்ளுள்ள இரு தூண்கள், அகலமுடைய சுற்றுத் தாழ்வாரம், உட்பிரகாரத்துள்ள இளமை நாயகியார் கோயில் நீங்கிய ஏனைய பரிவாரக் கோயில்கள், இரண்டாவது சுற்று மதில், அதிலுள்ள எழுநிலைக்கோபுரம், வன்னியடிப் பிரகாரத்துள்ள பரிவாரக் கோயில்கள் முதலானவை அச்செம்பியன்மாதேவியார் செய்த திருப்பணிகளாம். உட்பிரகாரத்துள்ள மகா

மண்டபம் கட்டியது யார் என்று அறிய முடியவில்லை. ஆயினும் அம்மண்டபச் சுவர்களில் இராஜஇராஜசோழன் கல்வெட்டு இருக்கின்றது. இராஜராஜ சோழன் கண்டராதித்த சோழனுக்கு அடுத்தபடியாக பட்டத்திற்கு வந்தவனாதலின், இம்மண்டபம் இவன் காலத்து திருப்பணியாக இருக்கக் கூடும். உட்பிரகாரத்துள் செம்பியன்மாதேவியார் வகுத்துள்ள சுற்றுத் தாழ்வாரத்திற்கும் மத்திய கோயிலுக்கும் இடையிலுள்ள இடைவெளி மண்டபத்தையும் இளமைநாயகியார் கோயிலையும் கட்டியவர் பெயர் தெரியவில்லை. ஆனால், கி.பி. பதினாறாம் நூற்றாண்டின் இறுதியில் பெரிய நாயகியார் இளமைநாயகியாராகச் சென்று குருநமசிவாயருக்குச் சோறு படைத்த வரலாறு நிகழ்ந்தது. அதனால் அதை ஒட்டிப் பதினேழாம் நூற்றாண்டில் இத்திருப்பணிகள் நடந்திருக்க வேண்டும்.

வன்னியடிப் பிரகாரத்தில் உள்ள இசை மண்டபத்தை மூன்றாம் குலோத்துங்க சோழன் பட்டத்திற்கு வந்த பதினைந்தாம் ஆண்டில் (கி.பி.1193ல்) ஏழிசை மோகனான குலோத்துங்க சோழக் காடவராதித்தன் என்பவன் கட்டி ஏழிசை மோகன்றிரு மண்டபம் என்று தானே பெயரும் இட்டுள்ளான். சான்று மகா மண்டபத்தின் கீழ்பாற் சுவரிலுள்ள கல்வெட்டு (1900-137-வா-7) மற்றும் அவ்விசை மண்டபத்தில் காணப்படும் முடியுள்ள உருவம் குலோத்துங்க சோழனுடையது எனவும் தலைப்பாகையுள்ள உருவம் ஏழிசை மோகனுடையது எனவும் கூறுகின்றனர். இன்றளவும் இம்மண்டபத்திற்கு இசை மண்டபம் என்றே பெயரும் வழங்கி வருகின்றது. அம்பலக்கூத்தர் திருமண்டபம் வகுத்தவர் இன்னாரெனத் தெரிய வில்லை. அம்மண்டபத்துள்ள கத்தி இடையிற்செருகிய அரசன் உருவத்தையும், முழங்காலளவோடு ஆடையுள்ள துறவி உருவத்தையும் கொண்டு, இது சோழர் காலத்தே ஒரு துறவியால் கட்டப்பட்டது என்பர். பெரிய நாயகர் மண்டபம் வையப்ப கிருஷ்ணமநாயகரால் கட்டப்பட்டுள்ளது. சான்று அம்மண்டப வாயிலில் அவரது உருவமும் பெயரும் இருப்பதுவேயாம்.

கொடி மர மண்டபம் கட்டியவர் யார் என்று அறிய முடியவில்லை. அம்மண்டபத்துள்ள அரசன் உருவத்தையும் அரசி உருவத்தையும் கொண்டு அது பிற்கால மன்னர்களின் திருப்பணியாகவே இருக்கக் கூடும் என்பர். உள் மடப்பள்ளியை கச்சிராயன் எனும் அரச நாராயணன் ஏழிசைமோகன் என்பவர் கட்டியுள்ளார். அவர் காலம் தெரிந்திலது. சான்று அம்மடப்பள்ளியின் வடபுறச் சுவரிலுள்ள கல்வெட்டு (1918-65-வர-4). நூற்றுக்கால் மண்டபம் அரசு நாராயணன் ஆளப் பிறந்தானான வீரசேகரக் காடவராயன் என்பவனால் கட்டப்பட்டுள்ளது. சான்று அம்மண்டபத் தளவரிசையின் தென்புற விளிம்புக்கல்லில் உள்ள கல்வெட்டு (1935-99-X-வால்-7). இக்கோயிலின்

இரண்டாவது கோபுரத்தில் வாயிற்படியின் வலதுபக்கச் சுவரில் இவ்வீரசேகரக்காடவராயனின் கல்வெட்டு மற்றொன்றும் உள்ளது. அதில் தான் அதியமான் நாட்டை (சகாப்தம் 1108ல்) அழித்ததாகக் கூறிக் கொள்கிறான். அதனால் இவன் காலம் கி.பி.1186 ஆகும். இம்மண்டபம் கட்டிய காலமும் அப்பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதியாகவே இருக்க கூடும் என்பர்.

பெரிய நந்தி மண்டபத்தைக் கட்டியவர் யார் என்று அறிய முடியவில்லை. அம்மண்டபத் தூண்களைக் கொண்டு பிற்கால நாயக மன்னர்களின் திருப்பணியாக இருக்கக் கூடுமோ என்று எண்ணுகின்றனர். அதன் கீழ்பாலுள்ள தரிசனமண்டபம் சுமார் 180 ஆண்டுகளுக்கு முன் இத்தாலுக்கா பெரம்பலூர் கிராமத்திலிருந்த உடையார் ஒருவரால் கட்டப்பட்டது. அப்பரம்பரையினரே இன்றும் மாசிமகம் ஆறாம் நாள் விழாவை நடத்தி வருகின்றனர். பெரிய நாயகியார் கோயில் திருப்பணி செய்தோர் பெயரும் காலமும் தெரியவில்லை. ஆனால், அது மிகப்பழமையாகக் காணப்படுகிறது. அதைக் கொண்டு அத்திருப்பணி சோழ மன்னர்களின் காலத்தில் நடந்து இருக்கக் கூடும் என்பர். பெரிய நாயகியார் கோயிலின் உள்ளே அமைந்து இருக்கும் பெரிய மண்டபத்தையும் அதனோடு தொடர்ந்துள்ள சுற்றுத் தாழ்வார மண்டபத்தையும் கி.பி. பதினாராம் நூற்றாண்டில் ஓர் உழவர் கட்டியதாகத் தெரிகின்றது. சான்று குமாரதேவர் ஒரு உழவரைக் கொண்டு பெரிய நாயகியாருக்கு மண்டபம் வகுத்ததாக அவர் வரலாற்றில் கூறப்படுவதால் அறிய முடிகிறது. அதன் வெளியிலுள்ள அலங்கார மண்டபத்தைக் கட்டினோர் இன்னாரென அறிய முடியவில்லை. அம்மண்டபத்தில் காணப்படும் அரசன் உருவத்தையும் அரசி உருவத்தையும் கொண்டு அது பிற்கால நாயக மன்னர்களின் திருப்பணியாக இருக்கக் கூடும் என்பர்.

புறச் சுற்றுமதிலையும் அதிலுள்ள எழுநிலை கோபுரம் நான்கினையும், கி.பி. பதினாறாம் நூற்றாண்டிலிருந்த தஞ்சை நாயக முதலரசரான செவ்வப்ப நாயக மன்னன் கட்டினான் என்பர். சான்று, செவ்வப்ப நாயக மன்னரின் பேரன் இரகுநாத நாயகன். அந்த இரகுநாத நாயகரின் தாசி இராமபத்திராம்பாள். அந்த இராம பத்திராம்பாள் இயற்றியது இரகுநாதப்யூதயம் என்னும் காவியம். அந்த வடமொழி காவியத்தில் 'செவ்வப்ப நாயக மன்னர் தன்கீர்த்தியாகிய நடனக்காரன் நடனம் ஆடுவதற்கென அமைத்த அரங்குபோல திருமுதுகுன்ற தேவர்க்குக் கோபுரம் வகுத்துள்ளார்' என்று இக்கோபுரத் திருப்பணி சிறப்பித்துக் கூறப்படுவதால் தெரிய வருகின்றது. இதுபற்றி வேறு கல்வெட்டு ஒன்றும் காணக்கிடைக்கவில்லை. இருபத் தெட்டு ஆகமக்கோயிலில் தெலுங்கு கல்வெட்டு ஒன்று உள்ளது. அதில் முத்து கிருஷ்ணப்ப நாயகர் என்பவர் சகாப்தம் 1524-ல் (கி.பி. 1602-ல்) திருமுதுகுன்றத் தேவர்க்கு பஞ்சவர்ணப் பிரகாரம் கட்டிவைத்தாகக் கூறப்படுகிறது. அது இப்பொழுதுள்ள புறமதிலுக்கு

வெளியே இருந்து, கி.பி. 18-ம் நூற்றாண்டில் முகமதியர் ஆட்சியிலே அழிந்து போனதாகத் தெரிகிறது. முகமதியரும் பிரெஞ்சுக்காரரும் கூடி இக்கோயிலை கோட்டையாக்கி வைத்திருந்தனர். அக்காலத்தில் (கி.பி.18ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில்) அகழிவெட்டி அரண் செய்வதற்காக அப்பஞ்சவர்ணப் பிரகாரத்தை இடித்து இருந்த இடம் தெரியாதபடி செய்து விட்டனர். பின்னர் கி.பி.1760ல் இக்கோட்டை ஆங்கிலேயர் வசமாயிற்று. அதன் பிறகே கி.பி.1803ல் கார்ரோ என்னும் பெயருடைய ஆங்கிலேயர் (மாவட்ட கலெக்டர்) அகழியைத் தூர்த்து அரண்களை அழித்துக் கோட்டையை மீண்டும் கோயிலாக்கி வைத்தார்.

கி.பி.1813 முதல் 1826 வரை தென்னாற்காடு மாவட்ட கலெக்டர் ஆக சார்லஸ் ஹைட் துரை என்பவர் இருந்துள்ளார். அவர் இக்கோயிலுள்ள கைலாயப் பிரகாரத்திற்கு தள வரிசை போட்டு ஹைட் தள வரிசை என்று தன் பெயரை இட்டுள்ளார். தேரிழுக்க இருப்புச்சங்கிலியும், கும்ப ஆராத்தி செய்ய வெள்ளிக் குடமும் செய்து வைத்துள்ளார். அவர், உள்ளன்போடு இப்பழமலை நாதருக்குப் பற்பல வகையில் தொண்டு செய்து இன்புற்றிருந்தார். சான்று, தென்னாற்காடு மாவட்ட ஆங்கில வரலாற்றால் (Gazetteer) அறியக் கிடக்கின்றது. கீழைக்கோபுர வாயிலுக்கு முன்னாலுள்ள பதினாறுகால் மண்டபத்தைக் கர்னத்தம் சுப்பராய செட்டியார் என்பவர் சுமார் 130 ஆண்டுகளுக்கு முன் கட்டியுள்ளார். மதுரை மாவட்டம் அமராவதி புதூர் வயி.நா.க.ராம.அ.செட்டியார் வகையரா சுமார் 130 ஆண்டிகளுக்கு முன் இக்கோயிலில் திருப்பணி செய்யத் தொடங்கினர். அத்திருப்பணி மூன்று ஆண்டிற்குள் முடிவு பெற்று கி.பி.1893ல் கும்பாபிஷேகம் செய்துள்ளார். பின்னர். அமராவதி புதூர் வெங்கடாசலம் செட்டியார் இந்த கோவிலுக்கு அநேக ஆண்டுகள் தர்மகர்த்தாவாக இருந்தபோது பல நாட்டுக் கோட்டை செட்டியார்களிடம் பொருள் வசூல் செய்து, இரண்டு மூன்று லக்ஷ ருபாய் மதிப்பிடும்படியான திருப்பணிகள் செய்து முடித்தார். அவர் செய்த திருப்பணியின் விவரம் கீழ்க்கண்டவாறு.

புறமதிலிலுள்ள கீழைக்கோபுரம், தெற்குக் கோபுரம் இரண்டினுள்ளும் பழுதுபட்டிருந்த சித்திரங்களை புதுப்பித்து வர்ணந்தீட்டியுள்ளனர். மேற்குக் கோபுரம் வடக்குக் கோபுரம் இரண்டிற்கும் வர்ணம் மட்டும் தீட்டினர். ஆழத்துப் பிள்ளையார் கோவிலைப் புதுப்பித்துக் கட்டினர். உள்மடப்பள்ளிக்கு மேற்புறச் சுவரை மட்டும் புதுப்பித்து உள்ளே தள வரிசை இட்டனர். வன்னிமரத்திற்கு மேடையும் அதற்கு மண்டபமும் கட்டினர். இருபத்தெட்டு ஆகமக் கோயிலைப் பிரித்துத் தனியே கட்டி இலிங்கங்களை வரிசைப்படுத்தி அமைத்தனர். வன்னியடிப் பிரகாரம், அறுபத்து மூவர் பிரகாரம் இரண்டிற்கும் தள வரிசை இட்டனர். அறுபத்துமூவர் மேடை கட்டினர். மற்றக் கட்டிடங்களிலும் மதில்களிலும் பழுதடைந்தவற்றைச் சீர்படுத்தினர். மதில்களில் இடபங்கள் அமைத்தனர். விமானங்களுக்கெல்லாம் தங்கக் கலசங்களைப் புதுப்பித்து அமைத்தனர்.இவை அனைத்தும் நகரத்தார் செய்த திருப்பணிகளாம்.

பின்னர் கி.பி.1910ல் கும்பாபிஷேகமும் நடத்தி வைத்தனர். திருமணிமுக்தா நதியில் உள்ள கருங்கல் படித்துறை முழுவதும், சென்னை வணிகர் ஆயிரவர் நகரத்தார் தியாகம் வேங்கட செட்டியார் தம்பி காளத்தி செட்டியார் என்பவரால் கி.பி.1714ல் கட்டப்பட்டது.

1940 மற்றும் 1941ஆம் ஆண்டுகளில் தேவஸ்தான அதிகாரிகள் தென்னாற்காடு மாவட்டம் முழுவதும் பல ஊர் மக்களிடம் சென்று நன்கொடை பெற்று திருக்கோயிலில் முதன் முதலில் சுமார் 150 மின் விளக்குகள் பொருத்தி யுள்ளனர். சென்னை ஹிந்து மத பரிபாலன போர்டு கமிஷனர் ராவ் பகதூர் C.M. ராமச்சந்திரன் செட்டியார் அவர்களால் 1941ஆம் ஆண்டு மார்ச் 8ஆம் தேதி இம்மின் விளக்குகள் ஒளிர வைக்கப்பட்டன.

மேலே கூறப்பட்டுள்ள திருப்பணிகள் பற்றிய செய்திகள் அனைத்தும், வித்துவான் திரு.R.சுந்தராச உடையார் அவர்கள் எழுதிய திருமுதுகுன்றத் தல வரலாறு எனும் நூல் மூலம் அறிய முடிகிறது. 1956ஆம் ஆண்டில் ஒரு கும்பாபிஷேகம் நடைபெற்றதாக கூறப்படுகிறது. ஆயினும் அதற்கான சான்றுகள் எதுவும் கிடைக்கப் பெறவில்லை. பின்னர் 21.08.1983 அன்று பழமலை நாதரிடம் பக்தி கொண்ட இவ்வூர் மக்கள், கோயிலில் பழுதடைந்து இருந்த பகுதிகளை புதுப்பித்து, தருமபுர ஆதினம் 26ஆம் குருமகா சந்நிதானம் சீர்வளர்சீர் சண்முக தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் தலைமையில் கும்பாபிஷேகம் நடத்தினர். அருள்மிகு பழமலை நாதர் பெரிய நாயகி திருவருளாலும் ஆதினங்களின் ஊக்கத்தாலும் சிவனடியார்களின் ஒத்துழைப்பாலும் எல்லா நிலைகளிலும் திருப்பணி செய்யப்பட்டு 29.04.2002ல் கும்பாபிஷேகம் நடைபெற்றது.


கண்டராதித்த சோழ மன்னன்

திருக்கயிலாய பரம்பரை தருமபுர ஆதினம் 27வது குரு மகா சந்நிதானம், ஸ்ரீலஸ்ரீ கயிலை மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அவர்களின் வழிகாட்டுதலின்படி திருக்கோயிலின் கும்பாபிஷேக குழுவினரால் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக கடந்த 06.02.2022 அன்று நடைபெற்றது.

கும்பாபிஷேக குழுவிற்கு தலைமையேற்று, கும்பாபிஷேக குழு உறுப்பினர்களை ஒருங்கிணைத்து, சீரிய முறையில் கும்பாபிஷேக பணிகளை ஆகம விதிப்படி நடத்திய விருத்தாசலம் ஸ்ரீ ஜெயின் ஜுவெல்லரி உரிமையாளர் திரு.எம்.அகர்சந்த் அவர்கள் பாராட்டுதலுக்கும், போற்றுதலுக்கும் உரியவர்.

பாகம்-4

அத்தியாயம்-3

திருக்கோயிலில் ஐந்தின் சிறப்பு

ஐந்து எழுத்து நாயகன் ஈஸ்வரன் என்னும் மகாதேவன் தொடர்புடைய நமசிவாய, சிவமயம் போன்ற வார்த்தைகளும் ஐந்து எழுத்துக்கள் கொண்டதே.

திருநாமங்கள் ஐந்து - முதுகுன்றீஸ்வரர், பழமலை நாதர், விருத்தகிரீஸ்வரர், பெரிய நாயகர், விருத்தாசலேஸ்வரர்.

தலப் பெயர்கள் ஐந்து - விருத்தாசலம், திருமுதுகுன்றம், விருத்தகிரி, நெற்குப்பை, விருத்தகாசி.

விநாயகர் ஐந்து - திருகோயிலில் எழுந்தருளும் ஐந்து விநாயகர்கள் - ஆழத்து விநாயகர், மாற்று உரைத்த விநாயகர், முப்பிள்ளையார், தசபுஜ வல்லப கணபதி, வல்லப கணபதி.

முருகர் ஐந்து - (1) அறுபத்து மூவர் பிரகாரத்தில் உள்ள சின்ன பழமலை நாதர் என்னும் உற்சவர் அடுத்துள்ள ஆறுமுகர். (2) பிந்து மாதவப் பெருமாளின் அடுத்துள்ள மயூர சண்முகர். (3) வன்னி மர பிரகாரத்தில் உள்ள சுப்பிரமணியர். (4) ஆகம கோயிலில் உள்ள ஸ்ரீ குமரேசர். (5) நவக்கிரக சன்னதி அருகில் உள்ள மலை தண்டாயுதபாணி.

நந்திகள் ஐந்து:

1.இந்திர நந்தி (போக நந்தி)

ஒரு சமயம் இந்திரன் இடப (காளை) வடிவம் கொண்டு சிவபெருமானைத் தாங்கினான். போகங்களின் அதிபதியாகிய இந்திரன் வடிவாக விளங்கும் இந்த நந்தியை 'போக நந்தி' என்றும் 'இந்திர நந்தி' என்றும் அழைக்கின்றனர். இந்த நந்தியைக் கோயிலுக்கு வெளியே சற்று தொலைவில் கருவறையை நோக்கியவாறு அமைக்கின்றனர். இந்திர நந்தி பழமலைநாதர் திருக்கோயிலின் இராஜகோபுரத்தின் நேர் கிழக்கே ஆற்றின் மறுகரையில் அம்மன் குளக்கரையில் அமைக்கப் பட்டிருந்தது.

2.வேத நந்தி (பிரம்ம நந்தி)

வேதனான பிரம்மன், நந்தி வடிவம் தாங்கியமையால் இந்த நந்தியை 'வேத நந்தி', 'வேத வெள்விடை', 'பிரம்ம நந்தி' என்று பல பெயர்களால் அழைக்கின்றனார். பிரம்மம் என்பதற்கு அளவிட முடியாத பெருமைகளை உடையது என்பது பொருளாகும். அதற்கேற்ப இந்த நந்தியை மிகப் பெரிதாகவும், கம்பீரமாகவும் அமைப்பர்.

பழமலை நாதர் திருக்கோயிலில் இராஜகோபுரத்தின் மேற்கே உள்ள கோபுர தீபாராதனை மண்டபத்தில் அடுத்து உள்ள பெரிய மண்டபத்தில் இவ்வேத நந்தி அமைக்கப்பபட்டுள்ளது.

சில வருடங்களாக ஆன்ம நந்திக்கு செய்ய வேண்டிய பிரதோஷ வழிபாடுகள் மற்றும் பூஜைகள் இந்த வேத நந்திக்கு செய்விக்கப்படுகிறது.

3. ஆன்ம நந்தி (ஆத்ம நந்தி)

ஆலயத்தில் கொடி மரத்தையொட்டி தலைமை நந்தியாக அமையும் நந்தி ஆன்ம நந்தி ஆகும், இது உலக உயிர்களான ஆன்மாக்கள் பதியாகிய சிவபெருமானைச் சார்ந்து அவருடைய நினைவில் நிலைப் பெற்றிருக்க வேண்டிய தன்மையை உணர்த்துகிறது. சிவாலயத்தில் பிரதோஷக் காலங்களில் இந்த நந்திக்குத்தான் சிறப்பு வழிபாடுகள் செய்யப்படுகிறது.

ஆன்ம நந்தி பழமலை நாதர் திருக்கோயிலில் வன்னியடி பிரகாரத்தில் கொடி மரம் அருகே சாமியின் நேர் எதிரே அமைக்கப்பட்டுள்ளது. பல வருடங்களுக்கு முன்பு வரை ஆன்ம நந்திக்குத் தான் பிரதோஷ அபிஷேகம் நடைபெற்று வந்தது.

4.மால்விடை நந்தி:

ஒரு சமயம் திரிபுராதிகளை வெல்லுவதற்காக தேவர்கள் சிவபெருமானுக்கு சிறந்ததொரு தேரினைச் செய்து கொடுத்தார்கள். தாங்கள் அளிக்கும் இந்த தேர் இல்லாமல் சிவபெருமானால் முப்புரங்களை வெல்ல முடியாது என எண்ணினர். அதை உணர்ந்த சிவபெருமான், அந்தத் தேர்த்தட்டின் மீது தன் வலது காலை ஊன்றி நின்றார். அவ்வாறு அவர் ஊன்றியபோதே அத்தேரின் அச்சு மளமளவென்று முறிந்தது. தேவர்கள் தாங்கள் செய்தளித்த ஒப்பரிய தேர் பெருமானின் ஒரு கால் அழுத்தத்தைக் கூடத் தாங்க மாட்டாமல் முறிந்தது கண்டு அஞ்சி பெருமானைத் தொழுதனர். அப்பொழுது திருமால் இடப வடிவம் கொண்டு சிவபெருமானைத் தாங்கி அவரை மகிழ்வித்தார். இந்நினைவு நீங்காது இருக்கும்பொருட்டு, திருமால் தானும் நந்தி வடிவம் கொண்டு, அவர் சன்னதியில் நிலையாக எழுந்தருளினார். அறுபத்து மூவர் பிரகாரத்தில் பழமலைநாதரின் நேரே மால்விடை நந்தி அமைக்கப்பட்டுள்ளது.

5.தர்ம நந்தி:

மகா மண்டபத்தில் அமையும் சிறு நந்தியே 'தரும நந்தி' என்பதாகும். பிரளயவெள்ளம் பொங்கிப் பெருகி வானளவு எழுந்து உலகினை அழிக்கும். அந்த சங்கார காலத்தில் யாவும் சிவபெருமானிடம் ஒடுங்கும். அப்போது

தருமம் மட்டும் நிலைபெற்று இடப வடிவம் கொண்டு சிவபெருமானைத் தாங்கும். இவ்வாறு தன்னைத் தாங்கும் இடபத்தை பெருமான் ஆரத்தழுவிக் கொண்டார். இவ்வகையில் தரும நந்தியானது இறைவனைப் பிரியாது அவருடனேயே இருக்கும். இதை உணர்த்தும் வகையில், இந்த நந்தி இறைவனுக்கு அருகாமையில் மகாமண்டபத்திலேயே எழுந்தருளியிருக்கின்றது. நம் பழமலை நாதர் ஆலயத்திலும் மூலவருக்கு நேர் எதிரே மகா மண்டபத்தில் தரும நந்தி அமைக்கப்பட்டுள்ளது.

<u>தீர்த்தங்கள் ஐந்து</u> - மணிமுக்தா நதி, அக்கினி தீர்த்தம், நித்தியானந்த கூபம், சக்கர தீர்த்தம், குபேர தீர்த்தம்.

<u>கொடி மரங்கள் ஐந்து</u> - கைலாய பிரகாரத்தில் ஆராதனை மண்டபத்தை அடுத்துள்ள கொடி மரம், வன்னியடி சுற்றில் கிழக்கு, தெற்கு, மேற்கு மற்றும் வடதிசையில் உள்ள கொடி மரங்கள்.

<u>கோபுங்கள் ஐந்து</u> - கிழக்கு (ராஜ) கோபுரம், தெற்கு கோபுரம், மேற்கு கோபுரம், வடக்கு கோபுரம், கண்டாரதித்தன் கோபுரம்.

<u>பிரகாரங்கள் ஐந்து</u> - தேரோடும் திருச்சுற்று, பஞ்சவர்ண பிரகாரம் (தற்சமயம் இப்பிரகாரம் இல்லை.) கைலாயப் பிரகாரம், வன்னியடிப் பிரகாரம் மற்றும் அறுபத்து மூவர் பிரகாரம்.

<u>முக்கிய உற்சவங்கள் ஐந்து</u> - வைகாசியில் வசந்த உற்சவம், ஆனியில் ஆனித் திருமஞ்சனம், ஆடியில் திருக்கல்யாணம், மார்கழியில் மாணிக்கவாசகர் உற்சவம், மாசியில் மாசி மகம் (பிரம்மோற்சவம்).

<u>தேர்கள் ஐந்து</u> - விநாயகர் தேர், பழமலை நாதர் தேர், விருத்தாம்பிகை தேர், முருகர் தேர், சண்டிகேஸ்வரர் தேர்.

<u>விருத்தகிரீஸ்வரரை வழிபட்ட ஐந்து தேவர்கள்</u> - திருமால், பிரம்மா, இந்திரன், குபேரன், குபேரன்-இன் தங்கை.

<u>விருத்தகிரீஸ்வரர் கோயில் கொண்டுள்ள தலங்கள் ஐந்து</u> - விருத்தாசலம், பெரம்பலூர் அருகில் உள்ள வெங்கனூர், முதனை (முதுநெய்), செந்துறை தாலுகாவில் உள்ள பழமலை நாதபுரம், அரியலூர் மாவட்டத்தில் உள்ள ஜெயங்கொண்டம்.

பாகம்-4

அத்தியாயம் - 4

திருக்கோயிலில் காணக் கிடைக்கும் கல்வெட்டுகள்

இக்கோயிலில் இருந்து 74 கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன. கண்டராதித்த சோழன் காலத்தியது 1; முதலாம் இராஜ ராஜ சோழன் காலத்தியது 9; முதல் இராஜேந்திர சோழன் காலத்தியது 4; இராஜாதி இராஜ தேவன் காலத்தியது 2; விக்கிரம சோழன் காலத்தியது 2; இரண்டாம் இராஜ இராஜ சோழன் காலத்தியது 1; மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தியது 3; (ஆக சோழ மன்னர்கள் காலத்தை சேர்ந்தவை 22 கல்வெட்டுக்கள்). காடவ மன்னரான வீரசேகர காடவராயன் காலத்தியது 2; பல்லவ மன்னன் கோப்பெருஞ்சிங்கன் காலத்தியது 13: பாண்டிய மன்னர் காலத்தியது 16; (அவற்றுள் விக்கிரம பாண்டியன் காலத்தியது 3; வீரபாண்டியன் காலத்தியது 1; சுந்தர பாண்டியன் காலத்தியது 3; மாவர்மபாண்டியன் காலத்தியது 1; கோனேரின்மைகொண்டான் காலத்தியது 8 ஆக 16 கல்வெட்டுக்கள்). விஜய நகர மன்னர் காலத்தியது 13; (அவற்றுள் கம்பண உடையார் காலத்தியது 1; பொக்கண உடையார் காலத்தியது 9; இரண்டாம் பிரதாபதேவராயர் காலத்தியது 3; ஆக 13 கல்வெட்டுக்கள்); நாயக்க மன்னர்கள் காலத்தியது 2; (அவற்றுள் முத்துகிருஷ்ணப்ப நாயக்கர் காலத்தியது 1; வையப்ப கிருஷ்ணம நாயக்கர் காலத்தியது 1) இன்னாருடைய காலம் என்று அறிய முடியாதவைகள் 5, தியாகம் காளத்தி செட்டியார் காலத்தியது 1 ஆக மொத்தம் 74 கல்வெட்டுக்கள்.

அவற்றுள் மறை ஓத, புராணம் படிக்க, தேவாரத் திருப்பதிகம் பாட ஏற்பட்டுள்ள கல்வெட்டுக்கள் 5, கோயில் பூஜைக்கு நிலம் விட்டதாக 17; திருவிளக்கிட்டதாக 24; திருவாபரணம் செய்து வைத்ததாக 4; கோயில் திருப்பணி செய்ததாக 6; நந்தவனம் வைத்ததாக 2; நட்டுவனுக்கு நெல் கொடுத்ததாக 1; பரிச்சாரகனுக்கு ஆடை கொடுத்ததாக 1; நிலம் பரிவர்த்தனை செய்ததாக 1; அரசர் பெயரால் விழா நடத்தியதாக 4; வாங்கிய கடனை கொடுக்க முடியாத ஒருவனுக்கு நெய் விளக்கு போடுமாறு தண்டனை இட்டது 1; ஆக 66 கல்வெட்டுக்கள் இக்கோயிலுக்குத் தொடர்புடையன. கைக்கோளருக்கும், வணிகருக்கும் வரித் தள்ளுபடி செய்ததாக 2, வரி வசூல் தானியமாகவும் வசூலிக்க உத்தரவு 1; அரசர் வெற்றியை கூறுவது 1; வலங்கை இடங்கையாரின் ஒப்பந்தம் 1, புரிந்து கொள்ள இயலாத கல்வெட்டுக்கள் 3; ஆக 8 கல்வெட்டுக்கள் பிற வகையில் உள்ளன.

கல்வெட்டுக்களில் காணக் கிடைக்கும் அரசர்களின் பெயர்கள்: பராந்தக சோழன், கண்டராதித்த சோழன், அவரின் மனைவி செம்பியன்மாதேவி, உத்தம சோழன், இராஜ இராஜ சோழன், இராஜேந்திர சோழன், இராஜாதி இராஜ

சோழன், விக்கிரம சோழன், 2ஆம் இராஜ இராஜ சோழன், 3ஆம் குலோத்துங்க சோழன், ஏழிசை மோகனனான குலோத்துங்க சோழ காடவராதித்தன், வீர சேகர காடவராயன், அரசு நாராயாணன் கச்சிராயன், கோப்பெருங்சிங்கன், கச்சிராயன் என்னும் அரசு நாராயணன் ஏழிசை மோகன், விக்கிரம பாண்டியன், வீர பாண்டியன், சுந்தர பண்டியன், மாவர்ம பாண்டியன், கோனேரின்மை கொண்டான், அரியண்ண உடையார், பொக்கண உடையார், கம்பண உடையார், வீர விஜயராயர், முப்பிடி கிருஷ்ணபதி முதலியனவாகும்.

பாகம்-5

பிற தொடர்புடைய புராணச் செய்திகள்

அத்தியாயம் - 1

பழமலையும் மாமுனிகளும்




ஸ்ரீ விபசித்து முனிவர்

விபசித்து முனிவர்:

இரண்டாவது யுகமான திரேதா யுகத்தில் (அப்போது பிரம்மாவின் வயது 50) கோசலை நாட்டைச் சேர்ந்த விபசித்து என்பவர் வறுமையின் காரணமாக உறவினர்களையும் இழந்து பசிப் பிணியுடன் நாடோடியாக பல இடங்களிலும் அலைந்து திரிந்தார். அப்படி ஆறு நாட்கள் திரிந்த பின் ஏழாவது நாள் ஒரு கற்சுனையில் அருகில் அமர்ந்திருந்த போது ஒரு தெய்வ விமானம் வந்து இறங்கியது. அதில் இருந்து சிவகணங்களின் தலைவரான கணநாதர், விபசித்து முனிவருக்கு காட்சி அளித்தார்.

பாஞ்சால நாட்டில் கூலிச் சுமை சுமந்து கஷ்ட ஜீவனம் நடத்தி வந்த தன வைசிய குலத்தில் தோன்றிய விதர்ஷண செட்டி என்பவர், ஒரு நாள் வணிகர் ஒருவருக்கு கூலிக்குச் சுமை எடுத்துக் கொண்டு திருமுதுகுன்றம் வந்தார். வேலை முடிந்து கூலி பெற்றுக் கொண்ட பின் திருமணிமுக்தா நதியில் நீராடி, விபூதி மற்றும் ருத்ராட்ச மாலை அணிந்து பழமலை நாதரை வணங்கினார். மறுநாளும் அதேபோல் நதியில் நீராடி, பழமலை நாதரையும் பெரிய நாயகியாரையும் வணங்கி தனது ஊருக்கு திரும்பினார்.



வன்னி மர மேடை

பின்னர் வயது முதிர்ந்து மரணம் வந்த நேரத்தில், எமதூதர்கள் வருமுன்பே விதர்ஷணர் முன் பெரிய நாயகியார், விநாயகர், சுப்ரமணியர், சண்டிகேஸ்வரர் மற்றும் சிவகணங்களுடன் பழமலை நாதர் எழுந்தருளினார். பெரிய நாயகியார், தம்முடைய முந்தானையினால் விதர்ஷணர்-இன் இறப்பு களைப்பு நீங்கும்படி வீசினார். பழமலை நாதர் மெய் ஞான உபதேசத்தை வலது செவியில் உரைத்தார். விதர்ஷண

செட்டியார் இத்தகைய இறையருள் பெற்று கண நாதராக தெய்வீக விமானத்தில் ஏறி உலகை வலம் வரத் தொடங்கினார். தற்சமயம் விபசித்து முனிவரின் முன்தோன்றி தான் பெற்ற இறையருளை விவரித்தார். ஆகையால் விபசித்து-வையும் அத்தலத்திற்கு சென்று முறையாக பழமலை நாதரை வழிபட்டு, அவர் அருளால் நலம் பெற வழிகாட்டி விமானத்தில் ஏறி மறைந்தார். திருக்கோயிலில் வன்னி மரத்தடியில் விபசித்து முனிவர் மற்றும் உரோமச முனிவருடன் விதர்ஷணர் செட்டியாரும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளார்.

மறுநாள் காலை கற்சுனையில் நீராடி, அருகில் இருந்த மரம் ஒன்றின் கீழ் அமர்ந்து விபசித்து இளைப்பாறிக் கொண்டு இருந்த நேரத்தில் விலை மதிப்பு மிக்க மாணிக்கம் பதித்த மூக்கணி ஒன்றினை பழம் என கருதி எடுத்து வந்த சிச்சிலி குருவி அம்மரக்கிளையில் அமர்ந்து கொத்திய போது, அது தவறி விபசித்து முனிவரின் மடி மேல் விழுந்தது.

தேவலோகத்தில் இருந்து விமானம் மூலம் சுனையில் நீராட தோழியர் களுடன் வந்த குபேரனின் தங்கை கழற்றி வைத்த நகைகளில் அந்த மாணிக்க மூக்கணி ஒன்று. அந்த மூக்கணியை எடுத்து வந்த பறவை தவறவிட்ட பின், அது விபசித்து முனிவர் மடிமேல் விழுந்தது. விபசித்து முனிவர் அந்த மூக்கணியை குபேரனின் தங்கையிடம் திரும்ப ஒப்படைத்தற்கு, அத்தேவலோக மங்கை அவருக்கு மீதமுள்ள மற்றைய அனைத்து ஆபரணங்களையும் பரிசாக அளித்தார். மேலும் விபசித்து முனிவரின் வேண்டுகோளின்படி விபசித்து முனிவரை, தான் வந்த விமானத்தில் ஏற்றி, திருமுதுகுன்றத்தில் விட்டு, தோழியர்களுடன் தேவலோகம் திரும்பினார்.

விபசித்து முனிவர் திருமணிமுக்தா நதியில் நீராடி, தம்மிடம் உள்ள ஆபரணங்களை, பரமசிவனின் திருவருள் வடிவமாகிய அசரீரி கூறியபடி, அங்கே இருந்த வன்னி மரத்தடியில் வைத்தார். வேண்டியதை கொடுத்தருளும் கற்பகத்தருவே இப்பதியில் சிவபூஜை செய்ய வன்னி மரமாக உருவெடுத்து வந்துள்ளது. மேலும் 'வேத நூற்களின் வழியில் வாழும், உரோமச முனிவரிடம் சென்று பிரம்ம உபதேசம் பெற்றுக் கொள்வாயாக' என்றும் அந்த அசரீரி விபசித்து முனிவரிடம் கூறியது.

தவ முதிர்ச்சி பெற்ற உரோமச முனிவரிடம் சிவஞான உபதேசம் முழுமையாக பெற்று, மனம் குளிர்ந்து, அவர் அருகில் அமர்ந்து, விபசித்து தானும் தவம் செய்யத் தொடங்கினார். விபசித்து செய்த தவப் பயனால், பழமலைக்குரிய பெரியநாயகியாருடன் பரமசிவன் விபசித்து முனிவருக்கு காட்சி அளித்து அருள் செய்தார். மேலும், திருமுதுகுன்றத்தில் திருப்பணியை முறையே செய்து முடிக்குமாறு திருவாய் மலர்ந்தருளினார்.



விபசித்து முனிவர், பழமலைநாதர் விருத்தாம்பிகை

பரமசிவன் அருளியதைக் கேட்ட விபசித்து முனிவரும், ஈசனை வணங்கி, வன்னி மரத்தில் வைத்த அந்த ஆபரணங்களை எடுப்பதற்காக அம்மரத்தின் மீது ஏற முற்பட்டபோது, பழமலை நாதருடைய திருப்பணி குறித்து வேண்டிய பொருட்களை கொடுப்பேன் என அந்த வன்னி மரம் விபசித்து முனிவரிடம் கூறியது.

திருப்பணியில் ஈடுபட்ட தினக் கூலித் தொழிலாளர்கள் ஒவ்வொரு நாளும் வேலை முடிந்ததும் வன்னி மரத்தடியின் கீழ் வந்து நிற்பர். அவரவர் செய்த வேலைக்கு ஏற்ப, ஒவ்வொருவரின் கைகளில் வன்னி மரக் கிளைகளில் இருந்து சம்பளம் வந்து விழும். தொழிலாளர்கள் மன நிறைவோடு அந்த சம்பளத்தை பெற்றுச் செல்வார்கள். **(Manual of South Arcot - by Collector of South Arcot J.H. Garstin - 1878 -** பக்கம் *440).*

வன்னி மரத்தில் உள்ள பொருட்களை எடுக்க எடுக்க வளர்ந்து பெருகிக் கொண்டு இருந்ததால், பழமலை நாதருடைய ஆலய திருப்பணி முழுமை அடைந்து ரிஷப வாகனத்தை உடைய சிவன் எழுந்தருளும்படி திருக்கோயிலும், தேரும், தேரோடும் வீதிகளையும் விபசித்து முனிவர் அமைத்தார்.

திருக்கோயில் திருப்பணி முடிந்ததும் விபசித்து முனிவருக்கு அம்பிகையுடன் பழமலை நாதர் காட்சி அளித்து போற்றி அருள் செய்தார். இந்த தெய்வீக நிகழ்வு ஐதீக விழாவாக மாசி மகப் பெருவிழாவின் ஆறாம் நாளில் இன்றும் கொண்டாடப் பட்டு வருகிறது.

<u>உரோமச முனிவர்:</u>

சித்தர்களின் முதன்மையானவராக கருதப்படும் அகத்திய முனிவரின் சீடர்களில் முக்கியமானவர் உரோமச முனிவர். இவருக்கு தென் தமிழ்நாட்டில் பொதிகை மலையில் வசித்த சிவபெருமானை நேரில் தரிசித்து, அவருடைய அருளாசியைப் பெற வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டு, அதனை அகத்திய முனிவர் இடம் தெரிவித்தார். அவரது அறிவுரைப்படி நடந்து, தாமிரபரணி ஆற்றங்கரையில் சிவபெருமானை தரிசித்து தன் ஆசையை நிறைவேற்றிக் கொண்டார்.

உரோமாபுரியில் இருந்து தென் தமிழ் நாட்டிற்கு வந்தார் என்பதால் உரோமச ரிஷி என்று ஒரு கருத்தும், இல்லை, இவரின் உடலில் ரோமம் அதிகம் இருந்த காரணத்தால், உரோமச முனி என பெயர் பெற்று இருக்கிறார் என்றொரு கருத்தும் நிலவுகிறது.

தாமிரபரணியில் நீராடி, சிவனை வழிபட்டு, பின்னர் நவகோள் வரிசையில் சிவனை வணங்க வேண்டும் என்ற அகத்திய முனிவரின் அருளாணைக்கு இணங்க, நவகோள்களை அறிந்து கொள்வதற்காக, ஒன்பது மலர்களை ஆற்றில் விட்டு, அவை எந்தெந்த கரையில் ஒதுங்குகிறதோ, அங்கு சிவலிங்கத்தை வைத்து வழிபட்டார். மலர்கள் கரை சேர்ந்த (1) பாபநாசம் [சூரியன்], (2) சேரன்மகாதேவி [சந்திரன்], (3) கோடகநல்லூர் [செவ்வாய்], (4) குன்னத்தூர் [ராகு], (5) முறப்ப நாடு [குரு], (6) ஸ்ரீவைகுண்டம் [சனி], (7) தென்திருப்பேரை [புதன்], (8) ராஜபதி [கேது], (9) சேந்தபூமங்கலம் (சுக்கிரன்) ஆகிய ஒன்பது தலங்களும் நவகைலாயம் என அழைக்கப்படுகிறது. தனது குருவான அகத்தியரின் அறிவுரைப்படி வன்னி மரத்தின் கீழ் தவம் இருந்து ஞான சித்தியையும், பழமலை நாதரின் அருளையும், உரோமச முனிவர் பெற்றார்.

ஸ்ரீயோகீஸ்வர யாக்ஞ வல்கியர்:

ப்ருஹத் கல்ப காலத்தில், கங்கை நதிக் கரையில் சமத்காரபுரா என்னும் புண்ணிய நகர் அமைந்திருந்தது. இந்நகரே தற்சமயம் குஜராத்தின் வடக்கு பகுதியில் உள்ள வாத் நகர் * ஆகும்.

இந்நகரில் வசித்து வந்த பிரம்மராதர் மற்றும் சுனந்தா என்ற பிராமண தம்பதியருக்கு புதல்வராக அவதரித்தவரே ஸ்ரீ யோகீஸ்வர யாக்ஞ வல்கியர். இவர் பிரம்மாவின் அவதாரம் என்று அறியப்பட்டார். வேதங்கள் நான்கில், ஒன்றாகிய யஜீர் வேதத்தின் ஒரு பிரிவான சுக்ல யஜீர் வேதத்தை கற்றுத் தேர்ந்தவர். மற்ற வேதங்களையும், அதற்குரிய குருவிடம் கற்றறிந்த வேத முனிவர், ஸ்ரீ யோகீஸ்வர யாக்ஞ வல்கியர். சுக்ல யஜீர் வேதத்தை தன் குருவாகிய வைசம்பாயனரிடம் கற்றுத் தேர்ந்தார். இவரின் மற்றொரு பெயர், சாகல்யர் என்பதாகும். ஒரு சந்தர்ப்பத்தில் வைசம்பாயனரின் ஆணைப்படி தான் அவரிடம் கற்ற யஜீர் வேதம் முழுவதையும் வாந்தி எடுத்து, வெளியேற்றி விடும் நிலை ஏற்பட்டது. பின்னர் சூரிய பகவானை நோக்கி தவமிருந்து வேண்டி, தன்னை சிஷ்யனாக ஏற்க வைத்து, சுக்ல யஜீர் வேதத்தில் புலமை பெற்றார்.



ஸ்ரீ யோகீஸ்வர யாக்ஞவல்கியர்

* பாரதப் பிரதமர் ஸ்ரீ நரேந்திரமோடி அவர்கள் பிறந்த ஊரும் வாத்நகரே ஆகும்.

கடவுள் தன் படைப்புகளில் வாழ்கிறார்.
அவரது படைப்புகள், அவரது வெளிப்பாடுகளே.
கடவுள் ஒவ்வொருவரிடமும் இருக்கிறார்.
ஒவ்வொரு மனிதனும் கடவுளின் ஆக்கமே.

மேற்கண்டவையே யஜீர் வேதத்தின் சராம்சமாகும். யாக்ஞவல்கியருக்கு கார்த்தியாயினி மற்றும் மைத்ரேயி என்ற மனைவிகள் இருந்தனர்.



மைத்ரேயி, கார்த்தியாயினியுடன்
ஸ்ரீ யாகஞவல்கியர் (சென்னை,பல்லாவரம்)

மிதிலையின் மன்னன் ஜனகர் அசுவமேத யாகம் நடத்தினார். அதில் பல மஹரிஷிகளும்,வேத விற்பன்னர்களும் கலந்து கொண்டனர். கூடியிருந்த மஹரிஷிகளின் சிறந்தவர் ஒருவருக்கு ஆயிரம் பசுக்களையும், அநேக பொன்னும் தட்சணையாகக் கொடுக்க, மன்னர் விரும்பினார். அதில் கலந்துகொண்ட ஸ்ரீயாக்ஞவல்கியர் அங்குள்ள மஹரிஷிகளில் தானே சிறந்தவர் என்று கூறி, அதனை மன்னர் ஏற்றுக் கொள்ள வேண்டும் என விருப்பம் தெரிவித்தார்.

கார்கி என்ற பெண் ரிஷி உள்பட பலர், ஸ்ரீ யாக்ஞ வல்கியரை கேள்விக் கேட்டு உரிய பதில் பெற்றனர். பின்பு வைசம்பாயனர் என்னும் சாகல்யர் பல கேள்விகளைக் கேட்க, அவைகளுக்கும் ஸ்ரீ யாக்ஞ வல்கியர் தக்க விடையளித்து, தான் கேட்கும் ஒரு கேள்விக்கு சாகல்யர் மறுமொழி சொல்லாவிட்டால், அவரது தலைவிழும் என்று சொல்லிக் கேள்வி கேட்டார். அந்தக்கேள்விக்கு உரிய விடை கூற முடியாமல், சாகல்யரின் தலை துண்டிக்கப்பட்டு மரணம் அடைந்தார்.

இதனை கண்ட ஜனகர், ஸ்ரீ யாக்ஞ வல்கியரை வணங்கி, தனது சபையில் ஒரு பிராமணனின் மரணம் நேர்ந்ததே என்று வருந்தினார். உடனே ஸ்ரீ யாக்ஞ வல்கியர், மணிமுக்தா நதியில் நீராடி, பழமலை நாதரை பூஜித்து பெற்ற மிருத சஞ்சீவனம் என்னும் மந்திரத்தை ஜபித்து அதன் மகிமையால் இறந்த சாகல்யரை மீண்டும் பிழைக்கச் செய்தார்.


மைத்ரேயி, கார்த்தியாயினி உடன் கூடிய ஸ்ரீ யாக்ஞ வல்கியரின் திருக்கோயில், சென்னை பழைய பல்லாவரம், பெருமாள் கோயில் தெருவில் ஸ்ரீயாக்ஞவல்கிய சபை என்ற அமைப்பினரால் கட்டப் பெற்று உள்ளது. ஸ்ரீகாயத்திரி மற்றும் சூரிய பகவானின் சந்நிதிகளும் இக்கோயிலில் அமைக்கப்பட்டுள்ளன.

அகத்திய முனிவர்:


ஸ்ரீ அகத்தியர்

இவரது தோற்றம் குறித்து பல விதமாக கூறப்படுகிறது. விந்திய மலை நெடிதுயர்ந்து சிவந்த கிரகணங்களையுடைய சூரிய, சந்திரரை மறைத்து, இரவு, பகல் இல்லாத நிலை தோன்றியது. பூமியில் மழையின்றி, தெய்வங்களுக்குரிய பூஜைகள் சரிவா நடக்காமல், ஓர் குழப்ப நிலை நிலவியது. இந்நிலை கண்டு, பிரம்ம தேவர் இட்ட ஆணைப்படி, அகத்தியர் தென் நாட்டினை நோக்கி வந்தார். அவரைக் கண்ட விந்திய மலை, அவரின் ஆணைப்படி, பூமிக்குள் அடங்கியது. அதன் பின் பூமியில் சகஜ நிலை திரும்பியது.

வில்லவன், வாதாபி என்னும் இரு அசுரர்கள் முனிவர்களை கொல்வதையே தொழிலாகக் கொண்டு இருந்தனர். அவர்கள் இருந்த இடத்திற்கு அகத்தியர் தனியே சென்றார். அசுரர்கள் இருவரும், முனிவரை வரவேற்று, பூஜித்து விருந்துண்ண அழைத்தனர். அண்ணன் வில்லவன் ஆட்டு வடிவமாகிய தம்பியை அறுத்து சமைத்து அகத்திய முனிவருக்கு பரிமாற, முனிவரும் அதனை உண்டார். அண்ணன் 'வாதாபி' என தம்பியை அழைத்து, முனிவரின் வயிற்றைக் கிழித்து வெளி வர அழைத்தான். ஆனால், முனிவர் தன் தவ வலிமையால், அண்ணன், தம்பி இருவரையும் அழித்துச் சாம்பலாக்கினார்.


ஸ்ரீ சுக்ராச்சிரியார்

அகத்திய முனிவர் கொடிய விந்திய மலையை கண்ட பாவத்தையும், கொடியவனாகிய வாதாபியின் மாமிசத்தை உண்ட பாவத்தையும் நீக்க வேண்டி, திருமுதுகுன்றம் வந்து, திரு மணிமுக்தா நதியில் நீராடி, அடியார்களுக்கு அருளும் பழமலை நாதரின் திருவடிகளை வணங்கினார். பழமலை நாதரும் திருமேனிக் கொண்டு எழுந்தருளி, அகத்திய முனிவருக்கு காட்சி அளித்து, அவருடைய பாவங்களைப் போக்கி அருளினார்.

பாகம்-5

அத்தியாயம் - 2

பழமலை நாதர் தொடர்புடைய திருக்கோயில்கள்

கோபர்வதம் என்கிற கோபுராபுரம்:



ஸ்ரீ ஆதிசக்தீஸ்வரர் திருக்கோயில், கோபுராபுரம்

தாருகாவன முனிவர்கள் மற்றும் அவர்தம் மனைவியர்கள் ஊர்மக்களிடம் கருத்து ஒற்றுமை இல்லாது அவர்களை அவமதித்து வந்தனர். சிவபெருமான் மோகினி வடிவம் பெற்ற திருமாலுடன் பிச்சாடன மூர்த்தியாக சென்று அந்த முனிவர்களையும் அவர்தம் மனைவியர்களையும் மயக்கி பின் அவர்களை நல்வழிப்படுத்தினார் என்பது புராணம். சிவன் தாருகாவனம் சென்ற காலத்தில் உமாதேவியரை நந்தி தேவரின் துணையுடன் விருத்தாசலத்திற்கு வடகிழக்கில் முன்னொரு காலத்தில் இருந்த ஒரு வனத்தில் தங்கியிருக்கச் செய்தார்.

இந்த தலமே நந்தி தேவருடை பெயரால் கோபர்வதம் என்றும் சக்தினுடைய பெயரால் சத்தீஸ்வரம் என்றும் இரு திருநாமங்களுடன் அழைக்கப் பட்டது. உமாதேவியார் அந்த வனத்தில் ஒரு சிவலிங்கத்தை கண்டார். சிவலிங்கம் இருந்த இடத்திற்கு ஈசான திசையில் ஒரு தீர்த்தத்தையும் கண்டார். நந்தி தேவர் பணி செய்ய அந்த சிவலிங்கத்தை உமாதேவியார் பூஜித்தார்.

இத்திருக்கோயில் அருள்மிகு ஆதிசக்தீஸ்வரர் திருக்கோயில் என அழைக்கப்பட்டது. இத்திருக்கோயிலில் ஆதிசக்தீஸ்வரர், ஆதிசக்தீஸ்வரி, பைரவர், முருகர், கஜலட்சுமி, நவக்கிரகம் முதலிய தெய்வங்கள் தனிச் சன்னதியில் அருள் பாலிக்கின்றனர், இது தவிர நந்தி பாராயணர் சமாதியும், சசிவர்ணர் சமாதியும் உள்ளன. தல விருட்சம் இலந்தை மரம்.

ஆதிசக்தீஸ்வரர் சுயம்புவாக தோன்றிய இடத்தில், தற்பொழுது ஒரு விநாயகர் கோயில் உள்ளது. அதன் அருகிலேயே திருக்கோயிலின் தீர்த்த குளம் (புஷ்கரணி) உள்ளது.

அருள்மிகு சுவேதாரண்யேஸ்வரர் திருக்கோயில், இராஜேந்திர பட்டிணம் (என்கிற) திரு எருக்கத்தம் புலியூர்:


ஸ்ரீ சுவேதாரண்யேஸ்வரர் திருக்கோயில், இராஜேந்திரபட்டினம்

முன்னொரு காலத்தில், திருமுதுகுன்றத்தில் பழமலை நாதரை வழிபட்டு வந்த தேவர்கள், தாங்கள் தவமியற்ற ஒரு புண்ணிய தலத்தைக் கூறி அருளும்படி வேண்டினர். சிவபெருமான் திரு எருக்கத்தம்புலியூர் என்ற சிவத் தலத்தை அவர்களுக்கு அடையாளம் காட்டினார்.

இத்தலத்தில் ஒரு காலத்தில், நைமிசாரண்ய முனிவர்கள், மரங்களின் உருவில் வாழ்ந்துள்ளனர். வேடர்கள் தங்களின் வருமானத்திற்காக இம்மரங்களை வெட்டி விறகாக விற்கத் தொடங்கினர். இது கண்ட, இத்தல இறைவன் அம்மரங்கள் அனைத்தையும் வெள்ளெருக்கு மரங்களாக மாற்றினார். வெள்ளெருக்கு மரங்கள் விறகாகப் பயன்படுத்த முடியாது. இதன் பொருட்டே இத்தலம் எருக்கத்தம் புலியூர் என்றும் அழைக்கப்பட்டது.

கைலாய மலையில் சிவபெருமான், உமாதேவியருக்கு நான்மறைகளின் விளக்கத்தை கூறிக் கொண்டிருக்கும் போது, தேவியாரின் கவனம் வேறு பக்கம் இருந்தது. கோபமுற்ற இறைவன், பார்வதி தேவியை பூவுலகில் பர்வத குல பெண்ணாக பிறக்கும்படி செய்து விட்டார். தாய்க்கு நேர்ந்த கதியைக் கண்டு, கலக்கம் அடைந்த இளைய புதல்வர் சுப்பிரமணியர் வேதங்கள் எழுதப் பெற்ற பனை ஓலைகளை கடலில் வீசி எறிந்து விடுகிறார்.

இதனால் கோபமுற்ற இறைவன் சுப்பிரமணியரை ஊமையாகப் பிறக்கும்படி சாபமிட்டு விடுகிறார். அப்பிறவியில் அவர் குமரேசன் என அழைக்கப்பட்டார். குமரேசன், திரு எருக்கத்தம் புலியூரில் ஈசனை வணங்கி, பேசும் திறன் பெற்றார். ஈசனை, குமரன் வணங்கியதால், இத்தலம் குமரேசுரம் என்றும் அழைக்கப்பட்டது. உஜ்ஜயினியை ஆண்ட சுவேதன் என்ற அரசனுக்கு முன் வினைப் பயனால் ஏற்பட்ட வெண்குஷ்டம், இத்தல தீர்த்தத்தில் நீராடி, சிவ பூஜை செய்ததின் பலனால் நீங்கியது. சுவேத மன்னனுக்கு அருள்புரிந்த இத்தல ஈசன் சுவேதாரண்யேஸ்வரர் என்றும் அழைக்கப்படுகிறார்.

இராஜராஜ சோழன் புத்திரபாக்கியம் வேண்டி, இத்தல ஈசனை வணங்கியதன் பலனாக அவருக்கு இராஜேந்திர சோழன் பிறந்தார். அதனால் இத்தலத்திற்கு இராஜேந்திர பட்டிணம் என்ற பெயர் ஏற்பட்டது. மூலவர் திருக்குமாரசாமி, சுவேதாரண்யேஸ்வரர் என்ற பெயர்களிலும் சுயம்புலிங்கமாக அருள்பாலிக்கிறார். அன்னை வீரா முலையம்மன், அபின்னகுச நாயகி என்ற

பெயர்களிலும் அழைக்கப்படுகிறார். சிவன் அருள் நிறைந்த இத்தலம், விருத்தாசலம் நகரில் இருந்து சுமார் 13 கி.மீ. (கிலோ மீட்டர்) தொலைவில் உள்ளது.

இறைவனே வனமாக இருக்கும் தலம் நைமிசாரண்யம்:

மகா விஷ்ணுவின் 108 திவ்ய தேசங்களில் ஒன்றாகப் போற்றப்படும் நைமிசாரண்யம் எனும் இத்தலம் உத்திரப் பிரதேசம் மாநிலம், லக்னோவிருந்து 80 கி.மீ. தொலைவில், கோமதி நதிக்கரையில் அமைந்துள்ள வைணவத் தலம் ஆகும். நைமி என்பதற்கு சக்கரம் அல்லது சக்கர வளையம் என்று பொருள். ஆரண்யம் என்றால் காடு. நேமி சார்ந்த ஆரண்யம் என்பதே நைமிசாரண்யம் என்று ஆகியுள்ளது. ஒரு முறை சவுனகர் என்ற முனிவர் தலைமையிலான தவ வலிமையில் சிறந்த முனிவர்கள் பலரும் கூடி 12 ஆண்டுகள் செய்யக் கூடிய சந்திர வேள்வியைச் செய்ய விரும்பினர். அதற்குத் தகுந்த இடத்தை தேர்வு செய்து தரும்படி பிரம்மனிடம் கேட்டனர்.



உடனே பிரம்ம தேவன் ஒரு தர்ப்பைப் புல்லை எடுத்து, அதை ஒரு வளையமாக செய்து, பூமியை நோக்கி உருட்டி விட்டார். அது உருண்டு சென்று விழும் இடத்தில் தவம் செய்யுங்கள் என்றார். அதுவே நைமிசாரண்யம் பகுதி என்கிறது இத்தலத்தின் புராணம். நைமிசாரண்யத்தில் தான் நான்கு வேதங்களும், பதினெட்டு புராணங்களும், ஆறு சாஸ்த்திரங்களும் (வேதாந்தம், வைசேஷிகம், பாட்டம், ப்ரபாகரம், பூர்வ மீமாம்சை, உத்ர மீமாம்சை) இயற்றப்பட்டன.

ஸ்ரீமகாவிஷ்ணு, நைமிசாரண்யத்தில் உள்ள ஸ்ரீ தேவராஜபொருமாள் திருக்கோயிலில் தேவராஜன் மற்றும் ஸ்ரீ ஹரி என்ற நாமங்களில், நின்ற கோலத்தில் அருள்பாலிக்கிறார். தாயார் ஸ்ரீ ஹரி லட்சுமி மற்றும் புண்டரீகவல்லி என்ற நாமங்களில் அருள்பாலிக்கிறார். இங்கே சக்ர தீர்த்தம், கோமதி நதி ஆகிய இரு தீர்த்தங்கள் உள்ளன. கோமதி நதிக்கு ஆதி கங்கை என்றும் பெயர் உள்ளது. பூமியில் பிரம்ம தேவனால் முதன் முதலில் படைக்கப்பட்ட நதியே கோமதி நதி.

விஷ்ணு, சுயம்புவாக தோன்றிய எட்டு தலங்களில் நைமிசாரண்யமும் ஒன்று. மற்றவை திருப்பதி, ஸ்ரீமுஷ்ணம், நாங்குனேரி, முக்திநாத் (நேபாளம்), புஷ்கர் (ராஜஸ்தான்), பத்திரிநாத் (உத்திரகாண்ட்) மற்றும் ஸ்ரீரங்கம்.

பாகம்-5

அத்தியாயம் - 3

விநாயகப் பெருமானின் அறுபடை வீடுகள்

முருகப்பெருமானுக்கு அறுபடை வீடுகள் இருப்பதைப்போல் விநாயகப் பெருமானுக்கும் அறுபடை வீடுகள் உள்ளன என்கிறார்கள் பெரியோர்கள். பிள்ளையாரின் அறுபடை வீடுகளில் இரண்டாவதாக இருப்பவர் பழமலை நாதர் திருக்கோயிலில் உள்ள ஆழத்துப் பிள்ளையார்.

கணபதியின் அறுபடை வீடுகளில் முதலாலதாக திகழ்வது திருவண்ணாமலை அருணாசலேஸ்வரரின் ஆலயத்தின் நுழைவு வாயிலுக்கு அருகில் வடக்கு பார்த்த சந்நிதியில் அருளும் வினை தீர்க்கும் விநாயகர்.

விநாயகரின் படைவீடுகளில் மூன்றாவதாக இருப்பது திருக்கடவூர் கள்ளவாரண பிள்ளையார். திருக்கடவூர் அமிர்தகடேஸ்வரர் ஆலயத்தில் சிவன் சந்நிதியின் நந்திக்கு வலது புறம் பிள்ளையார் சந்நிதி அமைந்துள்ளது.

கஜானமூர்த்தியின் படைவீடுகளில் நான்காவதாக இருப்பது மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தின் நுழைவு மண்டபத்தில் வீற்றிக்கும் சித்தி விநாயகர் சந்நிதி. மீனாட்சி அம்மன் சந்நிதியின் நுழைவு வாயின் இடது புறமாக இந்த கணபதி கம்பீரமாக காட்சி அளிக்கிறார்.


வேழமுகத்தானின் படைவீடுகளில் ஐந்தாவதாக இருப்பது காசியில் இருக்கும் துண்டி ராஜ கணபதி சந்நிதி. காசி மகாத்மியம் என்ற நூலைப் பாடி பரவசப்படும் கணபதி இவர். காசி விஸ்வநாதர் ஆலயத்துக்கு முன்பு துண்டி கணபதியின் ஆலயம் உள்ளது. காசிக்குச் சென்று துண்டி பிள்ளையாரை வணங்க முடியாதவர்கள், பிள்ளையார்பட்டி கற்பக விநாயகரை வணங்கி அதே அருளைப் பெறலாம் என்று ஆன்றோர்கள் சொல்கிறார்கள்.

தும்பிக்கையானின் படைவீடுகளில் ஆறாவதாக இருப்பது திருநாரையூர். இந்தத் தலத்தில் இருக்கும் புகழ்பெற்ற பொள்ளா பிள்ளையார் சந்நிதி, கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் அருகே உள்ள திருநாரையூரில் ஆறாவது படைவீடாகத் திகழ்கிறது. திருநாரையூர் சவுந்தர்யேஸ்வரர் ஆலயத்தின் இடப்பக்கம் உள்ள சந்நிதியில் அருளும் பிள்ளையார் உளி கொண்டு செதுக்கப்படாதவர் என்பதால் பொள்ளா பிள்ளையார் என்று போற்றி வணங்கப் பெறுகிறார்.

பாகம்-5

அத்தியாயம் - 4

ஞானக்கூத்தரும் தலபுராணமும்



ஸ்ரீ ஞானக்கூத்த சிவப்பிரகாச சுவாமிகள்

பாரத நாட்டு இலக்கியங்களுள் புராணம் ஒரு பெரும் பகுதி. எது தொன்றுதொட்டு இன்று வரை பரவி இருக்கின்றதோ அதுவே புராணம் என்று வாயு புராணம் கூறுகிறது. அதர்வண வேத காலத்திலே புராண நூல்கள் சிறந்த இலக்கியங்களாக கருதப்பட்டு இருக்கின்றன. புராணம் என்னும் சொல் உபநிஷதங்களிலும் சாஸ்திரங்களிலும் காணப்படுகின்றன.

புராணங்களில் ஆதி புராணங்கள் புத்தர் காலத்திற்கு முன்னரும் ஏனைய புராணங்கள் மகா புராணங்கள், உப புராணங்கள் புத்தர் காலத்திற்கு பின்னரும் ஆக்கப்பட்வை எனக் கூறலாம்.

புராணங்களில் மகா புராணங்கள் பதினெட்டு, உப புராணங்கள் பதினெட்டு. பிரமம், பதுமம், வைணவம், சைவம், பாகவதம், பவிஷ்யம், நாரதீயம், மார்க்கண்டேயம், ஆக்கினேயம், பிரம்மகைவர்த்தம், இலிங்கம், வராகம், வாமனம், கூர்மம், மச்சம், காருடம், ஸ்கந்தம் மற்றும் பிரமாண்டம் ஆக பதினெட்டு மகா புராணங்களாகும். ஜைன, பௌத்த மதத்தினரும் புராணங்களை இயற்றியுள்ளனர்.

புராணம் என்பதற்கு பழமை என்று பொருள். வேதம், இதிகாசம் இவற்றிற்கு அடுத்தபடியாக புராணங்கள் வடமொழியில் பாராட்டப்படுகின்றன. வடமொழி புராணங்கள் பல தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

தல புராணங்கள் தமிழ் இலக்கியத்தில் சிறந்ததோர் இடம் பெறுகின்றன. தமிழ் நாட்டுத் தலங்கள், தீர்த்தங்கள், மூர்த்திகள் ஆகியவற்றைப் பற்றியும் கோயில்களைப் பற்றியும், இறைவனின் ஆசி பெற்ற முனிவர்கள், நாயன்மார்கள், ஆழ்வார்கள் போன்ற அருளாளர்கள் பற்றியும் கதை வடிவமாக விளக்கி வைத்த புராணங்களே தல புராணங்கள்.

ஆதியில் சிவபெருமான், நந்தி தேவருக்கு புராணத்தைக் கூற, அவர் சனற்குமாரருக்கு விளக்கினார். அவர் வியாசருக்கு எடுத்து உரைக்க வியாசர் சூதர்க்கு வெளிப்படுத்தினார் என மரபு வழியாக வந்ததாக, திரு.அ.சிங்காரவேலு முதலியார் (பச்சையப்பன் கல்வி நிறுவனங்களின் தமிழாசிரியர்) அவர்கள் 1899ஆம் ஆண்டு எழுதிய 'அபிதான சிந்தாமணி' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

பதினெட்டு மகா புராணங்களை சிவபெருமான் உமையவளுக்கு கூற, அதைக் கேட்ட முருகக் கடவுள் வேத வியாசருக்குச் சொல்ல, அவர் சுமந்த முனிவருக்கு சொல்ல, அவர் தேவர்களுக்கு சொல்ல, தேவர்கள் சூதர் என அழைக்கப்பட்ட நைமிசாரண்யம் முனிவர்களுக்கு சொல்லியதாக ஞானக்கூத்தர் கூறுகிறார். இந்த பதினெட்டு புராணங்களில் பத்தாவது புராணமே பெருமை பொருந்திய பிரம்ம கைவர்த்தன புராணம் என்பதாகும்.

பிரம்மகைவர்த்தன புராணத்தில் உள்ள திருமுதுகுன்ற செய்திகளை ஞானக்கூத்தர் விருத்தப் பாக்களில் விருத்தாசல புராணமாக பாடியுள்ளார். இது வே திருமுதுகுன்றத்தின் முதல் தல புராணம் எனக் கூறலாம். விருத்தாசல புராணம் என்றவுடன் அனைவருக்கும் நினைவில் வருபவர் ஞானக்கூத்தர் மட்டுமே. இவரது காலம் 16ஆம் நூற்றாண்டு ஆகும்.



ஸ்ரீ ஞானக்கூத்த சிவப்பிரகாச சுவாமிகள் திருக்கோயில், சேப்பாக்கம்.

ஐந்தாவது வயதில் நாகம் தீண்டி மரணித்த அருள்மிகு ஞானக்கூத்தருக்கு திருநீறு அணிவித்து 'ஞானக்கூத்தா எழுந்து வா' என திருவண்ணாமலை துறையூர் வீர சைவ ஆதினத்தை தோற்றுவித்த ஆதி சிவப்பிரகாச சுவாமிகள் அழைக்க, இறந்த குழந்தையானது உறக்கத்தில் இருந்து எழுந்தது போல உயிர் பெற்று எழுந்து, மகிழ்ச்சியுடன் சுவாமிகளின் முன் பக்தியுடன் வணங்கி நின்றது.

தனது உயிரை மீட்டுத் தந்த, அருள்மிகு ஆதி சிவப்பிரகாச சுவாமிகளுக்கு, ஞானக்கூத்தர் தொண்டுகள் செய்து, அவருடைய சீடரும் ஆனார். வீர சைவ சமயத்துக்குரிய சிவலிங்க தாரண தீட்சையும், சங்கம தீட்சையும் ஆதின முறைப்படி ஆதி சிவப்பிரகாச சுவாமிகள் அவருக்கு அளித்து ஞானக்கூத்த சிவப்பிரகாச சுவாமிகள் என்ற பெயரையும் சூட்டினார்.

சுவாமிகள் தோற்றுவித்தருளிய திருவண்ணாமலை துறையூர் வீர சைவ ஆதினத்தின் இரண்டாவது குரு மகா சந்நிதானமாக ஞானக்கூத்தர் எழுந்தருளிய போது பழமலை நாதரையும் பெரிய நாயகியாரையும் அடிக்கடி தரிசனம் செய்து கொண்டிருந்தார். இறைவன், இறைவி மற்றும் முதுகுன்றத்தின் திருவருளையும், பெருமையையும் உணர்ந்து தல புராணம் இயற்றினார்.

அவர் நெடுநாள் பழமலைப் பதியில் தங்கிப் பழமலை நாதரையும் பெரிய நாயகியாரையும் தரிசித்து வந்தார். அக்காலத்தே, பழமலை எல்லைக்குள், தான் மல மூத்திரங்களைக் கழிப்பதில்லை என்ற கொள்ளையுடையவராய் இருந்தார். உடல் தளர்ந்த பின் அக்கொள்கைக்கு இடர் நேர்ந்திட வருந்தினார். அருள் உருவாம் பெரிய நாயகியார் காட்சி தந்து, 'அன்பனே! நீ, சிவன்பாக்கம் சென்று தங்கியிருப்பாய், அவ்விடம் வந்து நாமே காட்சி தருவோம்' என்று அருள் செய்து மறைந்தருளினார்.

ஞானக் கூத்தரும் அவ்வாறே சிவன் பாக்கத்தே (தற்சமயம் - சேப்பாக்கம்) தங்கியிருந்து தவம் செய்தார். பெரிய நாயகியாரும் அவருக்கு காட்சி தந்து வரலானார். இறுதியில் ஞானக்கூத்தர் அவ்விடத்திலேயே சிவானந்த பேரொளியில் கலந்தருளினார். ஞானக்கூத்தருக்கு அங்கே கோயிலும் ஏற்பட்டுள்ளது.

விருத்தாசலத்தில் இருந்து கள்ளக்குறிச்சி செல்லும் சாலையில் வேப்பூரை அடுத்து சுமார் 5 கி.மீ. தொலைவில் சேப்பாக்கம் பஸ் நிறுத்தம் உள்ளது. அங்கிருந்து நெடுஞ்சாலையின் இடது புறம் சுமார் 1.5 கி.மீ தொலைவில் ஞானக்கூத்தரின் திருமடம், திருவண்ணாமலை துறையூர் வீர சைவ ஆதினத்தினரால் அமையப் பெற்றுள்ளது.

ஞானக்கூத்தர் இறைவனுடன் இரண்டறக் கலந்த இடத்தில் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டு தினமும் இரண்டு கால பூஜையும், மாசி மாதம் மகம் நட்சத்திரத்தில் மகா குருபூஜை விழாவும், திருக்கயிலாய பரம்பரை மெய்கண்ட சந்தானம் திருவண்ணாமலை துறையூர் வீரசைவ ஆதீனத்தினால் நடத்தப்படுகிறது.

பாகம்-5

அத்தியாயம் - 5

தல புராணச் சிறப்பு

தவமேதும் செயவேண்டாம் தருமங்கள் செய வேண்டாம்
புவனேசன் விருத்தகிரி புராணத்தைப் புலம்பட்டால்
கவலாதே கற்றோரும் கேட்டோரும் கதியடைவர்
சிவன் ஆணை, சிவன் ஆணை, சிவன் ஆணை சத்தியமே.

திருமுதுகுன்ற தல புராணத்தை தெளிவாக கற்றுணர்ந்தவர்கள், கேட்டவர்கள் தவம், தருமம் ஏதும் செய்யாவிட்டாலும் சாயுச்சியம் என்னும் 'மறுபிறவியின்றி இறைவனுடன் இரண்டறக் கலக்கும்' நிலையினைப் பெறுவர் என்பது சிவன் ஆணைப்படி உண்மை ஆகும் என அருள்மிகு ஞானக் கூத்த சிவப்பிரகாச சாமிகள் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

திங்கள் மும்மழை பெய்க செழும்புவி
பொங்கி வாழ்க புரவலன் ஓங்குக
நங்கன் சங்கரன் பூசை நலம்பெற
சங்கரன் அடியார்கள் தழைக்கவே.

'முக்தி தரும் முதுகுன்றம்' என்னும் இத்தல புராணம் இத்துடன் நிறைவு செய்யப்படுகிறது.

எந்நாட்டவற்கும் இறைவா போற்றி!
திருச்சிற்றம்பலம்.

ஆதார நூல்கள் மற்றும் வலைதளங்களின் பட்டியல்

(Bibliography)

1. அருள்மிகு ஞானக்கூத்தர் எழுதிய விருத்தாசல புராணம்- அருள்மிகு குமாரதேவர் திரு மடத்தின் வெளியீடு - 5ஆம் பதிப்பு (2017).
2. வித்துவான் ஆர்.சுந்தரராச உடையார் எழுதிய திருமுதுகுன்றத் தல வரலாறு- விருத்தகிரீஸ்வரர் தேவஸ்தான வெளியீடு - 5 ஆம் பதிப்பு - 1982. (முதல் பதிப்பு 1942இல் வெளியிடப்பட்டது.)
3. திரு. ஆ. சிங்காரவேலு முதலியார் எழுதிய "அபிதான சிந்தாமணி" (The Encyclopedia of tamil Literature) - Asian Educational Services-இன் 11வது மறு அச்சு 2022 (முதல் வெளியீடு - 1899).
4. துறைமங்கலம் சாமிநாதைய தேசிகர் அவர்களால் 1759-இல் எழுதப்பட்ட "பழமலைக் கோவை",டாக்டர் உ.வே.சாமிநாத அய்யர் அவர்களின் குறிப்புரையுடன் 1935ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.
5. டாக்டர் மா. இராசமாணிக்கனார் எழுதிய சேக்கிழார் - பூரம் பப்ளிகேஷன்ஸ் வெளியீடு - 4ஆம் பதிப்பு - 1995 (முதல் பதிப்பு 1947).
6. **The Great Yogeswara Yagnavalkya by V. Jalaja Sakthidasan - Published by Nithyananda Jothi Nilayam, Madras - 28. First Edition: 1991.**
7. **Manual of South Arcot District - By J.H.Garstin, Collector of South Arcot. - 1878.**
8. **Madras District Gazetteers - South Arcot - By W.Francis, I.C.S., 1906.**
9. **Census of India 1961 - Volume IX, Madras, Part XI-D. Temples of Madras State -ii Tiruchirappalli and South Arcot - 1966.**
10. மலை மருந்தன் என்னும் பருவத சஞ்சீவி அவர்கள் எழுதிய அருணாசல புராணம், விருத்தாசல புராணம், திருவோத்தூர் புராணம் - பதிப்பாசிரியர் S.ராஜலட்சுமி, சம்ஸ்கிருத பண்டிதர்,சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.
11. தினமலர் பத்திரிகை - திருக்கோயில்கள் வலைதளம்.
12. https:\\vipasana-vidushika.blogspot.com/2014/03/sages-from-hindu-scriptures-yajnavalkya.html
13. https:\\www.paritharam.info/category/temple info/page/2/

ஆவண நகல்கள்

MADRAS DISTRICT GAZETTEERS.

SOUTH ARCOT.

BY

W. FRANCIS,

I.C.S. CIVIL SERVICE.

MADRAS

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.

1906

CHAP. XV. VRIDDHACHALAM.

The most noticeable thing, architecturally, in the great temple is the mantapam which stands just west of the principal entrance and within the first enclosure. Each side of it (as is often the case) are wheels and horses to show that it was a vehicle of the god. Its ceiling is divided into panels with unusual figures upon them and its 24 pillars are delicately carved in a manner foreign to this part of the country and some of them stand on odd, squatting yális, a design which is very unusual in South Arcot but occurs in some instances at the Seven Pagodas in Chingleput district. Unluckily the detail of the ornament has been clogged with frequent coats of most tenacious whitewash. The inscriptions in this temple have not yet been deciphered and may perhaps throw some light on the date of this construction. A short record on its stylobate says that it was built by a Kádava (Pallava) Rája, but gives no other particulars.

The popular legend about the construction of the temple says that it was erected by one Vibhájit. During his wanderings he came to the town and was resting in a grove when a company of celestial damsels came to bathe in a pool close by. One of them was the daughter of Kubéra, the god of wealth, and before entering the water she took off a priceless jewel, a gift of the gods, which she was wearing. A bird, mistaking it for a fruit, flew off with it into the tree under which Vibhájit was sitting and dropped it into his lap. The owner of the jewel soon discovered her loss and, suspecting her companions, offered all her other ornaments to any one who would restore the one she had lost. Vibhájit took her the gem and was rewarded by a gift of all the others, with the proceeds of which he made the temple. His image stands under an ancient, gnarled, tree within the enclosure, and it is declared that while the building was being constructed the workmen used to go daily to this tree and that from its branches dropped the exact amount of each man's wages.

The chief festival occurs in Mási (February-March) and is attended by great crowds. Bathing in the river during this feast (especially on the full moon day) is most efficacious, particularly if done in the reach called *punya maduvu*, or 'pool of bliss,' from which the gilded pinnacles of the temple are visible. Among some castes, the bones of persons who have died during the year are thrown into the stream on this day and reverence is paid to their memory; and widows who have lost their husbands in the preceding twelve months then for the first time remove their *tális* amid the wailing of their relatives.

CHAP. XV
VRIDDHA-
CHALAM.

were destroyed accordingly. Their remains were thrown into the water and turned into earth by Siva, at the request of Brahma. The mass hardened and increased in size till it almost reached the skies. This was the first mountain and was called Vriddhagiri. Brahma, to whom the work of creation was assigned, afterwards formed innumerable mountains and hills and ordered them to establish themselves in different parts of the world, but this they were unable to do since Vriddhagiri covered the whole earth. Siva then, at the entreaty of Brahma, sunk Vriddhagiri into the earth and so made room for Brahma's mountains and hills. In this way the oldest of all mountains is invisible, but the very top of it is said to appear in the beds of 'Cuddalore sandstone' which are to be seen at Váyalúr, about two miles to the north of the town.

The temple is built on the usual Dravidian plan. It has a high enclosing wall, pierced by gateways facing the four points of the compass and surmounted by tall gópurams, within which is a second wall surrounding the central shrine and the lesser buildings grouped about it. It is now being repaired by the Náttukóttai Chettis, who have already renovated the east and south gópurams with painted plaster-work and are now going on with the restoration of the inner buildings. The lower portions of the gópurams are made, as usual, of stone and the panels on these are decorated with the dancing figures which have already been noticed as occurring in similar positions in several other temples.

There are shrines to two goddesses within the building, one to Vriddhámba, or the 'old goddess,' and the other to Bálámba, 'the young goddess.' The story accounting for this peculiarity says that when Sundara, the poet-saint, came to the place he wearied of its ancient air; everything in it was called 'old'—the town, the hill, the god, and the goddess—and he went away without singing any of his usual hymns in praise of the shrine. He had not gone far when the god, in the shape of a man of the Védan caste, stopped him and robbed him of all that he possessed. He returned to the town and on his arrival found that the god had just then moved a certain pious individual to set up an image of Bálámba. Repentant, he chanted verses in praise of the place and its deity and went his way. The spot where he is supposed to have been robbed lies on the road to Pennádam about a mile and a half outside the town and is marked by a Védapparkóvil, or 'Védan's temple.' A festival in the month of Tai also keeps the event in memory.

MANUAL

OF THE

SOUTH ARCOT DISTRICT.

COMPILED BY
J. H. GARSTIN, M.C.S.,
COLLECTOR OF SOUTH ARCOT.

MADRAS:
PRINTED AT THE LAWRENCE ASYLUM PRESS, BY W. H. MOORE.

1878.

her and was rewarded by the gift of all the others, with which, under the direction of Siva, he was enabled to build the pagoda and lay the foundation of the present town.

Within the pagoda there is a tree, beneath which Vibhajit is said to have placed his jewels, which is also alleged to be the representation on earth of the celestial "Kalpa Vriksha" which grants to its suitors all they wish for.

During the building of the pagoda the workmen used to approach the tree daily to get their wages, when there dropped from its branches into each man's hands exactly what he had earned which was received without a murmur.

A great annual festival is held at Vridachellam in the month of Mási. To bathe in holy waters in that month is considered to expiate all sins, and the day of the full moon in Mási is held peculiarly sacred on this account. At Vridachellam the bathing is done in a pool called "Puniya Maduvu" (pool of sanctity) to which the idol is carried. To bathe in it at that time is considered as of greater sanctity than bathing in the Ganges at Benares. Opportunity is taken by Sudras of the "Mási Magam" day to have the obsequies of relatives who have died during the year performed and to have a light placed on the top of the Gopuram which is supposed to benefit the souls of the departed. It is a common sight on "Mási Magam" day to see hundreds of females weeping for their deceased relations on the banks of the Manimukta at Vridachellam.

The Vridachellam pagoda was once a fortified post on the road between Cuddalore and Trichinopoly. Lord Pigot and Lord Clive, when the former was Deputy Governor of Fort Saint David and the latter a writer in the Company's service, narrowly escaped being killed or taken prisoners by some of the native cavalry in the employ of the French on their way back to Fort Saint David after relieving the garrison of Vridachellam in 1751.

நன்றியுரை

போற்றுதலுக்கும் வணக்கத்திற்கும் உரிய என் பெற்றோர், குரு மற்றும் நான் வணங்கும் தெய்வங்களுக்கு என் நன்றியை முதலில் தெரிவித்து மகிழ்கிறேன்.

என்னை பணியமர்த்தி வாழ்வுயர வழி செய்த தொழிலதிபர்கள் ஸ்ரீ பி.ஆர். ராமசுப்பிரமணிய ராஜா (ராம்கோ), ஸ்ரீ மகேஷ் கிருஷ்ணா (டி.வி.எஸ்) மற்றும் ஸ்ரீ.வீ. சிதம்பரம் (இந்தியா ரேடியேட்டர்ஸ்) ஆகியோருக்கு என் நன்றியை தெரிவித்து வணங்குகிறேன்.

இந்நூலினை புத்தக வடிவில் கொண்டுவர நிதி வழங்கியமைக்கு ராம்கோ குரூப் நிறுவனங்களின் சேர்மன் ஸ்ரீ பி.ஆர். வெங்கட்ராம ராஜா அவர்களுக்கும் தலைமை நிர்வாக அதிகாரி ஸ்ரீ ஏ.வி. தர்மகிருஷ்ணன் அவர்களுக்கும் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலினை எழுத என்னை ஊக்கப்படுத்தி உதவிய என் நண்பர்கள் மற்றும் குடும்பத்தார்கள் அனைவருக்கும் எனது நன்றியை தெரிவித்து மகிழ்கிறேன்.இவர்களுள் விருத்தாசலம் ஸ்ரீமதி கோமதி, ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியை அவர்கள், பள்ளித்தோழர்கள் ஸ்ரீ சாரங்கன் மற்றும் ஸ்ரீ பரமசிவம், வயலூர் ஸ்ரீபூமலை ஆகியோரை நான் தனியே குறிப்பிட கடமைப்பட்டுள்ளேன்.

சென்னை டிவிஎஸ் குழுமத்தை சேர்ந்த சுந்தரம் கிளேட்டன் நிறுவனத்தில் மனித வளத்துறையில் பணியாற்றி ஓய்வு பெற்ற என் நண்பர் ஸ்ரீ சங்கர தயாநிதி அவர்கள் இந் நூலின் மூல உரையினை கணினியில் தட்டச்சு செய்து ஆற்றிய பணிகள் பாராட்டுக்கும் நன்றிக்கும் உரியன.

தங்களுடைய பணிச்சுமைக்கும் இடையே இந் நூலினை படித்து இந்நூலுக்கு அணிந்துரை தந்து பாராட்டியருளிய சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி மேன்மைமிகு நீதியரசர் ஸ்ரீ ஜி. ஆர். சுவாமிநாதன் அவர்களுக்கும், வடலூர்-மேட்டுக்குப்பம் ராமலிங்க வள்ளலார் சர்வதேச தரும பரிபாலன அறக்கட்டளையின் நிறுவனர் தவத்திரு கோவை சிவப்பிரகாச சுவாமிகள் அவர்களுக்கும், ராம்கோ சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் கம்பெனி செகரட்டரி கு.செல்வநாயகம் அவர்களுக்கும் மகிழ்வுடன் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். சாமானியனாகிய என்னை அடியாராக உயர்த்திப் பாராட்டி உள்ள விருத்தாசலம் ஜெயின் ஜுவல்லரி உரிமையாளர் ஸ்ரீ அகர்சந்த் அவர்களுக்கும் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலினை சிறப்பாக வடிவமைத்து அளித்த M.M. Graphics Fine Art Offset Printers, Sivakasi அச்சக உரிமையாளர் மற்றும் பணியாளர்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

என்றும் யாவருக்கும் சிவனருள் வேண்டித் தொழும்

தி. மீனாட்சி சுந்தரம்

ஆக்கியோன் அறிமுகம்

விருத்தாசலத்தை பூர்வீகமாகக் கொண்ட சைவ வேளாளர் குலத்தில் தோன்றிய திரு. வி.சோ. திருநாவுக்கரசு பிள்ளை - திருமதி வி.தி. இராஜம்மாள் தம்பதியருக்கு 7வது குழந்தையாக, திருஞான சம்பந்தர் அவதரித்த சீர்காழியில் பிறந்தவர் தி.மீனாட்சிசுந்தரம். திரு. வி.சோ. திருநாவுக்கரசு பிள்ளை அவர்கள், தமிழ்நாடு அரசில் தொழிலாளர் ஆய்வாளராக பணியாற்றியவர்.


மெட்ராஸ் மாகாண அரசில், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தாசில்தார் ஆக பணிபுரிந்த திரு. வி.ச.சோமசுந்தரம் பிள்ளை - திருமதி பொன்னம்மாள் ஆகியோர் பாட்டனார் மற்றும் பாட்டி ஆவர்.

நகரின் கிழக்கே சுமார் 5 கி.மீ. தொலைவில் கோ.மாவிடந்தல் என்னும் கிராமத்தில் கோயில் கொண்டுள்ள ‘அருள்மிகு கரும்பாயிரங்கொண்ட அய்யனார்‘ இவர்களது குல தெய்வம் ஆகும்.

விருத்தாசலம் அய்யனார் கோயில் வீதியில் உள்ள அப்போதைய பஞ்சாயத்து யூனியன் தொடக்கப் பள்ளியிலும், விருத்தாசலம் அரசு ஆண்கள் உயர்நிலைப் பள்ளியிலும் பள்ளிப் படிப்பை முடித்தார். சென்னை பச்சையப்பன் கல்லூரியில் ஆங்கில இலக்கியத்தில் ‘இளங்கலை பட்டமும்’. சென்னைப் பல்கலைக் கழகத்தில் ‘பொது நிர்வாகம்’ பாடத்தில் முதுகலைப் பட்டமும், சென்னை உற்பத்தி திறன் குழுவில் ‘பணியாளர் மேலாண்மை, தொழில் உறவு மற்றும் தொழிலாளர் நலம்’ என்னும் ‘முதுகலைப் பட்டயமும்’ பெற்றார்.

சென்னையில் இந்தியா ரேடியேட்டர்ஸ், ராஜபாளையம் ராம்கோ குரூப், சென்னையில் டி.வி.எஸ். குருப் ஆகிய தொழில் நிறுவனங்களில் மனித வளம் மற்றும் தொழிலாளர்கள் உறவு துறையின் தலைமைப் பொறுப்பேற்று சுமார் 40 ஆண்டுகள் பணியாற்றினார். தற்சமயம் சென்னையில் ஓரிரு தொழில் நிறுவனங்களுக்கு தொழில் உறவு மற்றும் மனித வள ஆலோசகராக உள்ளார். இவரது வயது 70. உடன்பிறந்த நான்கு சகோதரர்கள் மற்றும் மூன்று சகோதரிகளில், தற்சமயம் 3 சகோதரர்களும் ஒரு சகோதரியும் மட்டும் உள்ளனர். இவர், இவரது துணைவியார், ஒரே புதல்வன், மருமகள் மற்றும் ஒரு பேரன் ஆகியோருடன் தற்சமயம் சென்னை, அம்பத்தூரில் வசித்து வருகிறார்.

ஸ்ரீ வி.எஸ். சோமசுந்தரம் பிள்ளை அவர்களின் வம்ச விருட்க்ஷம்
(FAMILY TREE)



நாம் அறியாத பல புதிய சரித்திர
தகவல்களை ஆதாரங்களுடன் தந்த

மீனாட்சி சுந்தரம்

அடியார் அவர்களுக்கு நன்றிகள் பல

MA
SINCE 1976



ஸ்ரீ ஜெயின் ஜுவல்லரி

விருத்தாசலம்

✆ 04143 230751


அதிக வலிமையான சிமெண்ட்!
விரிசல் இல்லா கான்கிரீட்!
RAMCO SUPERCRETE
RAMCO
SUPERCRETE
CEMENT
RAMCO
ராம்கோ
சூப்பர்கிரீட்
சிமெண்ட்
1800 425 5700
(காலை 9.00 - இரவு 9.00)
FH 7179-2019